DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1331 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 8, 2021

# கனடிய பிரதமரின் 'மன்னிப்புக் கேட்கின்றேன்' என்ற வார்த்தைகள் தொடர்பாக நாம் அக்கறை செலுத்தமாட்டோம்



## கனடிய மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் அறிவிப்பு

"எமது மக்கள் சார்ந்த ஒரு விடயத்தின் தவறிழைத்த கனடியப் பிரதமரின் மன்னிப்பு வார்த்தைகள் எமது மனநிலையை மாற்றிவிடக் கூடியன அல்ல. மாறாக நிறுவனமயப்படுத்தப் பட்ட மற்றும் பரவலான மாற்றத்திற்கு வழிவகுக்காத எவ்விதமான மன்னிப்புகளில் நாங்கள் ஆர்வத்தையும் காட்டவில்லை"

இவ்வாறு கனடிய மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

கனடிய மூத்த குடிகள் சார்ந்த இளையவர்கள் கல்வி கற்ற வதிவிடப் பாடசாலைகளிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டு பின்னர் அந்தக் குழந்தைகளில் உடல் எச்சங்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நிலையில் அவர்களின் மரணங்களுக்காக கனடா எங்கும் மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் கடும் எதிர்ப்புக்களை வெளிக்காட்டின.

*(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)*

# "சமூகப் பார்வையும் முயற்சியும் வாசிப்புப் பழக்கமும் இருந்தால் எவரும் எழுத்தாளராகி விடலாம்"

## கனடாவில் நடைபெற்ற தமிழ்நாடு "இனிய நந்தவனம்" அறிமுக விழாவில் "உதயன்" பிரதம ஆசிரியர் தெரிவிப்பு

"நாம் அனைவரும் வாழும் சமுதாயத்தில் பல விடயங்கள் ஒவ்வொரு நிமிடத்திற்கும் இடம் பெற்று வருகின்றன. அவற்றை படைப்புக்களாக தருவதற்கு சமூகப் பார்வையும் முயற்சியும் வாசிப்புப் பழக்கமும் தேவை. அவ்வாறு இவை மூன்றும் இருந்தால் எவரும் கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகியும் வந்துவிடலாம்". இவ்வாறு கனடாவில் நடைபெற்ற தமிழ்நாடு "இனிய நந்தவனம்" அறிமுக விழாவில் "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை 2021-10-01 அன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியிட்ட இனிய நந்தவனம்செப்டம்பர் மாத கனடா சிறப்பிதழ் அறிமுக விழா ரொறன்ரோவில் உள்ள பைரவி மியூசிக் அக்கடமி கலையகத்தில் மாலை 7:00 மணியளவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. *(தொடர்ச்சி உள்ளே 18ம் பக்கத்தில்)*




DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available


வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM


INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX




# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## பெண்களுக்கான வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

## காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.
அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.

**Call: (416) 701-0003**

## CUSTODIAN WANTED

Uxbridge நகரத்தில் அமைந்துள்ள Uxbridge Montessori School பாடசாலைக்கு custodian பதவிக்கு ஒருவர் தேவை.
இது ஒரு full-time, permanent வேலை வாய்ப்பு ஆகும்.
பாடசாலையின் உட்புற வெளிப்புற பகுதிகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும். அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். Pickering, Oshawa, Stouffville, Ajax ஆகிய நகரங்களில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்முள்ளவர்கள் **Natkunam** (416) 564-5884 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.
**Email resume to: ums2@sympatico.ca**

## Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை

**Keele & Hwy 7** சந்திப்புக்கு அருகில் உள்ள நிறுவனத்தில் **Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
**Full-time:** இரவு **11.00 PM** தொடக்கம் காலை **7.00 AM** வரை

**தொடர்புகளுக்கு**
**சங்கர்:**
**(416) 305-0264**

## House for Sale in Srilanka

**Sale of house on 9 perches land close to Sri Jayawardenapura Hospital at Vijithapura, Kotte.**

**Serious buyers only.**
**Please Contact:**
**hummingbirdnov2018@gmail.com**

## வேலை வாய்ப்பு

**Scarborough** நகரில் **Markham / Ellesmere** சந்திப்புக்கு அருகில் **Manufacturing Workers** மற்றும் **Forklift Driver** வேலைகளுக்கு ஆட்கள் தேவை. **Full-time, Morning Shifts.**

**Looking for Workers and Forklift Driver to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for a long-term position.**
தொடர்புகளுக்கு: **ESSAN**
**(647) 993-2872**

## HELP WANTED

**411 College St, Toronto ON** ல் அமைந்துள்ள **Toby's Pub and Eatery** என்னும் உணவகத்திற்கு **Kitchen helper** தேவை.

**Day time/night time**
**Full time/part time.**
**Please call after 12 pm.**
**416-879-3768**

## Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call: 416-706-8160**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் விடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
**RAJAN: 416-464-2415**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# யதார்த்தத்திற்கு முரணான புகழ்ச்சி வார்த்தைகள் இலங்கையை பாதாளம் நோக்கி தள்ளுகின்றன

இலங்கை அரசும் இராணுவமும் இணைந்து அரங்கேற்றிய இனப்படுகொலை விவகாரத்தை மறுதலிப்பதும் மறப்பதுமான நடவடிக்கைகளை இந்தியா தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது என்பதை நேரடியாக காண்பதற்கும் செவிகளால் கேட்பதற்கும் தற்போது பல சம்பவங்கள் சாட்கியாக இருந்து வருகின்றன.

அதுவும் இலங்கையின் தற்போதைய பிரதமரும் இனப்படுகொலை இடம் பெற்ற 2009ம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகித்தவருமான மகிந்த ராஜபக்ச தற்போது இந்தியாவின் பல தரப்பட்ட தலைவர்களாலும் புகழாரம் சூட்டப்படுகின்றவராக காணப்படுவது தமிழ் மக்களுக்கு நன்மை தருவதாகவோ அன்றி சாந்தப்படுத்துவதாகவோ காணப்படுவதாக இல்லை என்பதை சாதாரண பொதுமகனும் அறிந்து கொள்ளும் வகையில் அரசியல் நகவுகளும் உரையாடல்களும் இடம் பெறுவதை நாம் காணக்கூடியதாகவே உள்ளுத.

அண்மையில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் ˙ அவர்கள் ஜனதிபாதி கோட்டாபாயவைச் சந்தித்த போது. இந்தியாவை அச்சுறுத்துவதற்காக இலங்கையை எவரும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று இந்தியாவின் பிரதிநிதியாக தன்னோடு உரையாற்றிய இந்திய வெளிவி-வகார செயலாளரிடம் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, அண்மையில் இலங்கையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் நாட்டின் பிரதமரும் தனது சகோதரருமான மகிந்த ராஜபக்ச அமர்ந்திருந்த இடத்தில் ஏனைய அமைச்சர்கள் பலர் காணப்பட்ட அந்த மண்டபத்திற்கு உள்ளே உரையாற்றிய ஜனதிபாதி கோட்டாபாய தன்னை விட தனது சகோதரர் மகிந்தா சிறந்த அரசியல் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இவ்வாறான புகழ்ச்சி வார்த்தைகள் தன்னைச் சுற்றிச் சுற்றி அலை வீசுவதை பார்க்கும் மகிந்தாவிற்கு அதனைக் கொண்டாடக் கூடிய மனநி-லை என்று கொழும்பு செய்தியாளர்கள் வட்டாரங்கள் தெரிவித்த வண்ணம் உள்ளன.

அதற்கு காரணம் அவருக்கு ஏற்பட்டுள்ள உடல் நிலை சார்ந்த சரிவே என்றும் இரகசியக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும். பொருளாதாரத் தளர்வுகள் மற்றும் தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் கொந்தளித்து நிற்கும் இலங்கையின் எதிர்காலம் ஆரோக்கியமாக இருக்காது என்பதையும் தெரிவிக்கின்ற இந்த வேளையில் அடிமட்ட மக்களும் விவசாய தொழிலாள உழைக்கும் மக்களே பாதிக்கப்படுவார்கள் என்பதை நாம் உணரவேண்டும். இவ்வாறான நிலை தோன்றும் போது தமிழ் மக்கள் கூட தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கு உள்ளாவார்கள் என்பதையும் நாம் எதிர்பார்க்கத்தான் வேண்டும்.

# தனக்கு அரசியல் அனுபவம் குறைவு என்பதை பகிரங்கமாக குறிப்பிட் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச



தனக்கு அரசியல் அனுபவம் குறைவு என்பதால் பிரதமர் மகிந்த ராஜபக்ச அதிகளவு ஈடுபாட்டை காண்பிக்கவேண்டும் எனஇலங்கையின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.என செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இலங்கையின் உத்தியோகபூர்வமான அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தபாய இதனை தெரிவித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீண்டகால வரலாற்றை கொண்ட அரசியல் குடும்ப உறுப்பினராக தான் காணப்பட்டாலும் தனக்கு தனிப்பட்ட அரசியல் அனுபவம் எதுவுமில்லை என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பலவருட அரசியல் அனுபவத்தை கொண் நாட்டின் பிரதமரிடமிருந்து அதிக செயற்பாடுகளை தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கோத்தபாய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியான பின்னரே பல அனுபவங்களை உள்வாங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா






யாழ்ப்பாண பல்கலைக் கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று வியாழக்கிழமை நிகழ்நிலையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக் கழகத்தின் யூரியூப் மற்றும் முகப் புத்தக பக்கங்கங்களினூடாக நேரலையில் ஒளி பரப்பப்பட்டது. இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் சுமார் ஆயிரத்து 700 பேரின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டு பலருக்கு நேரடியாக வழங்கப்பெற்றன.

இவ்வருடத்திற்குரிய பட்டமளிப்பு விழாவை வெற்றிகரமாக நடத்த உதவிய பல்கலைக் கழகத்தின் பதிவாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பீடங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா நன்றி தெரிவித்தார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் பொலிஸாரினால் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு






உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் தலைமையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வெள்ளிக்கிழமை (1) கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சியின் பங்குபற்றுதலுடன் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ ஜெதிலகவினால் வெள்ளிக்கிழமை (1) குறித்த கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் கீரி அன்பு சகோதரர் இல்லம் மற்றும் மன்னார் மெதடிஸ் சிறுவர் இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு மேற்படி கற்றல் உபகரணங்கள் அடங்கிய பரிசு பொருட்கள் கையளிக்கப்பட்டன.

**- மன்னார் நிருபர்**



# கல்முனை பிரதேசத்தின் கடற்கரைப்பள்ளி வீதியில் நான்கு கால்களுடன் பிறந்த கோழிக் குஞ்சு

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தின் கடற்கரைப்பள்ளி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நான்கு கால்களுடன் பிறந்த கோழி குஞ்சு அனைவரது கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

அடைகாக்க வைக்கப்பட்ட முட்டைகளிலிருந்து ஏழு கோழிக்குஞ்சுகள் பிறந்துள்ள நிலையில் அதில் ஒன்றே இவ்வாறு பிறந்துள்ளது என வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இக்கோழிக் குஞ்சைப் பார்வையிட அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் வருகை தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய வெளியுறவு செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்!



இந்தியாவின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தார்.

இதன்போது யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை சுற்றி பார்வையிட்டார். அவருடன் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் வருகை தந்தார்.

அவரது வருகையை முன்னிட்டு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய வளாகத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

# மன்னாரில் பொலிஸ் தடுப்புக் காவலில் இளைஞன் உயிரிழப்பு — மனித உரிமை ஆணைக்குழு விசாரணை




மன்னாரில் பொலிஸ் தடுப்பு காவலில் இருந்த இளைஞனின் உயிரிழப்பு தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இருவரில், சம்சுதீன் மொகமட் றம்சான் என்பவர், சுகவீனம் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதித்த வேளையில் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, “கடந்த 01.10.2021 அன்று இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கைதுடன் தொடர்புடைய விடயங்கள், மன்னார் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில், பிரேத பரிசோதனை அறிக்கை பெறுவதற்கான வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன், கைது செய்யப்பட்ட மற்றொரு நபரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன” என தெரிவித்தார்.

குறித்த முறைப்பாடு 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் சாந்திபுரம் பகுதியில் வீடுகளுக்குள் மழைநீர் — முறைப்பாடு தெரிவிக்க வந்த மக்களை அவமதித்த பொறியியலாளர்





கடந்த சில தினங்களாக மன்னார் நகர் பகுதியில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் அண்மையில் சாந்திபுரம் பகுதியில் மன்னார் நகர சபைக்கு சொந்தமான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் காபட் வீதி களாக மாற்றப்பட்ட நிலையில் வீதிகளில் உரிய வடிகால் அமைப்பு கல்வெட்டு மற்றும் நீர் வழிந்தோட கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளாது வீதி அமைத்துள்ளனர். இதன் காரணமாக மழை நீர் வலிந்து கடலுடன் கலக்க முடியாத நிலையில் மக்களின் வீடுகளுக்குள் புகுந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக இன்று திங்கட்கிழமை காலை நகர சபை தலைவர் மற்றும் செயலாளருக்கு தெரியப்படுத்திய நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்திற்கு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முக கவசங்கள் அணிந்து முறையிடச் சென்றனர்.

மக்கள் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்திற்கு சென்ற நிலையில் அங்கு பணிபுரியும் பொறியலாளர் பாதிக்கப்பட்ட மக்களை மரியாதை குறைவாக நடத்தியதுடன் அலுவலகத்தை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளார்.

அத்துடன் தற்போது எந்த வீதி செயற்பாடுகளும் செய்ய முடியாது எனவும் இதற்கு மேல் இங்கு நின்றால் பொலிஸில் பிடித்து கொடுத்து விடுவேன் என்றும் அச்சுறுத்தி யுள்ளார். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் நகர பிரதேச செயலாளரிடம் குறித்த விடயம் தொடர்பாக நேரடியாக முறையிட்டதை தொடர்ந்து நீர் வழிந்தோடக் கூடிய தற்காலிக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்கள் பிரச்சினையை உரிய முறையில் தீர்க்காது மக்களை அவமரியாதைக்கு உட்படுத்திய மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் மீது மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொரோனாவில் இருந்து குணமடைந்தோருக்கு நீண்டகால நோய் அறிகுறிகள்!




கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த பெண்களுக்கு, மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் சில பாதிப்புகளை கொண்ட நீண்ட கால நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மரபணு உயிரியல் மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இந்த நோய் அறிகுறிகள் ஆண்களுக்கும் ஏற்படலாம். இந்த நோய் அறிகுறிகளில், மன அழுத்தம் சுமார் 15 வீதம் உயர்வாக காணப்படும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இதுபோன்ற 9 அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. இயல்பற்ற சுவாசம் 8%
2. வயிறு சம்பந்தப்பட்ட நோய் அறிகுறிகள் 8%
3. மன அழுத்தம் 15%
4. மார்பு மற்றும் தொண்டை வலி 6%
5. அறிவாற்றல் பிரச்சினைகள் 4%
6. சோர்வு 5%
7. தலைவலி 5%
8. தசை தொடர்பான வலி 5% மற்றும்
9. பிற உபாதைகள் 7%

ஆகிய அறிகுறிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நாள்பட்ட கொவிட் நோய் அறிகுறிகள் நவீன மருத்துவத்திற்கு ஒரு சவாலாக இருக்கும் என்று விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர ட்விட்டர் செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் திட்டங்கள் ஆரம்பம்



நயினாதீவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மக்கள் பாவனைக்காக கையளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்தில் இதுவரை காணப்பட்ட குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் யாழ். நகர நீர் குழாய் அமைப்பு மற்றும் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை செவ்வாய்க்கிழமை முற்பகல் ஆரம்பித்து வைத்தார்.

நயினாதீவில் இடம்பெற்ற நிகழ்வில் அலரி மாளிகையில் இருந்து இணைய வழியில் கலந்து கொண்ட பிரதமர், மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக தாளை-யடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப் பணிகள் மற்றும் யாழ் நகர நீர் வழங்கலுக்கான நீர் குழாய் அமைக்கும் நடவடிக்கை என்பவற்றை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் ஊடாக 186 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பாதுகாப்பான குழாய் நீரை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதுடன் மத்திய அரசாங்கத்தின் நிதி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஊடாக உயர் தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்துடன் கடல் நீரை சுத்தமான குடிநீராக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டம் மற்றும் யாழ் நகர நீர் வழங்கல் திட்டத்தின் பாதுகாப்பான நீர் குழாய்களை பொருத்துவதன் மூலம் சுமார் மூன்று இலட்சம் மக்கள் நன்மையடைவதுடன் அத்திட்டங்களை 2023ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.










இப்புதிய வேலைத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் நகரம் மற்றும் அதனை அண்மித்து வாழும் சுமார் பன்னிரெண்டு இலட்சம் மக்களுக்கு குழாய் மூலமான பாதுகாப்பான நீரை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்பது விசேட அம்சமாகும். மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட நயினாதீவு கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கான நீர் விநியோகம் முறைப்படுத்தப்படுவதுடன் இதன்மூலம் சுமார் 5000 குடும்பங்கள் நேரடியாக நன்மையடைவர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் கென்ச்சி யொகுஹாமா அவர்கள் ஸூம் தொழில்நுட்பம் ஊடாக இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு இத்திட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்தார். நயினாதீவு விகாராதிபதி வணக்கத்திற்குரிய நவந்தகல பதுமகித்திதிஸ்ஸ தேரர், நயினாதீவு அம்மன் ஆலய பிரதான குருக்கள் சாமதேவ குருக்கள் உள்ளிட்ட சமய தலைவர்கள் மற்றும் யாழ். மக்கள் காணொளி தொழில்நுட்பம் ஊடாக ஜனாதிபதி, கௌரவ பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்திற்கு இத்திட்டம் ஊடாக கிடைக்கும் நன்மை குறித்து தங்களது நன்றிகளை தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படும் 9.6 சதவீதமான பாதுகாப்பான நீர் குழாய் அமைப்பை 2025ஆம் ஆண்டளவில் 56.9 சதவீ-தமாக உயர்த்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை திட்டமிட்டுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ வாசுதேவ நாணாயக்கார அவர்கள், "எவரையும் தோற்கடிப்பது அன்றி யுத்தத்தை நிறை-வு செய்வதே கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அன்றைய எதிர்பார்ப்பாக காணப்பட்டது. எவ்வளவு செலவானாலும் யுத்தத்தினால் இழந்த தேவைகளை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ பிரதமர் அவர்கள் எமக்கு தொடர்ந்து அறிவுறுத்தினார். அதிகம் செலவாகும் என அமைச்சரவையில் குறிப்பிட்ட போது எவ்வளவு செலவானாலும் இந்த நீர் வழங்கல் திட்டத்தை நாம் அமைக்க வேண்டும் என கௌரவ பிரதமர் அவர்கள் கூறினார். இவை அனைத்தும் வடக்கு மக்களுக்காகவே ஆகும். இந்த பாய்ந்தோடும் நீருடன் கௌரவ பிரதமரின் இதயத்தின் கருணையும், நல்லிணக்கமும் பாய்ந்தோடுகிறது என கூற வேண்டும்.

நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ வாசுதேவ நாணாயக்கார, கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்து, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் திரு. நிசாந்த ரணதுங்க உள்ளிட்ட பிரதிநி-திகள் அலரி மாளிகையில் இருந்து காணொளி தொழில்நுட்பம் ஊடாக நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நயினாதீவு நீர் சுத்திகரிப்பு நிலைய திறப்பு விழாவில் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணை தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், வட மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணம் – காரைக்கால் கப்பல் சேவைக்கு நடவடிக்கை!



இந்தியாவின் காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் அனுமதியினை எதிர்பார்த்துள்ளதாக புதுவை மாநிலத்தின் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். காரைக்காலுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ஏற்கனவே கப்பல் போக்குவரத்து இடம்பெற்றது.

அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பில் இரண்டு நாடுகளினதும் தூதுவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இடையில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. வெளியுறவுத்துறையின் சில அனுமதிகள் பெற வேண்டியுள்ளது.

குறித்த அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர், இலங்கைக்கான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் எனப் புதுவை ஆளுநர் தமிழிசை சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள் World News

# அவுஸ்த்திரேலிய அரசு சுற்றுலாப்பயணிகளை தவிர்த்து வெளிநாட்டு தொழில் வல்லுனர்கள் மாணவர்கள் ஆகியோரை வரவேற்கின்றது என்கிறார் பிரதமர் ஸ்கொட் மொரிசன்



அவுஸ்த்திரேலியாவில் கடந்த ஜுன் மாதம் சிட்னி நகரத்தில் ஆரம்பமான வேகமாகப் பரவக்கூடிய டெல்டா கொரோ-னா திரிபு இன்னும் அந்நாட்டில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றமை காரணமாக. அவுஸ்திரேலியா 2022ஆம் ஆண்டு வரை சர்வதேச சுற்றுலாப்பயணிகளை நாட்டிற்குள் வரவேற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.

எனினும் தொழில் வல்லுனர்களான. வெளிநாட்டு ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்று அந்நாட்டுப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் நேற்றுத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய மக்கள் தொகையில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 வீதத்தினர் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டால் எல்லை தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று மொரிசன் கூறினார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் தடுப்பூசிகள் போடும் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. தடுப்பூசி போட்டுக்கொண்ட குடிமக்களும்

நிரந்தரவாசிகளும் அடுத்த மாதம் முதல் வெளிநாடுகளுக்குச் சென்று வர, அவுஸ்திரேலியா அண்மையில் அனுமதி கொடுத்தது வெளிநாட்டு மாணவர்களின் வருகை இல்லாமல் அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியா செய்திகள் India News

# தமிழகத்தில் அதிகரித்துள்ள கொரோனா மரணங்கள்

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 3.39 கோடியே ஒரு லட்சத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது. 4.50 லட்சத்துக்கும் மேற்பட்டோரை உயிரிழக்க செய்துள்ளது இந்த கொடிய வகை வைரஸ். இந்நிலையில் தமிழக சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெ-ளிநாடு மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகம் வந்தவர்கள் உட்பட 1,432 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 839 பேர் ஆண்கள், 593 பேர் பெண்கள். இதன்மூலம் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 26 லட்சத்து 72 ஆயிரத்து 843 ஆக அதிகரித்துள்ளது. சிகிச்சை பெற்றுவருவோரின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 637 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் 304 பரி-சோதனை மையங்கள் உள்ளன.

இன்று 25 பேர் உயிரிழந்துள்ளார். 4 பேர் தனியார் மருத்துவமனைகளிலும், 21 பேர் அரசு மருத்துவமனைகளிலும் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் கொ-ரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 35 ஆயிரத்து 707 ஆக அதிகரித்துள்ளது. இன்று 1,519 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த நிலையில் இதுவரை குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 26 லட்சத்து 20 ஆயிரத்து 499 ஆக அதிகரித்துள்ளது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தமிழ்நாட்டின் புதிய ஆளுனரான ரவி அவர்களை தமிழ்நாடு தகவல் ஆணையாளர் பிரதாப் குமார் மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்



தமிழ்நாட்டின் புதிய ஆளுனராக நியமனம் செய்யப்பட்டுள்ள ரவி அவர்களை அண்மையில் தமிழ்நாடு தகவல் ஆணையாளர் பிரதாப் குமார் அவர்கள் மரியாதையின் நிமித்தம் சந்தித்து நினைவுப் பரிசு வழங்கிய பின்னர் அவரோடு சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்தார்.

இந்தச் சந்திப்பு தமிழ்நாடு ஆளுனர் மாளிகையில் இடம்பெற்றது.

தமிழ்நாடு தகவல் ஆணையா-ளர் பிரதாப் குமார் அவர்கள் 2019ம் ஆண்டு நடைபெற்ற உதயன்-2019 பல்சுவைக் கலைவிழாவிற்கு பிர-தம விருந்தினராக அழைக்கப்பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றைய தினம் புதன் கிழமை 6ம் திகதி காலை திரு பிரதாப் குமார் அவர்களுக்கு "உதயன்" பத்திரிகையின் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ், கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் பிரதியொன்றை வழங்கினார்.

அனைத்துப் படங்களும் இங்கு காணப்படுகின்றன.



# தமிழ் மக்களையும் தமிழர் தாயகம் என்ற எண்ணத்தையும் இந்தியா கைவிட்டது உண்மையான அரசியல் நிலவரம்

கடந்த முப்பத்தி நான்கு ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து வரும் ஒவ்வொரு பிரதிநிதியும், கடந்த வாரம் சென்று திரும்பிய வெளிநாட்டமைச்சர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவும் 13 வது திருத்தம் என்று கூறுகின்றனர். ஆனால் தற்போதைய அரசி-யல் சூழ்நிலையில் எது இடம் பெறுகின்றது என்றால் இந்தியாவின் பக்கம் இருந்து எதுவும் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

தமிழர்கள் இலங்கை ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேறு வழிகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்க வேண்டிய நேரம் இது. இந்தியா வெளிப்படையாக தமிழ் மக்களையும் தமிழர் தாயகம் என்ற எண்ணத்தையும் கைவிட்டது. தமிழர்களின் அரசியல் தேவைகளுக்கு உதவ அல்லது நெருக்கடியை தீர்க்க உதவும் வலுவான தலைமை இந்தியாவிடம் இல்லை என்பதை இது காட்டுகிறது. இதுவே உண்மையானதும் இறுதியானதுமான இலங்கைத் தமிழர்களின் அரசியல் நிலவரம் என்று கூறலாம்.

1987-ல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13-வது திருத்தம் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் உட்பட ஒவ்வொரு தமிழ் போராளிகளும் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். இந்தியா மற்றும் இலங்கை இணை நன்கொடையாளர் நாடுகள் முழுமையாக 13 ஐ செயல்படுத்துவதாக உறுதியளித்தன.

போர் முடிவுக்கு வந்தவுடன் 13 பிளஸ் அமல்படுத்தப்படும் என்று சோ-னியா காந்தி 2009 தேர்தல் பிரச்சாரத்தின்போது தமிழ்நாட்டில் தமிழர்களிடம் கூறினார். UNHRC தீர்மானம் கூட 13 வது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. அனைத்து இந்திய தலைவர்களும் "13 வது திருத்தம்" என்ற வார்த்தைகளை சொன்னார்கள்.

முதல்வர் கருணாநிதி, அமைச்சர் சிதம்பரம், இந்திய வெளியுறவு அமைச்சர்கள் யஷ்வந்த் சின்ஹா, பிரணாப் முகர்ஜி, சுஷ்மா சுவராஜ், சுப்ரமணியம் ஜெய்சங்கர், ஜே. என். தீட்சித், எம்.கே. நாராயணன், மற்றும் சிவசங்கர் மேனன், மற்றும் ராஜீவ் காந்தி முதல் இந்தியாவின் ஒவ்வொரு பிரதமரும் - வாஜ்பாய், மம்மன் சிங் மற்றும் நரேந்திர மோடி - அனைவரும் இந்த வெற்று மந்திரம் "13 வது திருத்தம்" என்ற வார்த்தைகளை அழைத்தனர்.

தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு சிறிதும் கூட எதுவும் நடைமுறைப்படுத்தப்படாததால், இது சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியில் இயங்கும் நகைச்சுவையாக மாறியுள்ளது.

இந்த 13 வது திருத்தம் என்று அழைக்கப்படுவது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பதிப்பாக இலங்கை அரசால் உருவாக்கப்பட்டது. தமிழர்கள் மீ-தான திருத்தத்தை இந்தியா கட்டாயப்படுத்தியது. அது தமிழர்களிடமிருந்து எந்த ஆசீர்வாதத்தையும் பெறவில்லை. உண்மையில், 1987 இல் தமிழர் தலைவர் அமிர்தலிங்கமும் அவர்களது கட்சியும் திருத்தத்தை முழுமையாக நிராகரித்தனர்.

இந்தோ-லங்கா ஒப்பந்தம் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாக இருந்ததை அங்கீகரிக்கிறது."

ஆனால் இலங்கை தங்கள் சொந்த கங்காரு நீதிமன்றத்தைப் பயன்படுத்தி, மற்றும் தமிழ் பேசும் மாகாணங்களுக்கிடையில் வடகிழக்கு மாகாணங்களின் மாகாண இறையாண்மையை நிலைநாட்டவும், அவர்களின் பாதுகாப்பைப் பாதுகாக்கவும் நோக்கமாக இருந்த 13 வது திருத்தத்தின் முதல் முக்கிய பகுதி-யை ரத்து செய்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் அனைத்து சமூகங்களின் உடல் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இந்திய அரசு ஒத்துழைக்கும்" என்று கூறுகிறது, ஆனால் இந்தியா 146,000 தமிழர்களின் கொலைகளையும், தமிழர் மீதான பாலியல் தாக்குதலையும், எண்ணற்ற பிற கொடுமைகளையும் தடுக்க ஒருபோதும் முயற்சிக்கவில்லை.

இலங்கை 90,000 தமிழ் பெண்களை விதவைகளாக மாற்றி, 50,000 குழந்தைகளை அனாதைகளாக்கி, 146,000 தமிழர்களை கொன்று குவித்தது, மேலும் 25,000 பேர் காணாமல் ஆகிய போது, இந்தியா எதுவும் செய்யவில்லை,

உண்மையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி எந்தவித தடையும் இன்றி இலங்கையை தமிழர்கள் மேலும் கொலை செய்ய அனுமதிக்க விரும்பினார். ஆனால் ஒபாமா நிர்வாகம் படுகொலைகளை தடுக்க வன்னியில் இருந்து தமிழ் புலிகளை பிரித்தெடுக்க கப்பல்களை அனுப்ப முயன்றது.

13 வது திருத்தம் பற்றி 34 வருட காலியான சொற்பொழிவுகள் மற்றும் வெற்று வாக்குறுதிகள், ஆனால் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

உண்மையில், இலங்கை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறியது மற்றும் அதன் விதிமுறைகளை களைந்து, ஒப்பந்தத்தின் மிக முக்கியமான அம்சத்தை இயற்ற மறுத்து ஒப்பந்தத்தை அவமதித்தது.

விக்னேஸ்வரன் மற்றும் சம்பந்தன் உட்பட ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதியும் தங்களின் விமர்சகர்களை ஒடுக்க "13" பற்றி பேசுகிறார்கள், இந்தியா இலங்கையிலிருந்து இந்தியா என்ன வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள இலங்கையை அச்சுறுத்துவதற்கு "13" ஐ அழைக்கிறது.

"13" என்ற வார்த்தை இலங்கையை மிரட்டவில்லை அல்லது செயல்பட தூண்டவில்லை. இப்போது இந்தியாவின் கொல்லைப்புறத்தில் சீன தனது வீரத்தை காட்டுகிறது. தமிழர்கள் இனி இந்தியாவை நம்ப மாட்டார்கள்.

திரு. சம்பந்தன் "13" என்ற வார்த்தையைச் சொல்லி, திருத்தத்தைப் பற்றி பேசும்போதுதான் இலங்கையில் உள்ள தமிழர்கள் சிரிக்கிறார்கள்.

- அசோகன் -

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் மாகாண பயணத்தடையை மீறி பயணித்த தனியார் பஸ்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு



பயணத்தடையை மீறி மாகாணங்களுக்கு இடையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு பஸ் வண்டிகள் இரண்டு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை சம்மாந்துறை கல்முனை ஊடாக கொழும்பு நோக்கி சட்டவிரோதமாக இரு பஸ்கள் சென்று கொண்டிருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பெரியநீலாவணை இராணுவ காவலரனில் வைத்து புதன்கிழமை(6) இரவு 10 மணியளவில் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன் போது குறித்த இரு வேறு பஸ் வண்டிகளிலும் சுமார் 100க்கும் அதிகமான பயணிகள் இருந்ததுடன் அவ்விடத்திற்கு வருகை தந்த கல்முனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சாந்த விஜயகோன் சுகாதார தரப்பு அதிகாரிகளினால் பயணிகள் அனைவரும் அறிவுறுத்தபட்டு மீண்டும் குறித்த பஸ்களில் அழைத்து செல்லப்பட்டு கல்முனை பொலிஸ் நிலையத்தில் சிறுது நேரம் தடுத்து வைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



மேலும் குறித்த பஸ் வண்டிகளின் சாரதி நடத்துனர்களிடம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தவிர அத்தியாவசிய தேவைக்காக மட்டுமே மாகாணங்களுக்கு இடையிலான பயணங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் மாகாணத்தில் உள்வரும், வெளியேறும் பல நுழை வாயில்களில் கடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தை தொடர அனுமதிக்கப்படுவதாகவும் அவ்வாறு கட்டுப் பாடுகளை மீறி பயணம் செய்பவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.









அத்துடன் மாகாணங்களுக்கு இடையில் பயணத்தடை தொடர்ந்தும் அமுலில் உள்ள நிலையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறி அம்பாறை மாவட்டத்தில் இருந்து இரவு வேளைகளில் குளிருட்டப்பட்ட பல தனியார் பஸ்கள் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.


BIGBOX E Services

We are Hiring !!!

General Labourer
* Candidate must be an Energetic & Efficient Attitude
Work Location : Mississauga - 401 & Dixie

Warehouse Asst. & Delivery Driver
* Candidate Should Possess a Valid G License
Work Location : Scarborough - 401 & Kennedy

Account | Office Asst.
* Having knowledge in Accounts will be an added Advantage
Work Location : Scarborough - Finch & Markham

All are Long Term Positions ! Good Salary !!

அனுபவம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட எண்ணில்
தொடர்பு கொள்ளவும்

+1 647 495 6824
info@bigboxeservices.com

இந்தியா செய்திகள்
India News

# எடப்பாடி அருகே மகனை விஷ ஊசி போட்டு கொன்ற தந்தை



எடப்பாடி அருகே குடைக்காரன் வளவு பகுதியில் கேன்சர் நோயால் அவதிப்பட்டு வந்த மகனே தந்தையே விஷ ஊசி போட்டு கொலை செய்து விட்டதாக வெளியான தகவலை அடுத்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். சேலம் மாவட்டத்தில் எடப்பாடி அடுத்த கொங்கணாபுரம் ஒன்றியம் குடைக்காரன் வளவு பகுதியை சேர்ந்தவர் பெரியசாமி. இவரது மகன் வண்ணத்தமிழ் (14).

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக வண்ணத்தமிழ் சைக்கிள் ஓட்டிய போது கீழே விழுந்து காலில் ஏற்பட்ட காயத்தினால் எழுந்து நடக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் கேன்சர் நோய் வந்து பெரும் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார். இதனால் தூங்காமல் வீட்டில் எப்போதும் சத்தம் போட்டுக் கொண்டே இருந்திருக்கிறார். மகனின் இந்த நிலைமையை கண்டு வேதனையில் இருந்து வந்திருக்கிறார் தந்தை பெரியசாமி. மகன் இப்படி கஷ்டப்படுவதை பார்க்க விரும்பாத அவர் உறவினர் பிரபு என்பவர் மூலமாக விஷ ஊசி போட்டு கொலை செய்திருக்கிறார் என்று தகவல். பரவியது.̇.

இந்த தகவலை அறிந்த கொங்கணாபுரம் போலீசார், பெரியசாமியின் வீட்டிற்கு வந்து சிறுவன் வண்ணத்தமிழின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். அதன்பின்னர் சிறுவனுக்கு விஷ ஊசி தான் பட்டதா? அல்லது இயற்கை மரணம்தானா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தந்தையே மகனை விஷ ஊசி போட்டு கொன்ற சம்பவம் குடைக்காரன் வளவு பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சையையும் ஏற்படுத்தி இருக்கிறது.



# 1,200 ஆண்டுகள் பழைமையான கல் செக்கு மற்றும் பிற்காலத்திய கல்வெட்டுகள் கண்டெடுப்பு

கள்ளக்குறிச்சி அருகேயுள்ள நாகலூரில் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான செக்கு கல்வெட்டு, 940 ஆண்டுகள் பழைமையான சோழர்கால கல்வெட்டு மற்றும் 17-ம் நூற்றாண்டு கல்வெட்டு ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை சேலம் வரலாற்று ஆய்வுமையத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஆய்வாளர்களான விழுப்புரம் வீரராகவன், ஆறகளூர் பொன்.வெங்கடேசன், சங்கீதா ஆகியோர் இணைந்து கண்டறிந்துள்ளனர்.

இதுகுறித்து நம்மிடம் தகவல் பகிர்ந்து கொண்ட ஆறகளூர் பொன். வெங்கடேசன், “தமிழரசன் என்பவர் கொடுத்த தகவலின் பேரில் கள்ளக்குறிச்சி அருகேயுள்ள நாகலூரில் சென்று, அங்கிருந்த சில கல்வெட்டுகளை ஆய்வு மேற்கொண்டோம். பிற்கால பல்லவர் காலத்தைச் சேர்ந்த செக்கு கல்வெட்டு, முதலாம் பராந்தகச் சோழன் கல்வெட்டு மற்றும் தொண்டைமான் காலத்திய கல்வெட்டு இருப்பதை கண்டறிந்தோம். பழங்காலத்தில் மின்சாரம் இல்லாததால் விளக்குகள் எரிப்பதற்கும், சமையலுக்கும் எண்ணெயின் தேவை மிக மிக முக்கியமானதாக இருந்துள்ளது. எண்ணெய் எடுப்பதற்கு கல்லால் ஆகிய சிறு உரல் போன்ற கல்செக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை, கோயில் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டுக்கென செய்து தானமாகத் தரப்பட்டன. செக்கில் எண்ணை ஆட்டுபவர்கள் செக்குக்குக் கூலியாக ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணெயை கோயிலுக்கோ அல்லது அரசுக்கோ செலுத்தியிருப்பர். குறுநில தலைவர்களாக, ஊர் முக்கியஸ்தர்களாக இருக்கும் சிலர் இது போன்ற கல்செக்கை உருவாக்கி தானமாக கொடுத்துள்ளனர். உடன்பிறந்தவர்கள், உறவினர்கள், நலம் பெறவும் வேண்டுதலின் பேரில் இத்தகைய செக்குகள் தானமாக தரப்பட்டுள்ளன. இப்படித் தானமாக தரும்போது அதைச் செய்து கொடுப்பவர் தன் ஊர், தந்தை பெயருடன் தன் பெயரையும் கல்வெட்டாக அந்தக் கல்செக்கில் பொறித்து தரும் வழக்கமும் இருந்துள்ளது. நாகலூரில் மாரியம்மன் கோயில் தெருவில், சாலையில் ஓரத்தில் இருந்த ஒரு கல்செக்கை ஆய்வு செய்தோம். கிழக்கு திசையில் சாய்ந்தபடி புதையுண்ட நிலையில் அந்தக் கல்செக்கு காணப்பட்டது. இதன் வெளிவிளிம்பு விட்டம் 67 செ.மீ, உள் விளிம்பு 54 செ.மீ, நடுவில் உள்ள குழியின் ஆழம் 32 செ.மீ என உள்ளது. உரலின் மையப்பகுதியில் ஒரு வரியில் கல்வெட்டு வளைவாக பொறிக்கப்பட்டுள்ளது. அதன் எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கும்போது, பிற்கால பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கும் எனக் கருதலாம். சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு இது. இது தமிழ் மற்றும் கிரந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது. “ஸ்ரீ” என்ற எழுத்துடன் அக்கல்வெட்டு துவங்குகிறது.

“ஸ்ரீ குந்தை காடன்முரி செய்வித்தது” என அக்கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது. இதில் “காடன்முரி” என்பது கல்செக்கை தானம் கொடுத்தவரின் பெயராகவும், “குந்தை” என்பது அவரின் தந்தை பெயராகவும் இருக்கலாம் என கருதமுடிகிறது. “ஸ்ரீ குந்தை காடன்முரி” என்பவர் இந்தக் கல்செக்கை செய்து தந்துள்ளார் என்பது இதன் பொருளாகும். செய்வித்தது என்ற சொல்லில் வரும் “ய்” என்ற யகரம் இக்கல்வெட்டில் வித்தியாசமாக வெட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நாகலூரில் வரதராஜ பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இந்தக் கோயிலின் கருவறையில் உள்ள பெருமாள் சிலைக்கு முன் பதிக்கப்பட்டுள்ள ஒரு கல்லில், 14 வரிகளில் கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளது. இதில் 5 வரிகள் மட்டுமே படிக்கும் நிலையில் உள்ளன. இக்கல்வெட்டின் நீளம் 88 செ.மீ, அகலம் 64 செ.மீ. இந்தக் கல்வெட்டு 1080 ஆண்டுகளுக்கு முற்பட்ட முதலாம் பராந்தக சோழனின் 33ம் ஆட்சி ஆண்டை சேர்ந்தது. கி.பி 940-ம் ஆண்டு இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு “ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மருக்கு” என்ற முதலாம் பராந்தக சோழனின் மெய்கீர்த்தியோடு இக்கல்வெட்டு துவங்குகிறது. இப்போது நாகலூர் என்று அழைக்கப்படும் இவ்வூர், இந்தக் கல்வெட்டில் “நாவலூர்” என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நாவல் மரங்கள் சூழ்ந்த பகுதியாக இருந்ததால் நாவலூர் என்று பெயர் அமைந்திருக்கலாம். 17-ம் நூற்றாண்டு கல்வெட்டிலும் நாவலூர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. 300 ஆண்டுகளுக்கு முன்புதான் நாவலூர் என்ற பெயர் “நாகலூர்” என மருவியுள்ளது. அக்காலத்தில் பரனூர் கூற்றத்தில் இந்த நாவலூர் இருந்துள்ளது. நாகலூர் வரதராஜபெருமாள் கோயில் கருவறையின் வெளிப்புறத்தில், தெற்குபக்க சுவரில் 5 வரிகளில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. எழுத்தமைதியை கொண்டு இது 17ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். இந்தக் கல்வெட்டிலும் இந்த ஊர் நாவலூர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. “ஆனந்ததாண்டயத்தொண்டைமான்” என்பவர் இந்தப் பெருமாள் கோயிலுக்கு ஆயிரம் குழி நஞ்சை நிலத்தை சர்வமாநியமாக தானம் செய்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. சந்திரன் உள்ளவரை இந்தத் தானம் நிலைத்திருக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. மிகப் பழைமைவாய்ந்த இந்தச் செக்கு கல்வெட்டை பாதுகாக்க அரசு முயற்சி எடுக்கவேண்டும். இப்பகுதியில் மேலும் ஆய்வு செய்தால் இன்னும் பல வரலாற்று தடயங்கள் கிடைக்கலாம்” என்றார் அவர்.

# விவசாயிகளின் மீது நடந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று அமைச்சர்கள் விலக வேண்டும் என்கிறார் வேல்முருகன்

அதானி, அம்பானி உள்ளிட்ட கார்ப்பரேட் நிறுவன முதலாளிகளுக்கு ஆதரவான 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் கடந்த ஓராண்டுக்கு மேலாக போராடி வருகின்றனர். ஆனால் இதையெல்லாம் கண்டுகொள்ளாத மோடி அரசு, விவசாயிகளின் போராட்டத்தை அடக்க பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வருகிறது. இந்த ஒடுக்குமுறையின் தொடர்ச்சியாக, உத்தரப்பிரதேச மாநிலத்தில் போராடிய விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதோடு, அவர்கள் மீது கார் ஏற்றி கொலை செய்துள்ளது மோடி அரசும், யோகி ஆதித்யநாத் அரசும்.

அதாவது, உத்தரப் பிரதேச மாநிலம் லக்கிம்பூரில் கடந்த 3.10.2021 அன்று, ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா, அவரது மகன் அீஸ் மிஸ்ரா, துணை முதல்வர் கேசவ் மரியா பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக காரில் சென்றுள்ளனர். உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா வரும் வழியில், திரண்ட விவசாயிகள் கறுப்புக்கொடி காட்டும் அறப்போரில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது, கூட்டத்திற்குள் ஒன்றிய அமைச்சரின் பின்னால் வந்த அவரது மகனின் கார் தாறுமாறாக புகுந்தது. அந்த வாகனம் ஏறி இறங்கியதில் விவசாயிகள் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 4 விவசாயிகள் உயிர் துறந்துள்ளனர். அதிகார போதையில் இப்படியான துயர நிகழ்வை, அரங்கேற்றியுள்ளது உள்துறை அமைச்சரின் கும்பல். இந்த காட்டுமிராண்டி தாக்குதலை கண்டித்து வாய் திறக்காத மோடி அரசும், யோகி ஆதித்யநாத் அரசும், உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறச் சென்ற, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, மாஜ்வாதிக் கட்சித் தலைவர் அகி லேஷ் யாதவ் உள்ளிட்ட தலைவர்களை கைது செய்துள்ளது. மோடி, யோகி ஆதித்யநாத்தின் இத்தகைய அராஜக போக்கை, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்.



எனவே, விவசாயிகளின் மீது நடத்தப்பட்ட இந்த கொடூர தாக்குதலுக்கு பொறுப்பேற்று, ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா, முதல்வர் யோகி ஆதித்யநாத் பதவி விலக வேண்டும். தாக்குதலுக்கு காரணமான, மத்திய இணை அமைச்சரின் மகன் ஆசிஷ் மிஸ்ராவின் கும்பல் மீது வழக்குப்பதிவு செய்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், அக்கும்பலை கைது செய்ய உத்தரப் பிரதேச அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஒருமித்த கருத்துடைய மாநில முதல்வர்களுடன் ஆலோசித்து, மக்களுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முன்னெடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

# கனடிய பிரதமரின் 'மன்னிப்புக் கேட்கின்றேன்' என்ற வார்த்தைகள் தொடர்பாக நாம் அக்கறை செலுத்தமாட்டோம் — *கனடிய மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் அறிவிப்பு*



"எமது மக்கள் சார்ந்த ஒரு விடயத்தின் தவறிழைத்த கனடியப் பிரதமரின் மன்னிப்பு வார்த்தைகள் எமது மனநிலையை மாற்றிவிடக் கூடியன அல்ல. மாறாக நிறுவனமயப்படுத்தப் பட்ட மற்றும் பரவலான மாற்றத்திற்கு வழிவகுக்காத எவ்விதமான மன்னிப்புகளில் நாங்கள் ஆர்வத்தையும் காட்டவில்லை"

இவ்வாறு கனடிய மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

கனடிய மூத்த குடிகள் சார்ந்த இளையவர்கள் கல்வி கற்ற வதிவிடப் பாடசாலைகளிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டு பின்னர் அந்தக் குழந்தைகளில் உடல் எச்சங்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நிலையில் அவர்களின் மரணங்களுக்காக கனடா எங்கும் மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் கடும் எதிர்ப்புக்களை வெளிக்காட்டின. இந்த நிலையில் மூத்த குடிகள் சார்ந்த அந்த இளையோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மரியாதையும் வணக்கமும் செலுத்தும் வகையில் 'உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான கனடாவின் முதலாவது தேசிய தினம் அனுஸ்டிக்கப்பட்ட நாளன்று கனடியப் பிரதமர் தனது குடும்பத்தினரோடு பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள டோ.·.பினோவில் விடுமுறையை கழிக்கச் சென்றார்.

தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பாக விளக்கம் கேட்ட மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு தான் அவ்வாறு விடுமுறையை கழிக்கச் சென்றது ஒரு "தவறு" என்று பிரதமர் ஒப்புக்கொண்டார்.

பிரதமர் மன்னிப்பு கேட்ட விவகாரம் தொடர்பாக அதிருப்தியும் மனக்கசப்பும் கொண்ட மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் கண்டன அறிக்கையை மீண்டும் வெளியிட்டுள்ளன.

இந்த 2021 மே மாத இறுதியில், கம்லூப்ஸ் என்னும் பிரதேசத்தில் உள்ள உள்ள முன்னாள் வதிவிடப் பாடசாலை மைதானத்தில் 200 க்கும் மேற்பட்ட அடையாளமற்ற மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் கொதித்து எழுந்தன.

தொடர்ந்து. மூத்த குடிகள் சார்ந்த அந்த இளையோர்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதை நினைவு கூரும் முகமாக, மரியாதையும் வணக்கமும் செலுத்தும் வகையில் 'உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான கனடாவின் முதலாவது தேசிய தினம் ஆனஸ்டிக்கப்பட்ட திகதியன்று மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதமர் ட்ரூடோவின் வருகைக்காக பிரதமர் அலுவலகத்திற்கு இரண்டு அழைப்புகளை அனுப்பியிருந்தன அந்த மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள்.



அந்த அழைப்புகளுக்கான பதிலோ அன்றி மறுப்போ கிடைக்கவில்லை. ஆனால் மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் பிரமர் ட்ரூடோ அன்று தனது குடும்பத்துடன் விடுமுறையைத் கழிக்கச் சென்றார்

இதன் காரணமாக, ஒக்டோபர் 2ம் திகதி, மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்களின் கண்டனத்தைத் தொடர்ந்து பிரதமர் அவர்கள் முதலில் சில குறிப்பிட்ட அமைப்புக்களின் தலைவர்களிடத்தில் மன்னிப்புக் கோரினார். பின்னர் படிப்படியாக பகிரங்கமாக மன்னிப்பைக் கேட்கத் தொடங்கினார். இந்த விடயமான கனடா முழுவதிலும் பிரதமர் சார்ந்த விமர்சனங்களை ஏற்படுத்தத் தொடங்கியது.

தொடர்ந்து ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகம் தமது அழைப்புகளுக்கு பதிலளிக்கத் தவறியதால் மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் தமது ஏமாற்றத்தை மீண்டும் வலியுறுத்தின,

" பிரதமரின் முடிவானது ஒரு விரும்பத்தகாத என்றும் வதிவிடப் பாடசாலைகளின் நிர்வாகிகள் இழைத்த கொடுமைகளிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் ஆகியோருக்கான தனது உறுதிப்பாட்டை கனடியர்களுக்குக் காண்பிப்பதற்கான ஓர சந்தர்ப்பத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் தவறவிட்டு விட்டார் என்றே நாம் கருதுகின்றோம் என்று வாய்ப்பு" என்று மூத்த குடிகள் சார்ந்த அமைப்புக்கள் விடுத்து அந்த அறிக்கையில் கூறப்பட்டது.



# அரசாங்கத்தின் வெளியுறவு அணுகுமுறையில் மாற்றம்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



இலங்கை தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த 5ஆம் திகதி வரையிலும் தங்கியிருந்த ஐரோப்பிய யூனியனின் மதிப்பீட்டுக் குழு பல்வேறு தரப்புக்களோடும் உரையாடி இருக்கிறது. இந்த உரையாடலின் விளைவாக ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக ஐரோப்பிய யூனியன் சிலமாதங்களுக்கு முன் எடுத்த இறுக்கமான நிலைப்பாட்டில் தளர்வுகள் ஏற்படலாம் என்று ஓர் ஊகம் அரசியல் வட்டாரங்களில் பரவலாக காணப்படுகிறது.

ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையானது இலங்கைக்கு அவசியமானது. அது இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் ஏற்றுமதித் துறைகளில் ஒன்றாகிய தைத்த ஆடைகள் ஏற்றுமதித்துறை பொறுத்து அதிக லாபத்தை ஈட்டித் தருவது. அதை இழப்பது என்பது நாட்டின் பொருளாதாரத்தை மோசமாக பாதிக்கும்ஏற்கனவே போரினால் சீரழிந்த பொருளாதாரம் ஈஸ்டர் குண்டுவெடிப்பினால் மேலும் நிலைகுலைந்தது. கடந்த சுமார் இரண்டு ஆண்டுகளாக Covid-19 பொருளாதாரத்தை மிக மோசமாக பாதித்திருக்கிறது. தைத்த ஆடைகள் ஏற்றுமதி துறை, வெளிநாட்டில் குறிப்பாக மேற்காசிய நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் சம்பாதிப்பு போன்ற பல துறைகளில் வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.
அதேநேரம் சீனாவுக்கு விசுவாசமான கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலம் எனப்படுவது இராஜதந்திர ரீதியாகவும் மேற்கு நாடுகளுடனும் இந்தியாவுடனும் முரண்படும் ஒரு போக்கை கொண்டிருந்தது. இந்த முரண்பாடானது Covid-19 காலத்தில் தேவையான உதவிகளை பெறுவதில் நாட்டுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியது. குறிப்பாக தேவையான அளவு தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதிலும் தொடக்கத்தில் வரையறைகள் இருந்தன.

இவ்வாறாக பொருளாதார நெருக்கடிபெரும் தொற்றுநோய் மேற்கிலிருந்தும் ஐநாவிடம் இருந்தும் இந்தியாவிடம் இருந்தும் வரக்கூடிய ராஜதந்திர அழுத்தங்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகளை பல்வேறு முனைகளில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பதவிக்கு வந்த பொழுது அமெரிக்காவின் மில்லினியம் சலேன்ச் நிதி உதவித் தொகையை இறுமாப்போடு நிராகரித்த ஓர் அரசாங்கம் இது. அமெரிக்காவோடு முன்னைய அரசாங்கம் செய்துகொள்ள உத்தேசித்திருந்த சோபா உடன்படிக்கை, குறுக்கு சேவைகள் உடன்படிக்கை, மில்லினியம் சலேன்ஞ் உடன்படிக்கை போன்ற எல்லா உடன்படிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளாத ஒரு அரசாங்கம் இது.குறிப்பாக ஐநாவில் முன்னைய அரசாங்கம் இணையனுசரணை புரிந்து ஏற்றுக்கொண்ட 30/1 ஒன்று தீர்மானத்தை நிராகரித்த ஓர் அரசாங்கம் இது. மேலும் இந்திய ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தர ஒப்புக் கொண்டிருந்த உடன்படிக்கையை நிறைவேற்றாமல் இழுத்தடித்த ஓர் அரசாங்கம் இது. போதாக்குறைக்கு வடக்கு கிழக்கில் சீனாவின் உதவியோடு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை அமல்படுத்த முற்பட்ட ஓர் அரசாங்கம் இது.

இவ்வாறாக மிகத்தெளிவாக சீனச் சார்பு நிலைப்பாட்டை எடுத்து மேற்கு நாடுகளையும் இந்தியாவையும் ஒரு எல்லைக்கு மேல் நெருங்கி செல்லாத இந்த அரசாங்கமானது கடந்த சில மாதங்களாக வெளியுறவு கொள்கையில் மாற்றங்களை காண்பித்து வருகிறது. மேற்கு நாடுகள், ஐநா இந்தியா போன்ற தரப்புகளை நோக்கிய வெளியுறவு அணுகுமுறைகளில் அரசாங்கம் மாற்றங்களை காட்டிவருகிறது. பசில் ராஜபக்சவை நிதியமைச்சராக நியமித்ததில் இருந்து இந்த "மாற்றத்தின் அலை" தொடங்கியது. அமெரிக்காவின் இரட்டை பிரஜாவுரிமையை கொண்ட பசில் ராஜபக்ச நிதியமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்பு அமெரிக்காவுக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அது தனிப்பட்ட விஜயமாக அறிவிக்கப்பட்டாலும்கூட மெய்யான பொருளில் அது ஒரு ராஜதந்திர விஜயம் என்று கருதப்படுகிறது. ராஜபக்ச சகோதரர்கள் மத்தியில் வெற்றிகரமான டீல்களுக்கு பெயர் பெற்றவர் பசில் ராஜபக்ச. அவருடைய அமெரிக்க விஜயத்தின்போது அவர் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்க அரசாங்கத்தோடு ஏதோ ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கலாம் என்று கொழும்பில் பரவலாக நம்பப்படுகிறது.

அவர் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்ததும் அடுத்த நகர்வாக ஜி.எல்.பீரிஸ் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து மிலிந்த மொரகொடவின் நியமனம் துரிதப்படுத்தப்பட்டு அவர் நாட்டுக்கான ஈராண்டு மூலோபாய திட்டத்தோடு இந்தியாவுக்கான புதிய தூதுவராக பதவியேற்றார். இவ்வாறான தொடர்ச்சியான நகர்வுகளின் இறுதியானதாக அண்மையில் மகிந்த சமரசிங்க அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்மாற்றங்கள் அனைத்தினதும் தொகுக்கப்பட்ட விளைவாக அரசாங்கம் பின்வரும் விடயங்களில் அமெரிக்கா இந்தியா மேற்கு நாடுகள் ஐநா போன்றவற்றோடு தனது உறவுகளை சீரமைத்து வருகிறது.

இதில் முதலாவதாக காட்டக்கூடியது அமெரிக்காவுடனான உறவில் ஏற்பட்டிருக்கும் நெகிழ்வுப் போக்கு.இது தொடர்பில் பல்வேறு விதமான கட்டுக்கதைகளும் உலவின. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்கு திருகோணமலையில் குறிப்பிட்ட தொகுதி காணிகளை வழங்கப்போவதாக ஒரு கதை வெளிவந்தது. ஆனால் அது உண்மையான கதை அல்ல என்று பின்னர் தெரிய வந்தது. எனினும் கடந்த வாரம் வெளிவந்த கதைகளின்படி கெரவெலப்பிட்டிய மின் நிலையத்தின் நாற்பது வீத பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கப்போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த உடன்படிக்கை ரகசியமான முறையில் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு கொழும்பின் மையமான பகுதியில் சில காணிகளையும் அரசாங்கம் ஓமான் நாட்டுக்கூடாக அமெரிக்காவுக்கு வழங்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு கோட்டைப்பகுதியில் சுங்கப் பகுதிக்குப் பின்னிருக்கும் சாமர்ஸ் கட்டட மைதானம், விமானப்படை தலைமையகத்துக்கு முன்னிருக்கும் விளையாட்டு மைதானம் போன்ற பெறுமதி மிக்க நிலத்துண்டுகள் ஓமான் நாட்டுக்கு வழங்கப்பட உள்ளன. இதில் அமெரிக்காவின் முகவராக ஓமான் செயற்படுவதாக ஒரு கருத்து கொழும்பில் உண்டு. அரசாங்கம் அதை நேரடியாக அமெரிக்காவுக்கு வழங்காமல் ஓமான் நாட்டுக்கூடாக வழங்க இருப்பதாக தெரிகிறது. அண்மையில் அமெரிக்கா ஒரு தொகுதி நிதி உதவியை ஓமான் நாட்டினூடாகவே இலங்கைக்கு வழங்கியதாக தெரிகிறது.

இது அமெரிக்காவுடனான உறவில் ஏற்பட்டிருக்கும் மாற்றம். இவ்வாறான மாற்றங்களின் விளைவாக கடந்த சில மாதங்களாக அமெரிக்காவிடமிருந்து பெருமளவு உதவிகள் இலங்கைக்கு கிடைக்கின்றன. குறிப்பாக Covid-19ஐ எதிர்கொள்ள தேவையான மருத்துவ சாதனங்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் இவற்றுள் அடங்கும். இதுதவிர மேற்கத்திய நிதி முகவர் அமைப்புகளான பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிடமும் இலங்கை கடன் வாங்கத் தொடங்கியிருக்கிறது. மேற்படி நிதி முகவர் அமைப்புக்களிடம் கடன் பெறுவது என்பது மேற்கு நாடுகளின் நிதி உதவிப்பொறிக்குள் வலிந்து சென்று விழுவதுதான். 20 மாதங்களுக்கு முன்பு மில்லினியம் சலேஞ்ச் நிதி உதவியை நிராகரித்த ஓர் அரசாங்கம் இப்பொழுது அமெரிக்காவின் இரட்டை பிரஜாவுரிமையை கொண்டு ஒருவரை நிதியமைச்சராக கொண்டிருப்பதோடு உலக வாங்கி, வங்கி பன்னாட்டு நாணய நிதியம் போன்றவறிடம் உதவி பெறும் ஒரு நிலைமாற்றத்தை காணமுடிகிறது. இது முதலாவது வெளியுறவு அணுகுமுறை மாற்றம்.

இரண்டாவது மாற்றம் ஐநாவுடன்.ரணில் விக்ரமசிங்க இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நிராகரித்த ஓர் அரசாங்கம் அதன் விளைவாக நாற்பத்தி ஆறின் கீழ் ஒன்று தீர்மானத்தை எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஆனால் பசில் ராஜபக்சவும் ஜி.எல்.பீரிசும் வந்தபின் நிலைமை மாறியது. கடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் மாற்றங்களை காட்டியது. நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தை இலங்கைத்தீவின் பாணியில் முன்னெடுப்பதற்கு தயார் என்ற செய்தியை அரசாங்கம் ஐநாவுக்கு வெளிப்படுத்தியது. இதன் விளைவை அண்மையில் நடந்து முடிந்த ஐநா கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூலஅறிக்கையில் காணலாம்.

மூன்றாவது வெளியுறவு அணுகுமுறை மாற்றம் இந்தியாவுடனானது. மிலிந்த மொரகொட ராமாயணத்திற்கும் பௌத்தத்துக்கும் இடையே பண்பாட்டு பிணைப்பை ஏற்படுத்த போவதாக கூறுகிறார். இதன்மூலம் மோடி அரசாங்கத்தின் ராமர் கோயில் என்ற சென்ரி மென்ரலான விடயத்தை ஆதரிக்கும் ஒரு நிலைப்பாட்டை அவர் எடுக்கிறார். புராணங்கள் பண்பாட்டு அம்சங்களின் ஊடாக இந்தியாவை வளைப்பது அவருடைய மூலோபாயத் திட்டம் என்று தெரிகிறது. இதன் அடுத்த கட்டமாக கடந்த வாரம் கொழும்பு துறைமுகத்தின் மேற்குமுனையத்தை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு கொடுப்பதற்குரிய உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது. இலங்கைத்தீவின் ஒப்பீட்டளவில் அதிகளவு கொள்கலன்களை உள்ளடக்கக்கூடிய ஒரு முனையமாக மேற்குமுனையம் பார்க்கப்படுகிறது. மோடி அரசாங்கத்துக்கு மிக நெருக்கமான அதானி குழுமம் இந்த மேற்கு முன்னையத்தை நிர்மாணிக்க போகிறது. மேலும் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் கொள்கலன்கள் தொடர்பிலும் இந்தியாவின் விருப்பங்களை நிறைவேற்ற அரசாங்கம் தயாராகக் காணப்படுவதாக ஒரு தகவல் உண்டு.

இவ்வாறு அதானி குழுமத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட சில நாட்களுக்குள் இந்தியாவின் வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்தார். அவர் வருகை தந்த அதே காலப்பகுதியில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான படைத்துறை ஒத்துழைப்பை காட்டும் "மித்திரசக்தி" என்ற இருதரப்பு கூட்டுப் படைப் பயிற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. இது அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைபு சார் வழமைகளில் ஒன்றாகும்.

எனவே மேற்கண்ட அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடயம் மிகத் தெளிவாக தெரிகிறது. அரசாங்கம் பசிலையும் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட, மஹிந்த சமரசிங்க போன்றோரையும் முன்னிறுத்தி வெளியுறவு அணுகுமுறை மாற்றம் ஒன்றை முன்னெடுத்துவருகிறது. வெளித்தோற்றத்திற்கு இது பசிலின் வருகைக்குப்பின் நிகழ்வது போல தோன்றலாம். ஆனால் இதில் பஸிலும் சரி,பீரிஸ "ம்சரி, மிலிந்த மொரகொட, மஹிந்த சமரசிங்க ஆகியோரும் சரி அனைவருமே கருவிகள்தான். இக்கருவிகளை கையாள்வது என்ற ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்தது கோட்டாபயவின் அரசாங்கம்தான். அந்த தீர்மானத்தின் பிரகாரம் அவர்கள் காய்களை நகர்த்துகிறார்கள். அதாவது வெளியுறவு அணுகுமுறைகளில் மாற்றத்தை காட்டுவது என்று ஒரு அரசியல் முடிவை எடுத்தபின் அதை அரசாங்கம் அமல்படுத்துகிறது. அது ஒரு அரச தரப்பு அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களும் ஆட்களும் அவர்களிடம் உண்டு. தவிர அரசுக்கும் அரசுகளுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவு எனப்படுவது எப்பொழுதும் அரசுகளை பாதுகாக்கும் நோக்கிலானது. இந்த கட்டமைப்புசார் உறவுகளின் ஊடாக அரசுகள் போரைத் தவிர்க்கலாம். உள்நாட்டு நெருக்கடிகளை தவிர்க்கலாம். அனர்த்த காலங்களில் உதவிகளைப் பெறலாம். எல்லாவற்றையும் விட முக்கியமாக இராஜதந்திர உறவுகளில் முடக்கம் ஏற்படும்பொழுது அந்த முடக்கத்தை உடைத்து கொண்டு வெளியே வரலாம்.

கடந்த சில மாதங்களாக இலங்கைதீவில் நடைபெற்று வருபவை அவைதான். இந்த மாற்றங்களில் சீனா ஒதுக்கப்படுவதாக ஒரு தோற்றம் ஏற்படலாம். ஆனால் அது உண்மையல்ல ராஜபக்சக்களின் இதயத்தில் எப்பொழுதும் சீனாதான் இருக்கும். இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு சீனா கிள்ளிக்கொடுக்கும் உதவிகளே போதும். ஆனால் அவ்வாறு செய்வதால் ராஜபக்சக்கள் எனைய நாடுகளிடமிருந்து அந்நியப்படுவதை சீனா விரும்பவில்லை என்று தெரிகிறது. அதனால் சீனாவே அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருக்கலாம் இவ்வாறு மேற்கு நாடுகளிடமும் இந்தியாவிடமும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை இணங்கிப் போகுமாறு.

# தமிழகத்தில் புதிதாக 850 மருத்துவ இடங்களுக்கு ஒப்புதல் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

தமிழகத்தில் புதிதாக 850 இடங்களுக்கு மருத்துவச் சேர்க்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (அக். 07) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இரண்டு எண்ணிக்கையில் 1,000 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி ஆலையை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:"தமிழகத்தில் 11 மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தலா 150 இடங்கள் வீதம் மருத்துவ மாணவர் சேர்க்கை கோரிக்கையை முதல்வர் மத்திய அரசின் பிரதமர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சருக்குக் கடிதத்தின் வாயிலாகவும், நேரிலும் தெரிவித்ததன் அடிப்படையிலும், நானும், மருத்துவத்




துறையின் செயலாளரும் நேரில் சென்று மனு அளித்து ஆய்வுக்குழு அனுப்ப வலியுறுத்தப்பட்டது. ஆய்வுக் குழுவும் அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு 850 இடங்களுக்கு மருத்துவச் சேர்க்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 800 இடங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதில், நாமக்கல், ராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஆய்வுக் குழுவினர் சிறிய சிறிய குறைபாடுகளைக் குறிப்பிட்டிருந்தனர். அவையெல்லாம் கடந்த 10 நாட்களாக நிவர்த்தி செய்யப்பட்டு அதற்கான ஆவணங்களும், அதேபோல் திண்டுக்கல், கிருஷ்ணகிரி, அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய நான்கு மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஆய்வுக் குழுவினர் சிறிய குறைபாடுகளைச் சொல்லியிருந்தனர்.

அவையும் சரி செய்யப்பட்டு, அதற்கான ஆவணங்களை மருத்துவக் கல்வி இயக்குநர் இன்று டெல்லிக்குச் சென்று, சம்பந்தப்பட்ட மத்திய அரசின் அலுவலர்களைச் சந்தித்து எடுத்துச் சொல்லி நாமக்கல், ராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர் மாவட்டங்களுக்கு நிலுவையில் வைத்திருக்கிற தலா 50 இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு உடனடியாக ஆய்வுக் குழு அனுப்பவும் கேட்க உள்ளார்". இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# பாம்பன் கடலில் அமையும் நாட்டின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலப் பணி மார்ச்சில் நிறைவடையும்: மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்



பாம்பன் கடலில் கட்டப்பட்டு வரும் நாட்டின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தின் பணிகள் மார்ச் 2022க்குள் நிறைவடையும் என மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டதாலும் , பாலத்தில் அடிக்கடி விரிசல் ஏற்படுவதாலும், பாம்பன் கடலில் புதிய ரயில் பாலம் கட்டுவதாக, மத்திய ரயில்வே அமைச்சகம் 2018ம் ஆண்டு டிசம்பரில் அறிவித்தது.

தொடர்ந்து ரயில்வே சார்பில் புதிய ரயில் பாலம் கட்ட ரூ.250 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, கன்னியாகுமரியில் 1.3.2019 அன்று நடந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் பிரதமர் மோடி புதிய பாம்பன் பாலம் அமைக்க அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து 11.08.2019 அன்று பாம்பனில் புதிய ரயில்வே பாலம் கட்டுவதற்காக பூமி பூஜையுடன் பணிகள் தொடங்கின. இதற்காக இரும்பு மிதவைகளில் கிரேன், கலவை இயந்திரங்கள், பாறை துளைப்பான் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிய பாம்பன் பாலத்துக்கான திட்டச் செலவு ரூ.279.9 கோடி. பாலத்தின் நீளம் 2078 மீட்டர். 101 தூண்களைக் கொண்டது. கடல் மட்டத்திலிருந்து 6 மீட்டர் உயரத்தில் புதிய பாலம் எழுப்பப்பட உள்ளது. இந்தத் தூண்கள் இடையே 60 அடி நீளம் கொண்ட 101 இணைப்பு கர்டர்கள் பொருத்தப்பட உள்ளன. பாலத்தின் மையப்பகுதியில் கப்பல்கள் செல்ல 27 மீட்டர் உயரத்துக்கு ஹைட்ராலிக் லிஃப்ட் மூலம் இயங்கக் கூடிய செங்குத்து தூக்கு பாலமும் அமைய உள்ளது.

ரயில்வே நிர்வாகம் 31.09.2021க்குள் புதிய ரயில்வே பாலத்தின் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயித்தது. ஆனால் கடந்த 2020 ஆண்டு மார்ச் மாதம் கரோனா பரவல் காரணமாக புதிய பாம்பன் பாலப் பணிகள் சில மாதங்கள் தடைபட்டன. தொடர்ந்து 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கிய வடகிழக்குப் பருவ மழை மற்றும் பாம்பன் வடக்கு கடற்பகுதியில் ஏற்பட்ட கடல் சீற்றம் காரணமாக புதிய பாலத்துக்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்த மிதவைகள், மிதவைகளிலிருந்த கிரேன்கள் காற்றின் வேகத்தால் கட்டுப்பாட்டை இழந்து தற்போது உள்ள பாம்பன் ரயில் பாலத்தின் மீது மோதும் சம்பவங்களும் தொடர்ந்து நடந்தன.

இதனால் பணிகள் சில நாட்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.இதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட செப்டம்பர் 2021க்குள் பணிகளை முடிக்க முடியவுல்லை.இந்நிலையில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், தனது டுவிட்டர் பக்கத்தில் பாம்பன் கடலில் கட்டப்படும் நாட்டின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தின் பணிகள் மார்ச் 2022க்குள் நிறைவடையும் எனத் தெரிவித்துள்ளார்.

# அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்காவிட்டால் சிறைக்கு செல்லவும் தயங்க மாட்டோம்: ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை திட்டவட்டம்

அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்காவிட்டால் சிறை செல்லவும் தயங்கமாட்டோம் என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். கரோனா பரவலை தடுக்க வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில்களில் பக்தர்கள் தரிசனம் செய்ய அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில், அனைத்து நாட்களிலும் கோயில்களை திறக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் உள்ள பிரசித்திபெற்ற 12 கோயில்கள் முன்பு பாஜக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சென்னை காளிகாம்பாள் கோயில் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, இளைஞர் அணித் தலைவர் வினோஜ் பி செல்வம், இந்து முன்னணி மாநில அமைப்பாளர் க.பக்தவத்சலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் அண்ணாமலை பேசியதாவது: நவராத்திரி முதல் நாளில் கோயில்களை திறக்கக் கோரி போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு இந்துக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பாஜக மதம் சார்ந்த கட்சி அல்ல. ஆனால், ஒரு மதத்தை குறிவைத்து அரசியல் செய்யும்போது கேள்விகேட்கும். மகாளய அமாவாசையன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கக்கூட திமுக அரசு அனுமதிக்கவில்லை. இதனால் தெருக்களில் தர்ப்பணம் கொடுக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். திரையரங்குகளில், மதுக் கடைகளில் வராத கரோனா, கோயில்களை திறப்பதால் மட்டும் வந்துவிடுமா?இன்னும் 10 நாட்களுக்குள் அனைத்து நாளிலும் கோயில்களை திறக்க உத்தரவிட வேண்டும். இல்லையெனில் சிறை செல்லவும் தயங்க மாட்டோம். இஸ்லாமிய, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களையும் திறக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# குலசேகரன்பட்டினம் தசரா: முத்தாரம்மன் கோவிலில் குவிந்த பக்தர்கள்

குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவிலில் தசரா திருவிழாவின் 2ம் நாளான நேற்று ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். அவர்கள் சாமி தரிசனம் செய்து காப்பு வாங்கி சென்றனர்.

இந்தியாவில் மைசூருக்கு அடுத்தபடியாக குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா புகழ் பெற்றது. இந்த ஆண்டுக்கான தசரா திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. கொரோனா தடுப்பு நடவடிக்கை காரணமாக, கொடியேற்ற நிகழ்ச்சி பக்தர்கள் இன்றி எளிமையாக நடந்தது.

2ம் திருநாளான நேற்று பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதனால் காலை முதலே ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து குவிந்தனர். ஆன்லைன் பதிவு மற்றும் நேரடியாக தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். பொதுவாக பக்தர்கள் கடலில் புனித நீராடி பின்னர் சாமி தரிசனம் செய்வர். ஆனால், நேற்று கடற்கரை பகுதிக்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. காலை 6 மணியில் இருந்து இரவு 8 மணி வரை கோவிலில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர்.

விரதம் இருக்கும் பக்தர்கள், கொடியேற்றம் நடைபெறும் அன்று கோவிலுக்கு வந்து காப்பு வாங்கி கட்டிக் கொள்வது வழக்கம். ஆனால், நேற்று முன்தினம் கொடியேற்றத்தின்போது பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இதனால் நேற்று கோவிலில் பக்தர்களுக்கு காப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

கோவில் அலுவலகத்தில் பக்தர்கள் மற்றும் தசரா குழுவினருக்கு 5, 10, 50, 100 என்று பல்வேறு எண்ணிக்கையில் காப்புகள் வழங்கப்பட்டன. ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று காப்புகளை வாங்கி சென்றனர். பக்தர்கள் வந்த வாகனங்கள் குலசேகரன்பட்டினம் பைபாஸ் சாலை வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டன. அங்கிருந்து பக்தர்கள் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர்.

இந்தியா செய்திகள்
India News

# கேரளாவில் கிருஷ்ணர் படங்களை வரையும் இஸ்லாமியப் பெண்



ஜஸ்னா சலீம் தனக்குப் பிடித்த ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினால் குழந்தை போல துள்ளிக் குதித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிடுவார். அந்த ஒரு விஷயம் குழந்தை கிருஷ்ணர். கைகளை வெண்ணைப் பானைக்குள் விட்டபடி, முகத்தில் வெண்ணெயைப் பூசிக் கொண்டிருப்பாரே, அதே கிருஷ்ணர்தான். இஸ்லாமியப் பெண் ஜஸ்னா சலீமுக்கு 28 வயது. கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்தவர். இரண்டு குழந்தைகளுக்குத் தாய். பால கிருஷ்ணரின் ஓவியங்களை கடந்த ஆறு ஆண்டுகளாக வரைந்து வருகிறார். இப்போது ஒரு கோயிலுக்கு தாம் வரைந்த கிருஷ்ணரின் ஓவியத்தை வழங்கியிருக்கிறார். கிருஷ்ணருக்கே நேரடியாக தாம் வரைந்த பால கிருஷ்ணரின் ஓவியத்தை வழங்கிவிட்டதாகப் பூரிக்கிறார். கனவு நிறைவேறிய பெருமிதம் அவருக்கு. சில நாள்களுக்கு முன்பு கேரளாவில் உள்ள உலநாடு ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமி கோயிலுக்கு கிருஷ்ணரின் படத்தை வழங்கினார் ஜஸ்னா. 80 ஆண்டுகளுக்கு முந்தைய இந்தக் கோயில் பத்தனம்திட்டை மாவட்டத்தில் உள்ள பந்தளத்தில் அமைந்துள்ளது. கோயிலின் மூலவர் குழந்தை கிருஷ்ணர்.

முதலில் அவரது ஓவியங்கள் குருவாயூரில் உள்ள புகழ்பெற்ற கிருஷ்ணர் கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதை அறிந்து கொண்ட பந்தள கோயில் நிர்வாகத்தினர், தங்களுக்கு அப்படியொரு ஓவியம் வேண்டும் என்று கேட்டனர்.

இதற்கு முன்பு குருவாயூர் கோயிலுக்கு அவர் ஓவியங்களைக் கொடுத்திருந்தாலும், கோயிலுக்குள் சென்று நேரடியாக படங்களை வழங்கியது இதுதான் முதல்முறை.

ஓவியம் வரைவதற்காக எந்தவிதமான தொழில்முறை பயிற்சியும் ஜஸ்னா பெற்றதில்லை. ஜஸ்னாவின் கணவர் சலீம் அவருக்கு கிருஷ்ணரைப் பற்றிச் சொன்னார். அவரைச் சுற்றியிருக்கும் கதைகளையும் கூறத் தொடங்கினார்.

கோழிக்கோட்டில் உள்ள தனது வீட்டில் இருந்து பிபிசியிடம் தொலைபேசியில் பேசினார் ஜஸ்னா. "அந்த நேரத்தில் நான் கருவுற்றிருந்தேன். கிருஷ்ணரின் அழகையும் துறுதுறுப்பையும் நான் உணர்ந்தபோது, அவருடைய வாழ்க்கையை ரசிக்கத் தொடங்கினேன். பின்னர் ஒருநாள் அவரது படத்தைப் பார்த்து வரையத் தொடங்கினேன். அதுவே எனது வாழ்க்கையின் முதல் படமாக அமைந்தது".

ஆனால், ஜஸ்னாவால் கிருஷ்ணரின் படத்தை வீட்டில் வைக்க முடியவில்லை. இதைப் பார்த்து அவரது வீட்டில் இருப்பவர்கள் கோபப்படுவார் என்று அவரது கணவர் சலீம் முதலில் நினைத்தார். ஆனால் ஜஸ்னா ஓவியம் வரைவதில் எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை. "நான் ஒரு பழமைவாத குடும்பத்தில் இருந்து வந்தவள். ஆனால் என் கணவர் வீட்டில் இருப்பவர்கள் நான் ஓவியம் வரைவதைத் தடுக்க வில்லை".

"நான் முதலில் உருவாக்கிய கிருஷ்ணர் ஓவியத்தை, என் நண்பரான நம்பூதிரி குடும்பத்துக்கு கொடுத்தேன். கிருஷ்ணரின் படத்தை ஒரு முஸ்லிம் உருவாக்கியதைக் கண்டு எனது நண்பரின் குடும்பத்தினர் ஆச்சரியப்பட்டனர். விருப்பங்கள் நிறைவேறும்" என்றும் அவர்கள் கூறினர். அப்போதிருந்து அவர் தொடர்ந்து கிருஷ்ணரைத் தேர்ந்தெடுத்து ஓவியங்களாக வரைந்தார்.

ஜஸ்னாவுக்கு கிருஷ்ணரின் முகம் உத்வேகம் அளிக்கக்கூடியதாக இருந்தது. கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டதாகவும் இருந்தது. முதல் படத்தில் கிருஷ்ணர் கைகளைக் கட்டியிருப்பது போலப் பார்த்தார். அதன் பிறகு வெண்ணெய்ப் பாத்திரத்தில் கையை விடுவது போன்ற படம் கிடைத்தது. பின்னர் கிரு'ணரைப் படங்களாக வரையத் தொடங்கிவிட்டார். வெண்ணெய்ப் பானைகளுடன் இருக்கும் கிருஷ்ணரின் படங்களை மட்டுமே ஏன் வரைகிறீர்கள் என்று ஜஸ்னாவிடம் கேட்கப்பட்டது. "கைகளில் வெண்ணெய் இருக்கும் கிருஷ்ணரின் படம் மிகவும் அழகாக இருக்கிறது. ஏனெனில் தனக்குப் பிடித்தமான உணவில் திருப்தியடைந்த ஒருவர் அதில் இருக்கிறார்". ஜஸ்னா படங்களை வரையத் தொடங்கியபோது, அவருடைய தாய் மாமாதான் முதலில் குருவாயூர் கோவிலில் அவற்றைக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். குருவாயூர் கோயிலில் இருந்து வந்தவர்கள் அங்கிருந்த ஜஸ்னாவின் பால கிருஷ்ணர் ஓவியத்தைப் பார்த்ததாகவும் அது மிகவும் அழகாக இருந்ததாகவும் கூறியிருக்கிறார்கள். "இந்த ஓவியத்தின் மிகவும் சுவாரஸ்யமான அம்சம் என்னவென்றால், குழந்தை கிருஷ்ணரின் குறும்புத்தனத்தை அவர் கச்சிதமாக வரைந்திருக்கிறார். இந்தப் படத்தை பார்த்தால், மகிழ்ச்சி கிடைக்கிறது" என்கிறார் புனேயைச் சேர்ந்த தத்வமசி சன்ஸ்தாவின் ஜே.பி.கே. நாயர். மெட்டாபிசிக்ஸ் கல்வி நிறுவனம் இந்த ஓவியத்துக்கு நிதியுதவி செய்திருக்கிறது. இதுவரை நூற்றுக்கணக்கான படங்களை ஜஸ்னா வரைந்திருக்கிறார். கேரளா தவிர, தமிழ்நாடு, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து படம் கேட்டு ஆர்டர்கள் வருகின்றன. ஆனால் ஜஸ்னா பணத்தைப் பெரிதாகக் கருதவில்லை. "மன திருப்திதான் எனக்குக் கிடைக்கும் நன்மை" என்கிறார் அவர்.

# ராஜீவ் காந்தி படுகொலையும் போலீஸ் தொப்பியும் — ஓய்வுபெறும் நாளில் கலங்கவைத்த பிரதீப் வீ பிலிப் ஐ.பி.எஸ்



தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியுடன் (வலது) ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ் அதிகாரி பிரதீப் வி பிலிப்

இந்திய காவல் பணியில் 34 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு ஓய்வுபெறும் நாளில் ஐ.பி.எஸ் அதிகாரி பிரதீப் வி பிலிப் வைத்த கோரிக்கை சற்று வித்தியாசமானது. ராஜீவ்காந்தி படுகொலை சம்பவத்தின் சாட்சியாக இருக்கும் தனது போலீஸ் தொப்பியை அணிய வேண்டும் என்பதுதான் அது.

நீதிமன்றம் அனுமதி கொடுத்தாலும் ஓய்வுபெறும் நாளில் அந்தத் தொப்பியை அவரால் அணிய முடியவில்லை. ஏன்? இந்திய காவல் பணியில் 1987ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தவர் பிரதீப் வி பிலிப். பெங்களூருவை பூர்வீகமாகக் கொண்ட பிரதீப், தமிழ்நாடு காவல்துறையில் ஏ.எஸ்.பி.யாக இணைந்து படிப்படியாக உயர்ந்து டி.ஜி.பி. ஆனார். போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு, குடிமைப் பொருள் கடத்தல் தடுப்பு எனப் பல துறைகளில் தனது திறமையை வெளிக்காட்டியவர் இவர். தனது பணிக்காலத்தில் ".'.பிரண்ட்ஸ் ஆ.'.ப் போலீஸ்" என்ற காவல் துறை நண்பர்கள் அமைப்பை ஏற்படுத்தினார் இவர். இந்தப் பணியில் சமூக அக்கறையுள்ள இளைஞர்களை ஈடுபடுத்தினார். மாநில அரசின் விருது, குடியரசுத் தலைவர் பதக்கம் உள்பட ஏராளமான விருதுகளையும் பிரதீப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், இந்திய காவல் பணியில் இருந்து கடந்த 1ஆம் தேதி பிரதீப் பிலிப் ஓய்வுபெற்றார். இதையொட்டி சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடந்த பிரிவு உபச்சார விழாவில் பிரதீப் வி பிலிப் பங்கேற்றார். அப்போது பேசிய டி.ஜி.பி சைலேந்திரபாபு, "பணிக்காலத்தில் கடுஞ்சொல் பேசாத அதிகாரியாக பிரதீப் இருக்கிறார். காவல் துறையினருக்கு சிந்தனை பயிற்சி அளித்ததில் அவரது பங்கு மிகப் பெரியது" என்றார். அடுத்துப் பேசிய பிரதீப் வி பிலிப், ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தின்போது நடந்தவற்றை விளக்கினார்.

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்தேன். அப்போது அவருக்கு என விரிக்கப்பட்ட சிவப்புக் கம்பளத்தின் அருகில் நின்றிருந்தேன். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. நான் காற்றில் வீசப்பட்டதை உணர்ந்தேன். அப்போது என் முகம் முழுவதும் ரத்தமாக இருந்தது. தாகமாக இருக்கிறது எனக் கூறியபோது ஒரு சாதாரண மனிதர் எனக்குத் தண்ணீர் தந்தார். எனது நம்பிக்கையின் மிக முக்கியமான வேராக அந்தச் சம்பவம் இருந்தது" என்றார். தொடர்ந்து பணிக்காலத்தில் தான் முன்னெடுத்த நிகழ்வுகளைப் பற்றியும் விவரித்தார். முன்னதாக, பணிக்காலத்தின் கடைசி நாளில் ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தின்போது தான் அணிந்திருந்த தொப்பியையும் பேட்ஜையும் அணிய வேண்டும் என விரும்பினார். இதுதொடர்பாக தனது நண்பர்களுடன் கலந்து ஆலோசித்தவர், அந்தத் தொப்பியையும் பேட்ஜையும் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதியளிக்குமாறு சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். முடிவில், ஒரு மாத காலம் அந்தத் தொப்பியையும் பேட்ஜையும் வைத்துக் கொள்ள நீதிமன்றம் இடைக்கால அனுமதியளித்தது. இதற்காக ஒரு லட்ச ரூபாய் பிணைத் தொகையையும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். இந்த உத்தரவால் பிரதீப் வி பிலிப் மிகவும் உற்சாகமடைந்தார்.

இதுதொடர்பாக, பிரதீப் வி பிலிப்பிடம் பேசுவதற்காக தொடர்பு கொண்டோம். அவர் தொடர் சுற்றுப்பயணத்தில் இருப்பதாகத் தகவல் கிடைக்கவே, பிரதீப்பின் வழக்கறிஞர் சஞ்சய் பின்டோவிடம் பேசினோம். "1991 மே மாதம் 21 ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ்காந்தி படுகொலை சம்பவம் நடந்தது. அப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏ.எஸ்.பியாக பிரதீப் பிலிப் இருந்தார். அவரது பணிக்காலத்தின் தொடக்கத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்தார். 21 நாள்கள் மருத்துவமனையின் ஐ.சி.யுவில் சிகிச்சை பெற்றார். தான் உயிர் பிழைத்ததையே பெரிய விஷயமாக அவர் பார்க்கிறார். அதன் அடையாளமான தொப்பி, பேட்ஜை பணிக்காலத்தின் நிறைவு நாளில் அணிய வேண்டும் என ஆசைப்பட்டார்" என்கிறார். மேலும், "இப்போதும் பிரதீப்பின் உடலில் வெடிகுண்டு சிதறல் துணுக்குகள் உள்ளன. அவரது கையைத் தொட்டுப் பார்த்தால் அதனை உணரலாம். அந்தச் சம்பவத்தை தனது வாழ்நாளில் சென்டிமென்ட்டான ஒன்றாக பார்க்கிறார். ஏனென்றால், ராஜீவ்காந்தி படுகொலை சம்பவம் நடந்த அதே 91 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் தேதி அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. பத்து நாள்களுக்கு முன்பு தந்தையாக பதவி உயர்வு பெற்றவருக்கு பெரும் சோதனையாக இந்த வெடிகுண்டு சம்பவம் அமைந்திருந்தது" என்கிறார்.

"நீதிமன்றம் வாயிலாகச் சென்று தொப்பியை பெறுவதற்கு இத்தனை ஆண்டுகாலம் ஏன் காத்திருக்க வேண்டும்?" என்றோம். "ராஜீவ்காந்தி படுகொலை வழக்கின் விசாரணை நடைபெற்று வந்தது. இந்தச் சம்பவம் நடந்து 33 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த வழக்கின் இறுதி உத்தரவு 1998 ஆம் ஆண்டு வெளிவந்தது. இத்தனை ஆண்டு காலமும் அவர் காத்திருந்தார். பணி நிறைவின்போது அந்த பேட்ஜையும் தொப்பியையும் அணிய வேண்டும் என நினைத்தார். இதற்காக கடைசி நேரத்தில் என்னைத் தொடர்பு கொண்டு, நீதிமன்றத்தின் அனுமதியோடு இதனைப் பெற முடியுமா?" எனக் கேட்டார். நாங்களும், இதனை நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கோரினோம். அந்த மனுவில், "எப்போது தேவைப்பட்டாலும் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்" எனக் குறிப்பிட்டிருந்தோம். ஆனால், "இந்த ஆவணங்கள் தேவைப்படும்" என அரசுத் தரப்பில் தெரிவித்ததால், ஒரு மாத காலத்துக்கு அவற்றை வைத்துக் கொள்ளவும் ஒரு லட்ச ரூபாய் பிணைத் தொகை தந்து அவற்றைக் கொண்டு செல்லவும் அனுமதி கிடைத்தது.

"வரும் 28 ஆம் தேதிக்குள் அந்தத் தொப்பியையும் பேட்ஜையும் ஒப்படைக்க வேண்டும். நீதிமன்றம் அனுமதி கொடுத்ததைக் கேட்டதும் பிரதீப் பிலிப் அழுதுவிட்டார். அவருக்கு பழைய நினைவுகள் வந்துவிட்டன" என்றார்.

"பிரிவு உபசார விழாவில் அந்தத் தொப்பியை அவர் அணியவில்லையே ஏன்?" என்றோம். "அது ஏ.எஸ்.பி பதவிக்கான தொப்பி. பதவி ஓய்வு பெறும்போது டி.ஜி.பி அந்தஸ்தில் அவர் இருந்தார். காவல் யூனி.'.பார்மும் மாறிவிட்டது. அதனால்தான் அணியவில்லை. ஆனால், அவரது நினைவுகளில் அந்தத் தொப்பியும் பேட்ஜும் எப்போதும் இருக்கும்" என்றார்.

# வன்முறை ஆயுதங்களால் மாத்திரம் நிகழத்தப்படுதில்லை

- தீபச்செல்வன்

மனித இனத்தின் பரிணாமத்துடன் பல்வேறு வகையான துறைசார் வளர்ச்சிகளும் ஏற்பட்டு இந்தப் பூமி பொலிவு பெற்றிருக்கிறது. மனிதனுக்கு இருக்கும் சிந்திக்கும் ஆற்றலும் புத்தாக்கப் பண்பும் இப் பூமியில் வலிமை உள்ள உயிரினமாக மனிதனை மதிப்புறச் செய்கிறது. மனிதன் உணர்ச்சிகள் நிறைந்தவன். பசி, காதல், காமம், கோபம், கருணை எனப் பல்வேறு வகையான உணர்ச்சிகளைக் கொண்டிருக்கும் மனி-தன் அதனை தேவையான வித்தில் கையாண்டு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் உலகத்திற்கும் தன் பங்களிப்புக்களை செய்து வருகிறான். அதுவே மனிதனை ஏனைய உயிரிகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க உதவுகிறது.

அந்த அடிப்படையில் பார்கின்ற போது வன்முறை என்பது ஆதிகால மனித சமூகத்தில் இருந்து இன்றைக்கு வரையும் தொடர்கின்ற ஒரு கடூரச் செயலாகக் கருதப்படுகிறது. உலகம் எவ்வளவோ வளர்ச்சி பெற்ற பிறகும் மனித சமூகம் எவ்வளவோ மேம்பாடுகளை கண்ட பிறகும் வன்முறை என்பது தனிநபரில் இருந்து குடும்பம், தேசம் உலகம் எனப் பரவித்தான் காணப்படுகிறது. தனிப்பட்ட வாழ்வும் சமூம் மற்றும் தேசத்தின் அமைதியும் உலக ஒழுங்குகளும் இன்றுவரையில் வன்முறையால் காயப்பட்டுக் குலை-வதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். வன்முறை என்பது தீராத சாபமாக இந்தப் பூமியைத் தொடர்கிறது.

பெரும்பாலும் வன்முறையைத் தவிர்ப்பவர்களைத்தான் வன்முறை விரட்டுகிறது. வன்முறை என்றால் என்ன? பெரும் பாலும் வன்முறை என்றால் என்ன என்று தெரியாமல்தான் நிகழ்த்தப்படுகிறது. வன்முறைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தருகின்ற வரைவிலக்கணம் இதுதான். "ஒரு நபர், குழு அல்லது சமூகத்திற்கெதிராக காயம், மரணம், உளவி-யல் தீங்கு, வளர்ச்சியின்மை அல்லது இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும்படியாக அல்லது இவை நிகழ அதிகம் வாய்ப்புகளை உருவாக்கும்படியாக, உண்மையாகவோ அல்லது அச்சுறுத்தும்படியாகவோ உடல் வலிமை, அதிகாரத்தை வேண்டுமென்றே பயன்படுத்துவது வன்முறையாகும். வன்முறைகளை அரசியல், மதம், சாதி, குடும்பம், பாலியல் சார்ந்தவகைகளாக வகைப்படுத்தலாம்."

வன்முறை நேரடியாக முரண்பாடுகளினால் மாத்திரம் நிகழ்த்தபடுவதில்லை. அது அன்பினால்கூட நிறைவேற்றப்படுகின்றது. மிகக் கொ-டுமையான நடவடிக்கைகளினால் கத்தியின்றி, இரத்தமின்றி நடக்கிறது. வன்முறை ஜனநாயகத்தின் பெயரில்கூட முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கைத் தீவில் நடந்த போர்கள் அனைத்துமே ஜனநாயகத்தின் பெயரிலும் மனிதாபிமானத்தின் பெயரிலும்தான் நடந்திருக்கிறது. 2009இல் முள்ளிவாய்க்கால் வரையில் முன்னெடுக்கப்பட்ட இனவழிப்புப் போருக்கு "மனிதாபிமான யுத்தம்" என்று அன்றைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மகிந்த ராஜபக்ச பெயர் சூட்டினார்.

அரசே மிகப் பெரிய வன்முறையை முன்னெடுத்தது. பயங்கர ஆயுதங்கள் கொண்டு யுத்தக்களம் திறக்கப்பட்டது. பாதுகாப்பு வலயங்கள் எனப் பெயரிப்பட்ட நிலங்களில் தஞ்சம் புகுந்த குழந்தைகள், முதியர்வர்கள், கர்ப்பணிப் பெண்கள் வரை-
யில் எறிகணை வீச்சினாலும் விமானக் குண்டுத் தாக்குதல்களாலும் பெரும் வன்முறை நிறைவேற்றப்பட்டது. பாதுகாப்பு வலயங்கள் முழுவதும் மனித உடல்கள் சிதைந்து கிடந்தன. பாதுகாப்பு வலயங்கள் முழுதும் குருதி ஆறு பாய்ந்தது. போர் வேண்டாம், போரை நிறுத்துங்கள் என்று கெஞ்சிக் கதறிய மக்கள் இனம்மீது பெரும் வன்முறையைத் திணித்து அதற்கு மனிதாபிமானப் பெயர் இட்டது அரசு.

இலங்கையின் வன வன்முறைகளின் சரித்திரம் எழுபது ஆண்டுகளைக் கொண்டது. ஈழத் தமிழ் மக்கள் வரலாறு முழுவதும் வன்முறையால் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். தமது உரிமைகளை, தமது பாரம்பரியத்தை கோருகின்ற பொழுதெல்லாம் தமிழர்கள்மீது வன்முறையே ஆயுதமாகத் திணிக்கப்பட்டது. தமிழர்களின் உரிமை மீதும் உடமைகள்மீதும் உயிர்மீதும் வன்முறை கொண்டு ஒடுக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற நிறுவனங்கள் வன்முறை பற்றியும் உலகில் வன்முறையை தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசுகின்ற தருணத்தில் ஸ்ரீலங்காவில் வன்முறை அரச சட்டங்களால் பாதுகாக்கப்படுகிறது.

அக்டோபர் 02 உலக வன்முறையற்ற தினம். வன்முறையை தவிர்த்து அமைதியை அகிம்சையை போதிக்கின்ற நாள். கடந்த 2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்தத் தினத்தை பிரகடனப்படுத்தியது. உலகில் வன்முறையை ஒழித்து அமைதி-யை நிலை நாட்ட மகாத்மா காந்தி அரும் பாடுபட்டதை கௌரவிக்கும் பொருட்டு அவர் பிறந்த நாளை சர்வதேச வன்முறையற்ற தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தனது வாழ்நாள் முழுவதும் அகிம்சையைக் கடைப்பிடித்து அதன் உன்னதத்தை அனைவருக்கும் உணர்த்திய மகாத்மா காந்தியின் கொள்கைகளை உலக நாடுகள் அனைத்தும் பறைசாற்றி, அகிம்சையின் மகத்துவத்தை அறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. அகிம்சை, பரந்த மனப்பான்மை, மனித உரிமை, சுதந்திரம், சனநாயகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பது முக்கியத்துவம் வாய்ந்தவை என அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் துரதிஸ்டவசமாக ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தின் வடக்கு கிழக்கில் மிகப் பெரிய வன்முறை நடப்பதற்கு மறைமுகமாக துணைபோயிருந்த காலம் இது என்பதும் இங்கே கசப்புடன் நினைவுகொள்ள வேண்டும். இலங்கை அரசு 2007இல் கிழக்கை முழுமை-யாகக் கைப்பற்றியதையடுத்து வடக்கிலும் வன்முறைப் போரைத் துவங்கியது. அதற்குப் பிந்தைய இரண்டு ஆண்டுகள் அதாவது 2009வரையில் ஈழத் தமிழ் இனம் தினம் தினம் போரால் இனவழிப்பு செய்யப்பட்டது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இனப்படுகொலை இலங்கைத் தீவில் முன்னெடுக்கப்பட்டது.

வன்முறைக்கு எதுதான் அடிப்படையாக இருக்கிறது? வன்முறையை எந்தத் தரப்பு மேற்கொள்ளுகிறது? அது குடும்பம் முதல் தேசம் வரை-யில், ஏன் உலகம் வரையிலும் பலமான தரப்பினால்தான் வன்முறை நிகழ்த்தப்படுகிறது. பலம் பொருந்திய தரப்புக்கள் அல்லது ஆதிக்க தரப்பினர் தமக்கு கீழ் உள்ளவர்களை அல்லது சிறுபான்மையினரை வன்முறை கொண்டு ஒடுக்குகின்றனர். அதற்கு சிறுபான்மையினர் காட்டுகின்ற எதிர்வினை என்பது ஒருபோதும் வன்முறையல்ல. இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் சிங்கள அரசினால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வந்த நிலையில் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தின் நியாயம் இந்த அடிப்படையில் தான் முக்கியத்துவம் பெறுகிறது.

இன்றைக்கும் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்கின்றன. யாஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் இயக்குனரும் 2000-2004 வரையான நோர்வேயின் மத்தியஸ்த சமாதான நடவடிக்கையின் போது கொழும்பில் பிபிசி நிருபராக பணியாற்றியவருமான பிரான்சிஸ் ஹாரிசன் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் புதிய தலைமுறையொன்று படையினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என வலுவான ஆதாரங்களுடன் எழுதியுள்ளார். போருக்குப் பிறகும் இலங்கைத் தமிழர்கள் சித்திரவதைகளினால் ஒடுக்கப்படுகின்றனர் என்பதே அவர் முன்வைக்கும் வாதமாகும்.

வன்முறை என்பது ஆயுதம் கொண்டு மாத்திரம் நிகழ்த்தப்படுவதில்லை. அது நிராகரிப்புக்களால், உரிமை மறுப்புக்களால் கண்ணுக்குத் தெரியாத வகையில் திட்டமிட்ட ரீதியில் நிறைவேற்றப்படுகின்றன. காழ்ப்புணர்வும் வெறுப்பும் மிகுந்த அரசியல் உரைகள் மனங்களில் பெரும் குருதியிறைப்பை ஏற்படுத்துகின்ற வன்முறைகளாகும். "போரில் சரணடைந்தவர்களை நாயைப் போல சுட்டேன்.." என பேசுகின்ற ஜனாதிபதி ஆட்சி செய்கின்ற நாட்டில் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை எப்படி வேரூன்றி, புரையோடிப் போயிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

DEBT FREE CREDIT SOLUTIONS
DF CREDIT SOLUTION
We offer FREE of Consultation*

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

*Conditions Apply



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

416.834.7227
Tel 416.434.1522
Fax 1.877.800.7899

Head Office: 10 Milner Business Court, Suite 334, Toronto, ON M1B 3C6
Branch Office: 101 Palstan Road, Mississauga, ON L4Y 4E7

Info@DebtFreeCreditSolution.ca www.DebtFreeCreditSolution.ca

கனடிய செய்திகள்
Canadian News

# கியூபெக் மூத்தோர் இணையம் ஏற்பாடு செய்த ஒட்டவா வைத்தியநாதன் சிவன் கோவிலிற்கான சிவ பயணம்

அக்டோபர் 2, 2021 சனிக்கிழமை காலை 7:30 மணியளவில் கோட் தி நெஜ் (Côte-des-Neiges) கியூபெக் மூத்தோர் இணையத்திலிருந்து பல சிவபக்தர்களை கொண்டு மொன்றியல் திருமுருகன் கோவில் மேலும் பல பக்தர்களை அரவணைத்துக்கொண்டு மொத்தம் 33 பேருடன் (பெரியவர்கள் 30, சிறுவர்கள் 3) பெரிய பேருந்து ஆலயம் நோக்கி புறப்பட்டது.

கியூபெக் மூத்தோர் இணையத்தலைவர் ஐயா திரு. முத்துக்குமார் சிவானந்தன் பேருந்திலிருந்த அனைவரையும் அன்புடன் வரவேற்று வசதியை உறுதி செய்து தண்ணீர் போத்தல் வழங்கினார்.

பனிமூட்டத்துடன் சிறு தூறலுடன் சிவபக்தி பாடல்களுடன் இனிதே தொடங்கியது பயணம். இடையில் நிமிடங்கள் தேநீர் இயற்கை உபாதைகளுக்கு ஒதுக்கப்பட்டு பக்திபயணம் தொடர்ந்தது.

2 மணித்தியால பயணம் ஒட்டவா வைத்தியநாதன் கோவிலை சென்றடைந்தது. சிறிய அளவில் தற்போது கோவில் அமைந்தாலும் பெரிய கோவில்கட்டும் பணிக்காக காத்திருந்தது சிவனாலயம். சிவபக்தர்கள் அனைவரும் அர்ச்சனை, எள் தீபம் வேண்டி உள்நுளைய ஆலயம் நிரம்பி வழிந்தது.

கற்பகவிநாயகர், செல்வ முத்துக்குமாரசாமி இருபுறமும் வீற்றிருக்க வைத்தியநாத சுவாமி சிவலிங்கமாக தலையில் நாகமுடி சூட காட்சி தருகிறார். தையல்நாயகி அம்மாளும், நடராசா பெருமாளும்,நவக்கிரக மூர்த்திகளும் பைர-வரும், சூரிய பகவானும் உடனுறைந்திருக்கிறார்கள். எள் விளக்கு ஏற்றப்பட்டு வெளியில் வைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இடது பக்கத்தில் கொண்டையுடன் நம்பூதரி போலிருந்த பூசாரி சமசுகிரத்தில் மந்திரம் ஒத மனது ஏற்றுகொள்ளமறுத்தது. வருங்காலத்தில் சை-வசபை இதனை கருத்தில்கொள்ளவேண்டும். தமிழில் ஒதி இறையை துதிக்க வழி செய்ய வேண்டும். சிறு சிறு விடயங்களே பெரிய மாற்றத்திற்கான வழி என்பது எனது கருத்து. பிழையெனில் மன்னிக்கவும்.




மூத்தோர் இணைய தலை-மையாளர் ஐயா திரு. முத்துக்குமார் சிவானந்தன் கணீ-ரென தேவாரம் தீந்தமிழில் பாடி அந்த மனக்குறை தீர்த்தார். தொடர்ந்து கோளறு பதிகம் அனைத்து பக்தர்களாலும் பாடப்பட்டது. நானும் சேர்ந்து பாடினேன் இல்லை படித்தேன். இசையில் ஞான சூன்யம் நான்.

சிவாலயம் அமைப்பதற்க்காக நிதி திரட்டும் நோக்கோடு சைவ தோத்திர பாடல் திரட்டு என தமிழ் தேவாரம், திருவருட்பா உள்ளிட பக்கங்களை கொண்ட புத்தகம் $15 க்கும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட வலம்புரி சங்கு $100 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. நான் எதனை வாங்கியிருப்பேனென்று உங்களுக்கே தெரியும்.

முன்பே அறிவிக்க பட்டதால் சிறப்பாக அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.உணவின் சுவையை துல்லியமாக கண்ணடறியும் எனது மகளே நன்றாக உள்ளது என சாப்பிட்டாள் அன்னதானத்தை.

திருவாசகம், திருவருட்பா, இராமாயணம், திருக்குறள் உள்ளிட்ட பழைய பதிப்புகள் அடங்கிய சிறு நூலகமும் உள்ளே இருந்தது பரவசமூட்டியது. ஆலயத்தின் ஆண்டுமலர் இலவசமாக பக்தர்களுக்காக பரிந்துரைக்கப்பட்டது.

கோவிலின் வரலாறு தெரிந்து கொள்ள புரட்டிய போது திராவிட மக்கள் என எம்மினத்தை குறிக்கும் கட்டுரை கண்டு புத்தகம் கொடுத்தவரை நேரி-ல் கண்டு அடுத்த இதழில் மாற்றிவிடுங்கள் ஐயா அடையாளத்தை மறந்தது போதும் ஏமாந்தது போதும் என தமிழன்பியாக ஓர் வேண்டுகோலையும் வைத்து வெளிவந்தோம்.

ஆலயத்தின் முன்பும் பேருந்தின் முன்பும் புகைப்படம் எடுத்து கொண்டபின் வீடு நோக்கிய பயணம் தொடங்கியது.

உண்ட களைப்பில் சிறிது கண்ணயரலாம் என்றிருந்தவர்களின் எண்ணத்தில் தனது கணீரென்ற குரலால் மண்ணை போட்டார் திரு கேதீசுவரன் அண்ணா. அத்தனை கம்பீரமான குரலில் கோளறு பதிகத்தை மீண்டும் பாடி பொருளையும் விளக்க அருமையாக இருந்தது.

அதனை தொடர்ந்து மொன்றியல் நகைச்சுவை நாயகர் திரு பாலா அண்ணா அவர்களோடு சேர்ந்து நல்ல பாட்டுக்கள், நகைச்சுவை என வாய்விட்டு சிரிக்க வாய்த்திட்டது நல்ல வாய்ப்பு.

அன்றாடம் மாறிவரும் வாழ்வியல் மாற்றங்களுக்கேற்ப தன்னை தகல-றிவோடு தகவமைத்து கொள்ளும் நல்லதொரு கலைஞர், திறமைசாலி திரு பாலா அண்ணா அவர்கள்.

பெருந்தொற்றால் திரு பாலா அண்ணனுக்கு பெரும்பீதி போலும், மிக நீண்ட தாடியுடன் பாலா அண்ணா மதம் மாறியிருந்தார்.

காலையிலேயே பேருந்துக்காக காத்திருக்கும் போது தாடி மற்றும் முகக்கவசத்தோடு பாயை (பாலா அண்ணா) பார்த்து எனது துப்பறியும் மூளை திருமுருகன் கோவிலில் தீவிரவாதி என எனது சிந்தனைக்குதிரை பாகிஷ்தான், ஆப்கானிஷ்தான் வரை சென்று வந்தது வேறுகதை. திருமதி. புஷ்பராணி அவர்களின் கூத்துபாடலுடன், எனது பயணம் பற்றிய கருத்தும் அவதானிப்பும் பகிர்திடும் வாய்ப்பும் கிடைத்தது.

அ,ஆ அணிகள் பிரிக்கப்பட்டு பாட்டுக்கு பாட்டும் நடந்தது. படும் திறமை கொண்ட பல படகிகளை நமது சமூகம் குசினியில் விட்டுவிட்டது வருத்தத்திற்குரியது. ஆனால் தற்போது அப்படி இல்லை விஜய் தொலைக்காட்சியில் பாடுவதையே தனது லட்சியமாக கொண்டு வளர்ந்து வருகிறது நமது சமூகத்தின் ஒரு பகுதி.

ஐயா திரு.முத்துக்குமார் சிவானந்தன் அவர்களின் எப்படி சிறப்பான நல்வாழ்வு வாழலாம் என்ற உரையும் அருமையான குரலில் தேவாரபாடலும் உள்ளத்தை கொள்ளை கொண்டு சிந்திக்கவும் தூண்டியது.




திருமதி தவராஜாசிங்கம் குடுமனத்தினர் அம்மாளின் அன்பினால் அனைவருக்கும் வடைகள் ,எள்ளுருண்டை தாங்கிய சுவையான பலகார பொதி கிடைத்தது. விடியற் காலை மணியிலிருந்து பல-காரம் செய்து அழகாக பொதி செய்து அத்தனை பக்தர்களுக்கும் கொண்டு வந்திருந்த அவரது அன்பு நெகிழ்வாக இருந்தது. மேலும் சில அன்பர்களால் வேர்க்கடலையும், பல்கடலை இனிப்பும் வழங்கபட்டது.

எள்ளுருண்டை செய்முறையை பக்கத்திலிருந்த அம்மாள் விளக்க எனது தந்தையார் போலிருந்த அவரது கணவர் "செய்முறை எல்லாம் நல்லாத்தான் சொல்லுவா! செய்யத்தான் மாட்டா" என்று தனது மனைவியை சீண்ட அந்த அம்மாளோ விடாமல் "நல்லா செய்து நல்லா சாப்பிட்டதால தான் சர்க்கரை என்றிருக்கிறீர்கள்" என்று கூற பார்க்கவே அவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாக நின்று வாழ்ந்த அவர்களது நிறைவான வாழ்வு அழகிய கவிதையாய் எனக்கு தோன்றியது.

மீண்டும் ஒரு சிறிய தேநீர் இடைவெளியோடு மொன்றியல் திருமுகன் ஆலயத்தை மாலை 3:30 மணியளவில் அடைந்து அங்கே சில பக்தர்களை விட்டு கோட் தி நெஜ் (Côte-des-Neiges) மூத்தோர் இணையத்தை நோக்கி நகர்ந்தது பேருந்து.

மொத்தத்தில் ஒட்டவா வைத்தீசுவரம் ஆலய பயணம் பக்தி பரவச பயண-மாகவும் மனிதர்களை சந்தித்து கதவை திற காற்று வரட்டும் என்பது போன்ற ஒரு புத்துணர்வு பயணமாகவும் இருந்தது.

வாய்ப்பு உள்ளவர்கள் சென்று வாருங்கள். மொன்றியலில் இருந்து 2 மணித்தியால பயணம் தான். மறக்காமல் புதிய ஆலய பணிக்கு நன்கொடையாக அர்ச்சனையோ, எள்விளக்கோ, புத்தகமோ, வலம்புரி சங்கோ பண்டமாற்று செய்து பயன்பெறுங்கள். பயன்படுபவராய் இருங்கள்.

திருச்சிற்றம்பலம்
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

குறிப்பு:

சிறு+அம்பலம்= சிற்றம்பலம். சிறிய வெளி என்று பொருள். அம்பலம் - வெளி, ஆகாயம். நமது இதயத்தில் ஒரு சிறு வெளி இருப்பதாகவும் அதில் கட்டைவிரல் அளவே நம் ஆன்மா இருப்பதாகவும் கடோபநி'த் கூறுகிறது. அவ்வான்மாவுக்குள் ஆன்மாவாய் இறைவன் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டிருப்பதாய் சிவாகமங்கள் கூறுகின்றன. இதனை நம் போன்றோர் உணர்ந்து வழிபட்டு உய்வதற்காக தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் இறைவன் திருக்காட்சியளித்ததாக கோயில்புராணம் எடுத்துரைக்கின்றது.

அதாவது நாம் தான் அது, அதுவே நாம் என்பதை உணர்த்துவதற்க்கே இந்த ஆனந்த திருநடனம். அதாவது மனிதனின் அகம் ஒரு கோயில் உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம், திருச்சிற்றம்பலம் என்றால் நம்முள் இருக்கும் ஆன்மாதான்.பொதுவே தில்லையை சுற்றி வசிக்கும் மக்களும், சிவனே சிவம் என்று உணர்ந்த ஆன்மீக பெருமக்களும் ஒருவருக்கொருவர் பார்க்கும் போதும், பேசும் போதும், தொடக்கத்திலும், முடிவிலும் இரு கைகூப்பி திருச்சிற்றம்பலம் என்று கூறுவர். அதற்க்கு எதிர்புரம் உள்ளவர் தில்லையம்பலம் என்று பதில் வணக்கம் கூறுவர். இதற்க்கு என்ன பொருள் என்றால் உண்ணுள் இருக்கும் (பிண்டத்தில் இருக்கும் உன் ஆன்மா அண்டத்தில் கரையட்டும்) உன் ஆன்மா சிற்றம்பலத்தில் இருக்கும் உன் ஆன்மா நிறைவு பெறுவதாக பரிபூரணமாவதாக என்று பொருள். அதற்க்கு எங்கே செல்ல வேண்டும் என்றால் தில்லையம்பலம் என்று எதிரில் உள்ளவர் பதில் வணக்கம் சொல்லுவர்.




உங்களை பார்த்து இனிமேல் யாராவது திருச்சிற்றம்பலம் என்று சொன்னால் உங்கள் ஆத்மா நிறைவுபெறட்டும் என்று அவர்கள் வாழ்த்துகிறார்கள் என்று அர்த்தம். பதிலுக்கு தாங்களும் தில்லையம்பலம் என்று கூறவேண்டும். கூறுவதோடு நில்லாமல் தில்லையம்பலத்தில் உள்ள ஆனந்த கூத்தனை தரிசிக்க வேண்டும். உருவத்தில் இருந்து அருவமாக உன் ஆன்ம கரைய வேண்டும் என்றால் தில்லைக்கு போக முக்தி. இதனை உணர்த்தவே திருசிற்றம்பலத்தில் நடராஜ பெருமான் மனித ரூபத்தில் ஆனந்தகூத்தாடுகிறான்.

**நன்றி**
**இளவரசி இளங்கோவன்**
**மொன்றியல், கனடா**

# "மக்களுக்குத் தேவையான தகவல்களை முதன்மைச் செய்திகளாக வழங்கி வரும் யுகம் வானொலிக்கு பாராட்டுக்கள்"

## கனடா "யுகம்" வானொலி ஆண்டு விழாவில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புகழாரம்"





"இங்கு வாழும் எமது தமிழ் மக்களுக்கும் மற்றும் உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்குக் தேவையான அத்தியாவசிய தகவல்களை முதன்மைச் செய்திகளாக வழங்கி வரும் யுகம் வானொலியானது ஒரு பயனுள்ள ஒலிபரப்பு ஊடகமாகவும் இணையவழி ஊடகமாகவும் இயங்கிவருதை அனைவுரும் அறிகின்றோம். அவ்வாறான தமிழ் வானொலியை நடத்தி வருகின்ற கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களுக்கும் ரூபி யோகதாசனுக்கும் எமது பாராட்டுக்கள்".





இவ்வாறு கனடா "யுகம்" வானொலி ஆண்டு விழாவில் வாழ்த்துரை வழங்கிய ஒன்றாரியோ தமிழ் பேசும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய திருவாளர்கள் லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகியோர் புகழாரம் சூட்டினர்.

ஸ்காபுறோவில் மார்க்கம்-மெக்னிக்கல் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள "மெஜஸ்ட்டிக் சிற்றி" தமிழ் வர்த்தக வளாகத்தில் அமைந்துள்ள இந்த யுகம் வானொலியின் ஒலிபரப்புக் கூடல் அதிகளவில் பெண் அறிவிப்பாளர்களைக் கொண்டு இயங்கிவருகின்றது.

"மெஜஸ்ட்டிக் சிற்றி" தமிழ் வர்த்தக வளாகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த ஆண்டு விழாவில் வர்த்தக அன்பர்கள். ஊடக நண்பர்கள். கலை இலக்கிய நண்பர்கள் என நூற்றுக்கணக்கான அழைக்கப்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளைத் தலைவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அங்கு உரையாற்றுகையில் "கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையின் செய்தியாளராக பணியாற்றிய காலந்தொட்டு நான் அறிவேன். அவர் கனடாவில் காலடி எடுத்து வைத்த நாட் தொடக்கம் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து வருகின்றார்.

நடிப்பு- ஒலிபரப்பு - படைப்பிலக்கியம் - அச்சு ஊடகம் என பல துறைகளில் காலபதித்த வெற்றியாளர் ஆவார்.

அவரது ஓய்வற்ற உழைப்புத் தான் இன்று அவரது "யுகம்" வானொலி உலகம் எங்கும் உள்ள தமிழ் மக்கள் ஆர்வத்துடன் செவிமடுக்கும் வானாலை ஊடகமாக விளங்குகின்றது" என்றார்.

ஏனைய கலை இலக்கிய நண்பர்களும் அங்கு உரையாற்றினார்கள். வானொலி நிலையத்தில் பணியாற்றும் ஒலிபரப்பாளர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் உட்பட அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களால் கௌரவிக்கப்பெற்றனர்.





**- படங்கள்: சத்தியன் மற்றும், ஈசி 24 நியுஸ் செய்தி சத்தியன்**

சினிமா

# "அண்ணாத்த" படத்தில் எஸ்பிபி பாடிய பாடல் வெளியீடு: ரஜினிகாந்த் உருக்கமான பதிவு



நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் சிவா இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அண்ணாத்த திரைப்படம் உருவாகியுள்ளது. இந்த திரைப்படத்தில் நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், மீனா, குஷ்பு உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். டி இமான் இசையமைத்துள்ளார்.

அண்ணாத்த படத்தின் பர்ஸ்ட் லுக்கும் மோஷன் போஸ்டரும் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றன. தற்போது "அண்ணாத்த அண்ணாத்த" என்ற பாடல் வெளியாகியுள்ளது. இந்த பாடலை மறைந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடியுள்ளார்.

ரஜினி படங்களில் அவரது அறிமுகப் பாடலை பெரும்பாலும் பாலசுப்பிரமணியமே பாடுவார். பாட்ஷாவில் வரும் நான் ஆட்டோக்காரன், முத்துவின் ஒருவன் ஒருவன் முதலாளி, அருணாச்சலத்தில் அதாண்டா இதாண்டா அருணாச்சலம் நான்தாண்டா. ஆகிய பாடல்கள் ரஜினிக்காக எஸ்.பி.பி பாடிய பாடல்களாகும்.

எஸ்.பி.பி பாடினாலே ஹிட் தான் என்ற பெயர் உள்ளது. அந்த வகையில் அண்ணாத்த படத்தில் இடம்பெற்றுள்ள இந்த பாடலும் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "45 வருடங்கள் என் குரலாக வாழ்ந்த எஸ்பிபி அவர்கள் அண்ணாத்தே படத்தில் எனக்காகப் பாடிய பாடலின் படப்பிடிப்பின் போது, இதுதான் அவர் எனக்குப் பாடும் கடைசிப் பாடலாக இருக்கும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. என் அன்பு எஸ்பிபி தன் இனிய குரலின் வழியாக என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஜினி நடிப்பில் வெளியாகும் அண்ணாத்த திரைப்படம் நவம்பர் 4 ஆம் தேதி தீபாவளி அன்று வெளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.






# "காவிரி, தென் பெண்ணை, பாலாறு நதிக்கரைகளையும் அகழாய்வு செய்தால் மேலும் பல நல்ல தகவல்கள் கிடைக்கும்"

## தொல்லியல் கண்காணிப்பாளர் அமர்நாத் நம்பிக்கை

- தீபச்செல்வன்



இந்திய தொல்லியல் துறை சார்பில் முதன்முறையாக மதுரையை அடுத்த கீழடியில் அகழாய்வு மேற்கொண்டவர், அத்துறையின் கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன். ஒன்றிய அரசு திடீரென்று அவரை வடமாநிலத்திற்கு மாற்றியது.

தற்போது, 4 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தமிழகத்தில் தென்னிந்தியக் கோவில்களின் தொல்லியல் கண்காணிப்பாளராக அவர் நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

இதையடுத்து அவர் ஒரு நேர்காணலில் தெரிவித்ததாவது: "கீழடி அகழாய்வு குறித்த எனது இடைக்கால அறிக்கை மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் முழு அறிக்கையும் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும். மீண்டும் நான் தமிழகத்தில் பொறுப்பு ஏற்றுள்ளதால் இந்த பணிகள் விரைவில் முடிவடையும்.

பொருநை நதி (தாமிரபரணி), வைகை நாகரிகம் மட்டுமல்ல் காவிரி, தென்பெண்ணை ஆறு பாலாறு ஆகிய நதிக்கரைகளையும் அகழாய்வு செய்தால் மேலும் பல நல்ல தகவல்கள் கிடைக்கும். சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சிதான் பொருநை நதி நாகரிகம்.

கீழடியில் நான் பொறுப்பில் இருந்தபோது கண்டறியப்பட்ட பொருட்கள் சென்னையில் உள்ளன. இதுகுறித்த தொடர் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளேன்.

தர்மபுரியில் பென்னாகரம் அருகே பெருங்கற்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு தங்கள் முன்னோர்களை அடக்கம் செய்தார்கள் என்பது குறித்த அரிய கற்கள் கிடைத்துள்ளன, அது தற்போது தொல்லியல் துறையால் பழமையான இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை பெருங்கற்காலத்தில் எவ்வாறு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்ற விவரம் கிடைக்காத நிலையில், இதுபோன்ற அரிய கற்கள் கிடைத்துள்ளன. இது, ஆராய்ச்சிக்கு பேருதவியாக இருக்கும்".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# "சமூகப் பார்வையும் முயற்சியும் வாசிப்புப் பழக்கமும் இருந்தால் எவரும் எழுத்தாளராகி விடலாம்"

## கனடாவில் நடைபெற்ற தமிழ்நாடு "இனிய நந்தவனம்" அறிமுக விழாவில் "உதயன்" பிரதம ஆசிரியர் தெரிவிப்பு







"நாம் அனைவரும் வாழும் சமுதாயத்தில் பல விடயங்கள் ஒவ்வொரு நிமிடத்திற்கும் இடம் பெற்று வருகின்றன. அவற்றை படைப்புக்களாக தருவதற்கு சமூகப் பார்வையும் முயற்சியும் வாசிப்புப் பழக்கமும் தேவை. அவ்வாறு இவை மூன்றும் இருந்தால் எவரும் கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகியும் வந்துவிடலாம்""

இவவாறு கனடாவில் நடைபெற்ற தமிழ்நாடு "இனிய நந்தவனம்" அறிமுக விழாவில் "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தெரிவித்தார் நேற்று வெள்ளிக்கிழமை 2021-10-01 அன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியிட்ட இனிய நந்தவனம்செப்டம்பர் மாத கனடா சிறப்பிதழ் அறிமுக விழா ரொறன்ரோவில் உள்ள பைரவி மியூசிக் அக்கடமி கலையகத்தில் மாலை 7:00 மணியளவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கோவிட் -19 கட்டுப்பாடுகளுக்கமைய இருக்கை வசதிகள் போடப்பட்டிருந்தன. பார்வையாளர்கள் முகக்கவசம் அணிந்திருந்தார்கள். இரண்டு தடுப்பூசியும் பெற்றுக் கொண்டவர்களே அரங்கத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிகழ்வை கனடா உதயன் பிரதம ஆசிரியரும், இனிய நந்தவனம் ஆலோசனைக்குழு உறுப்பினருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது. விழாத் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் உரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம் பெற்றன. எழுத்தாளர் திரு. வாகீசன், கவிதா செந்தில், கணபதி ரவீந்திரன் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் நூல் பற்றிய ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து இனிய நந்தவனம் கனடா மலர் வெளியிடப் பெற்றது. முதற் பிரதியை எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களிடம் இருந்து வர்த்தகப் பிரமுகரும், கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவருமான சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை வர்த்தகப் பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கனடா சிறப்பிதழில் சிறுகதைகள், கவிதைகள், சிறுவர் பாடல்கள், கட்டுரைகள், நூல் ஆய்வுரை, நேர்காணல், உரையாடல், சேவைப்பாராட்டு, கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் தலைமையகக் கட்டிடத் திறப்புவிழா செய்தி போன்ற பல ஆக்கங்களும், தகவல்களும் இடம் பெற்றிருந்தன. செப்ரெம்பர் இதழில் கனடிய கவிஞர்களான கவிஞர் வி. கந்தவனம், கவிஞர் சிவா சின்னத்தம்பி, விருத்தக்கவி வித்தகர் தேசபாரதி வே. இராசலிங்கம், அருட்கவி ஞானகணேசன், கவிஞர் அனலை ஆ. இராசேந்திரம், கவிஞர். க. குமரகுரு, கவிஞர் அகணி சுரேஸ், கவிஞர் வ. ந. கிரிதரன், மட்டுவில் ஞானகுமாரன், சுதர்சன் மற்றும் குரு அரவிந்தனின் சிறுவர் பாடல்களும் இடம் பெற்றிருந்தன. அக்ரோபர் மாத சேவைச் சிறப்பிதழிலும் கவிஞர் திருமதி பவானி தர்மகுலசிங்கம், கவிஞர் மா. சித்திவினாயகம், கவிஞர் சி. சண்முகராஜா ஆகிய கனடியக் கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றிருந்தன.

கலாநிதி மைதிலி தயாநிதி, மு. முருகேஷ் ஆகியோரது நுல் ஆய்வுக்கட்டுரைகள், எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களுடனான நேர்காணல், இந்திராணி நாகேந்திரலிங்கத்துடன் உரையாடல், நூல் நயம், சசிகலா நரேந்திரன் பற்றிய அறிமுகம், மற்றும் ராஜ்ஜா, நாச்சியார், நந்தவனம் சந்திரசேகரன், பா. தென்றல், மாலதி சந்திரசேகரன், மு. முருகேஷ் ஆகியோரது ஆக்கங்கள். ஆர். என். லோகேந்திரலிங்கம், மாலினி அரவிந்தன் ஆகியோரது சிறுகதைகள் மேலும் பல ஆக்கங்கள் இந்தக் கனடா சிறப்பிதழில் இடம் பெற்றிருக்கின்றன.

நூல் வெளியீட்டின்பின் சிற்றுண்டிகள் வழங்கப்பெற்றன. அதன்பின் கனடா மலர் பற்றிய பார்வையாளர்களின் கருத்துப் பரிமாறல் இடம் பெற்றது. மலரில் இடம் பெற்ற அகணி சுரேஸ் அவர்களின் பாடல் இப்போது ஒலி வடிவம் பெற்றிருப்பதாக கவிஞர் அகணி சுரேஸ் தெரிவித்தார். குமரகுரு, ஞானகணேசன், இந்திராணி, சசிகலா. சிவா ஆகியோர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். உலகமெங்கும் உள்ள ஒவ்வொரு தமிழரின் திறமையையும் இனங்கண்டு அவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் இனிய நந்தவனம் ஆசிரியரான த. சந்திரசேகரனைப் பலரும் பாராட்டித் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். ஆக்கங்கள் இடம் பெற்றவர்களின் சார்பாக எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். அவர் தனது நன்றியுரையில் இந்த விழவை ஏற்பாடு செய்த ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும், உரையாற்றியவர்களுக்கும், சிறப்பாக நடைபெற வருகை தந்தவர்களுக்கும், உதவிகள் வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும், மண்டபத்தைத் தந்துதவிய பைரவி மியூசிக் அக்கடமி அதிபருக்கும், மற்றும் கனடா சிறப்பு மலரை வெளியிட்டுக் கனடிய படைப்பாளிகளையும், தன்னார்வத் தொண்டர்களையும் உலகறியச் செய்த இனிய நந்தவனம் ஆசிரியர் த. சந்திரசேகரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இரவு 9:00 மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது.




கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்
POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
உதயன்
வெள்ளி விழாவும்
நண்பன் WORLDWIDE
விருது விழாவும்
Tasty தமிழா
30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்
கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து
Covid-19
கட்டுப்பாடுகளுக்கு
ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்
Netwyn.Place
Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4
அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512


An Authentic Tamil Take-out & Catering Restaurant
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
CAMSONICS
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD.
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS.
CAMSONICS :- 905 216 8966
Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesh Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
PACE LAW FOR 40 YEARS
SERIOUS INJURY LAWYERS
Call: Poorany Sornabala
647 968 7259
PACE LAW SERIOUS INJURY LAWYER
191 The West Mall Suite 1100, Toronto, ON M9C 5K8, Canada
Phone: 1-877-236-3060 - Fax: 416-236-1809, info@pacelawfirm.com
Ethos COMMUNICATIONS
We wish Uthayan Publishers Team, all the very best as they celebrate 25 glorious years in Publishing and Community Service.
BUY - SELL - INVEST - LEASE
Rajeef Koneswaran
Manager
(416) 282-4444
RE/MAX COMMUNITY
1265 Morningside Ave,Suite 203 Scarborough, Ontario, M1B 3V9
சங்கர் அன் கோ.
SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE, EAST UNIT # 8 SCARBOROUGH ON (Kennedy & Eglinton)
Tel: 416 759 5100 Fax: 416 759 4916
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
647.716.5252
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
MORTGAGE ALLIANCE
Krishna Punniyam
Mortgage Agent
YOUR HOME SOLD GUARANTEED AT THE PRICE YOU WANT, OR I'LL BUY IT
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd,Unit 3 Toronto, ON M1P 2L5
CGA
NIMALRAJ VINAYAGAMOORTHY
Certified General Accountant
5200 Finch Ave E, Unit # 300
Scarborough, ON M1S 4Z4
Telephone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com
R.R.Rajkumar
647-289-6164
அம்மா
AMMA PAWN BROKER
SANTHA
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
Sharuthie Windows
1755 Bough Beeches Blvd, Mississauga, ON. L4W 2B9
Tel: 416 844 4373
Residential & Commercial
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
Serving the Tamil Community
Debt Problems ?
V. SRI
Amal
Abi
Homelife /Future Realty Inc., Brokerage
வீடு வாங்க விற்க
Nathan Sivagnanam
Sales Representative
Direct: 416.888.7038
Office: 905.454.4000
Formula Honda
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
647-833-4998
Buy - Sell - Invest
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
CANADIAN HOME APPRAISAL INC.
S.K.Bales
Bus:- 416- 438- 2200
Cell:- 416- 801- 3219
TechSource
Computer & Electronics Liquidator
TEL: (416)757-9111
1260 KENNEDY RD, SCARBOROUGH, ON M1P 2L4
Keith Sanmugathas
Sam Sanmugathas
PROPERTY MAX
416-666-9464 416-291-0005
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd, Unit #3, Scarborough, ON M1P 2L5
Tel: 416 270 1111
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
5200 Finch Ave East #313 Scarborough (Middlefield & Finch)
416-754-4024
ANGELS FASHION CENTRE
Majestic City Mall
Sarees & Jewellery
Tel: 416-854-5622
Unit: G3 2900 Markham Road Scarborough ON, M1X 0C8
Wedding Service & Party Hall
VIMIKA
BANQUETS & CATERING
Call for Booking:- Giri
416-428-3333 416-704-9755
Mortgage Architects
Sabesan Sivasubramaniam
Seithy.com
east FM 102.7
ஈழநாடு
GTA தமிழ்
Easy 24 News

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

Joy Square Towns
Corebridge

Copperhill South Barrie
Deer Creek Fine Homes

Alba Condos
Edenshaw Developments Limited

Arte Condos
EMBLEM

Vincent Condos
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Guglietti B...

Adagio Condos
Menkes Developments Ltd.

Kensington District Towns
Lynbury Homes

Minu Towns
Stateview Homes

Exchange District Condos 3
Camrost Felcorp

WestLine Condos
CentreCourt Developments Inc.

U.C. Tower 2
Tribute Communities and Riocan Real Estate Investment Trust

Verge Condos
Riocan Real Estate Investment Trust

Gemma Condos
Pinnacle International



## Bala Logendralingam
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

## Clinic Location:
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



சென்றவாரத் தொடர்ச்சி...

# கருத்தியல் இதயத்தில் ஒரு ஈட்டி

- திசாராணி குணசேகரா

(முழுச் சிங்கள சமூகமும் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள அறிவுப்பிழைப்பாளர்கள் மத்தியில் நியாயத்தை, நீதியை கடைப்பிடிப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் இக்கட்டுரையாளர். **Colombotelegraph** இணைய தளத்தில் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையை **https://www.colombotelegraph.com/index.php/a-stake-through-the-ideological-heart/comment-page-1/?unapproved=2408930&moderation-hash=19e840286504054d4ee667c05aa61834#comment-2408930p;pmnp** என்ற முகவரியில் படிக்கலாம். தமிழாக்கம் நக்கீரன்)

இராசபக்ச இராச்சியம் அல்லது இலங்கை?

2011 ஆம் ஆண்டில், இராசபக்ச ஆட்சி சூரியவேவா 1,435 ஏக்கர் விளையாட்டுக் கிராமத்தை உருவாக்க 6 குளங்களை நிரப்பிக் கட்டும் திட்டத்தை கொண்டு வந்தது. இது ஒரு உலர் மண்டலத்தில், நீர் இழப்பு வாழ்வாதாரங்களை மட்டுமல்ல, உயிர்களையும் அழிக்க வழிவகுக்கும். இத்தகைய குளங்களை நிரப்புவதால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள - பவுத்தர்கள்



மற்றும் அடிமட்ட இராசபக்சா ஆதரவாளர்களாக இருந்தனர். இந்தத் திட்டம் பேரழிவு மற்றும் ஆபத்து நிறைந்தது என்பதால் சாமல் இராசபக்சா கூட அதனை எதிர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தத் திட்டம் நிறைவேறவில்லை. ஆனால் அதன் கருத்தாய்வு இராசபக்ச அரசியலின் உண்மையான மக்கள் எதிர்ப்புத் தன்மையை அம்பலப்படுத்துகிறது.

இராசபக்சா ஆட்சியின் முழுத் துயரத்தையும் இரண்டகத்தையும் ஒரு அண்மைச் சம்பவம் விளக்குகிறது. இணையத்தில் பரவி வரும் ஒரு காணொளி, அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் காவல்துறையினரின் ஒரு குழு, பத்தேகமவில் ஒரு மெதுவோட்டப் பாதை **(jogging track)** அமைக்க ஒரு பெண்ணைத் தனது நிலத்தை கொடுக்கக் கட்டாயப்படுத்தப் பட்டதைச் சித்தரிக்கிறது. அந்தப் பெண் தனது காணியை அரசுக்கு எழுதித் தருமாறு அந்த அதிகாரி பலமுறை வற்புறுத்துகிறார். அவரது காணியின் பெறுமதிக்கு ஈடாக எதுவும் கொடுக்கப்படவில்லை. முழு இழப்பீடு இல்லாவிட்டாலும் குறைந்தளவு இழப்பீடு தருவதாகக்கூட எந்த வாக்குறுதியும் வழங்கப்படவில்லை. அந்தப் பெண் - நிச்சயமாக ஒரு சிங்களவர் - காணியை எழுதிக் கொடுக்க மறுக்கிறார்.

தனக்கு இருக்கும் ஒரே சொத்து இந்தக் காணி மட்டுந்தான் என்கிறார். அவருக்கு செல்ல வேறு இடமில்லை. வாழ்வாதாரம் இல்லை. அவர் முன்னர் ஒருமுறை தனது காணியின் ஒரு பகுதியைச் சாலைத் திட்டத்திற்குக் கொடுத்துவிட்டார். ஆனால் அவர் இன்றுவரை ஒரு சல்லிக்காசைக் கூட இழப்பீடாகப் பெறவில்லை. மீதமுள்ள காணியை மெதுவோட்டப் பாதைக்காகக் கொடுக்க அவர் அணியமாக இருக்கிறார். ஆனால் தனக்கு நிதி வழங்கப்பட வேண்டும் என்கிறார். நியாயமான இழப்பீடு அல்லது வேறொரு காணி தரப்பட வேண்டும் என்கிறார். சனாதிபதியிலிருந்து கீழ்மட்டத்திலுள்ள (அதிகாரிகள்) அனைவருக்கும் கடிதங்கள் எழுதினேன் ஆனால் எந்தவிதமான பலனும் இல்லை என்று அவர் கூறுகிறார். **(News 19 Alerts)**

2011 இல், இராசபக்சா ஆட்சி புனித பூமிகள் சட்டத்தை கொண்டு வந்தது. அந்தச் சட்டம் இயற்றப்பட்டிருந்தால், புத்தசாசனம் மற்றும் மத வழக்காரங்கள் துறை அமைச்சர் ஒரு காணி அல்லது கட்டிடத்தைக் கையகப்படுத்த எளிய அதிகாரம் கொண்ட ஒரு அரசிதழ் மூலம் - ஒரு பாதுகாப்பு பகுதி, ஒரு சேமிப்பு பகுதி, ஒரு கட்டிடக்கலை அல்லது வரலாற்றுப் பகுதி அல்லது ஒரு புனித பகுதி எல்லா வற்றையும் பவுத்த சாசன அமைச்சர் கையகப்படுத்தலாம். இந்தச் சட்டம் ஏற்கனவே நாடாளுமன்ற ஒழுங்கு ஆவணதில் **(order paper)** இருந்தது. உச்ச நீதிமன்றம் மாற்றுக் கொள்கைக்கான மையம் **(Centre for Policy Alternatives (CPA)** தொடுத்த வழக்குக்குப் பதிலளிக்கும் போது, 13 ஆவது திருத்தத்தின் கீழ் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருள் என்பதால் அனைத்து மாகாண சபைகளின் ஒப்புதல் தேவை என்று தீர்ப்பளித்தது. கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் சம்மதிக்க மறுத்து, சட்டத்தை திரும்பப் பெற அரசாங்கத்தை கட்டாயப்படுத்தின. (இந்தத் தீர்ப்பு தலைமை நீதியரசர் சிஜே ஷிராணி பண்டாரநாயக்கவின் சட்டவிரோத குற்றச்சாட்டுக்கு **(illegal impeachment)** வழிவகுத்தது.

புனித பூமிச் சட்டம், சட்டமாக மாறியிருந்தால், பத்தேகமவில் உள்ள அந்தப் பெண்ணும், அவரைப் போன்ற இலட்சக்கணக்கானவர்களும், இழப்பீடு இல்லாமல் தங்கள் சொத்தை இழந்திருப்பார்கள். கொடி பிடித்தல் மற்றும் முழக்கம் எழுப்புவதற்குப் பின்னால் உள்ள இராசபக்சாவின் உண்மைத் தோற்றம் இதுதான்.

வறுமை, வேலையின்மை மற்றும் அநீதி அதிகரிக்கும் போது, மேலும், மேலும் அதிகமான சிங்கள - பவுத்தர்கள் (6.9 மில்லியன் வாக்காளர்களில் பலர் உட்பட) இராசபக்சா அவர்களின் பைத்தியக்காரத்தினை கண்டுகொள்வார்கள். சிறுபான்மையினரைப் பேய்களாக மாற்றுவதன் மூலமே இராசபபக்சாவின் மக்கள் செல்வாக்கின்மையை சமாளிக்க முடியும். அத்தகைய ஒரு மூலோபாயம் செயல்படும் ஆபத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது. இராசபக்சா அவர்களின் திட்டத்தின் உண்மைத் தன்மையைத் தொடர்ந்து அம்பலப்படுத்து, சிங்கள-பௌத்தர்கள் எவ்வாறு பெரும்பான்மை மேலாதிக்கவாதத்தை கீழறுத்தது என்பதைப் புரிந்து கொள்ளச் செய்வது மட்டுமே ஒரே வழி - மற்றும் அவர்களின் சொந்தப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைத் தொடர்வதே நமக்கு இருக்கும் ஒரே வழி ஆகும். சிங்கள-பவுத்தர்கள் எவ்வாறு பெரும்பான்மை மேலாதிக்கத்தை கீழறுத்தது அவர்களின் சொந்தப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை குறைமதிற்புக்கு உட்படுத்தியது போல் - தொடர்ந்து குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

இராணுவத்தை முகாம்களுக்குத் திருப்பி அனுப்பாத வரை இலங்கையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியாது (மதம் மற்றும் அவர்களின் உத்தியோகபூர்வ பூசாரிகளும்) அரசியலில் இருந்து அகற்றப்படாது விட்டால், இராணுவமயமாக்கல் மற்றும் அரசியல் மதங்கள் இராசபக்சாவுக்குப் பிந்தைய எதிர்காலத்தைக் கூட நச்சுப்படுத்தும். அவற்றின் மிதமிஞ்சிய தன்மை, கருத்து வேறுபாடு சகிப்புத்தன்மையின்மை மற்றும் வன்முறைத் தீர்வுகளுக்கான நாட்டம் அதிகரிக்கும்.

எடுத்துக்காட்டாக, இராணுவம் தனது சொந்த அரசியல் மற்றும் நிதி நலன்களைப் பாதுகாப்பதற்காக எதிர்காலத்தில் இராசபக்சாவுக்கு எதிரான இயக்கத்தின் தலைமையை கைப்பற்ற முடியும். இராசபக்சாவின் அதிகாரப் பசியைப் போக்க புத்தரின் பிம்பத்தையும் போதனைகளையும் தவறாகப் பயன்படுத்த முடியும். கிட்டத்தட்ட எழுபது மில்லியன் இலங்கையர்களை ஏமாற்றுவதற்கு உதவிய அதே அரசியல் பிக்குகள், இப்போது இராசபக்சாவிற்குப் பிந்தைய இலங்கையில் வாழவும் வளரவும் வழிகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கின்றனர். அவர்களின் முயற்சிகள் வெற்றி பெற்றால், அந்த எதிர்காலத்திற்கும் இந்த நிகழ்காலத்துக்கும் ஒரே குறிப்பிடத்தக்க வேறுபாடு இராசபக்சாக்கள் இல்லாததுதான்.

இராசபக்சாவை மட்டுமல்ல, அவர்களின் சித்தாந்தத்தையும் வரலாற்றின் சாம்பல் மேட்டுக்கு ஒப்படைக்க, எல்லா வகையான தீவிரவாதத்திற்கும் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கை தேவைப்படுகிறது. தீவிரவாதியின் நம்பிக்கைகள் முக்கியமற்றது. நல்ல தீவிரவாதிகளும் இல்லை, நல்ல இனவெறியர்களும் இல்லை.

அதேபோல பாகுபாட்டிற்கு எதிரான போராட்டம் பாரபட்சமாக இருக்கக்கூடாது. அனைத்துக் குடிமக்களும் ஒரே அடிப்படை உரி-



மைகளை அனுபவிக்கும் இலங்கையாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக முஸ்லீம் ஆண்கள், தாங்கள் சிங்களவர்களால் சமத்துவமற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள் என முறைப்பாடு செய்ய முடியாது. (சிங்கள பவுத்தத்தின் அடிப்படையில் தங்கள் பாகுபாட்டை நியாயப்படுத்துபவர்கள்), அவர்கள் இஸ்லாத்தின் பெயரால் தங்கள் சொந்தப் பெண்களை சமமற்ற முறையில் நடத்தப்படுவதைத் தொடர்ந்து நியாயப்படுத்துகிறார்கள்.

இலங்கையின் எதிர்காலம் அதன் கடந்த காலத்தை விட சிறந்ததாக இருக்க வேண்டுமானால், தீவிரவாதிகள் தேசிய நிகழ்ச்சி நிரலை வடிவமைத்து தேசியப் பாதையை அமைக்கும் வழக்கம் முடிவுக்கு வரவேண்டும். இராசபக்சாக்களை வீழ்த்துவது அதற்கு அவசியமான ஒரு நிபந்தனையாகும். அது ஒரு தொடக்கம்தான். (முற்றும்)




30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....



மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...

தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும் 'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் விஜயதசமி பண்டிகைக்குத் தேவையான அனைத்து வகை பொருட்கள், கொலு வைப்பதற்குத் தேவையான அழகிய கடவுளர்களின் சிலைகள், ஏனைய பொம்மைகள் மற்றும் மாலைகள் அனைத்தையும் இறக்குமதி செய்துள்ளார்கள்.






காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

## நூல் வெளியீடு

எழுத்தாளர்

திரு. எஸ். பத்மநாதன்

அவர்களின்



சிந்தனைப்பூக்கள்

பாகம் - 4 + பாகம் - 5

காலம்:
2021 ஒக்டோபர் 22 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 5:30 மணி முதல்

இடம்:
தமிழ் இசைக் கலாமன்ற மண்டபம்
1121 Tapscott Road, Unit 3,
Scarborough, On M1X 1E8

அன்புடன்,
விழாக் குழுவினர்,
மார்க்கம் முதியோர் நலன்புரிச் சங்கம்
தொடர்பு இலக்கங்கள்:
416- 918 1318
416- 936 8002

சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் - கனடா

மற்றும்
தமிழியல்துறை, தமிழியற்புலம்,
திருக்குறள் இருக்கை (1959 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு

இணைந்து நடத்தும்

பொருண்மை: திருக்குறள் கூறும் அறம்.
பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்கம் - 3

நிகழ்ச்சி நிரல்


வரவேற்புரை:
முனைவர் போ.சத்தியமூர்த்தி, தலைவர், தமிழியல்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு


தலைமையுரை:
பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, தலைவர், சுவாமி விபுலாநந்தர்
தமிழ் ஆய்வு மையம் கனடா


சிறப்புரை:
திரு. சாம் தில்லையா, BA, LLB, சட்டவாளர், ஆய்வாளர், ரொறன்ரோ, கனடா


நன்றியுரை:
திரு இராசையா மகிந்தன் தமிழ் முதுநிலை விரிவுரையாளர்,
அண்ணாமலை - கனடா

கனடா: காலை:10:00 மணி ஞாயிறு 17.10.2021
இந்தியா: மாலை 7:30 மணி ஞாயிறு 17.10.2021

Zoom : 214 415 7884
Passcode: drbala

கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்கள்:
பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி – கனடா / முனைவர் போ.சத்தியமூர்த்தி– இந்தியா

அனைவரும் வருக! கருத்துரை தருக!!

கனடா மொன்றியால் மாநகரில்
ஒரே நாளில் ஒரே மேடையில்

Powered by
FRUITS HABY
5925 Victoria
Monreal, QC
H3W 2R9
(514) 342-4229
(514) 865-0519

www.uthayannews.ca உதயன் நண்பன் WORLDWIDE

# உதயன் வெள்ளி விழாவும் நண்பன் விருது விழாவும்

கலை நிகழ்ச்சிகள், இனிதான இசைச்சாரல், விருதுகள் வழங்கல் மற்றும் இராப்போசன விருந்து.

**13-11-2021** சனிக்கிழமை
மாலை 6:00 மணி தொடக்கம்

Sunnybrook Condominium Village Auditorium
105 Rue Angora,
Dollard Des Ormeaus,
Quebec, H9B 1W6

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty தமிழா
437 539 7521

⚠ Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்

அனுமதிச் சீட்டுக்களுக்கும் விபரங்களுக்கும்:
(514) 684-3604, (514) 924-3436, (514) 465-1053, (416) 732-1608

# இந்துக்களின் கலைவிழா என்று அழைக்கப் பெறும் நவராத்திரியும் ஒரு பண்டிகையே

ராஜகுமாரன்- மொன்றியால்



இந்துக்களின் கலைவிழா என்று அழைக்கப் பெற்று ஆலயங்கள், பாடசாலை, தொழிலகங்கள், வீடுகள் தோறும் சக்திக்காக எடுக்கப்படும் விழா வான நவராத்திரி பண்டிகைக்காக அழகிய பொம்மைகளை கொலு வைத்து கலை உணர்ச்சி தலைத்தோங்க கொண்டாடுவர். நவராத்திரி விழா நேற்று புதன்கிழமை உலகெங்கும் உள்ள இந்துக்களுக்கான விழாவாக ஆரம்பமாகிஉது. நவராத்திரி நாட்களில் அந்தந்த தினங்களின் சிறப்பை உணர்ந்து அம்பாளுக்கு அந்தந்த நாட்களுக்குரிய அபிஷேகம், மலர் அலங்காரம், பிரசாதம், நிவேதனம் செய்து வழிபாடு செய்வதன் மூலம் சிறப்பான பலன்களைப் பெறலாம்.

இந்த ஒன்பது நாட்களும் செய்ய வேண்டிய அபிஷேகங்கள்

வருமாறு:

முதலாம் நாள் - அரிசி மா, இரண்டாம் நாள் - கோதுமைமா, மூன்றாம் நாள்-முத்து, நான்காம் நாள் - அட்சகை, ஐந்தாம் நாள்- கடலை, ஆறாம் நாள் - பருப்பு, ஏழாம் நாள்- மலர், எட்டாம் நாள் - காசு, ஒன்பதாம் நாள் - கற்பூரம்.

ஒன்பது நாட்களும் அணிவிக்க வேண்டிய மலர்கள் வருமாறு:

முதலாம் நாள் - மல்லிகை, இரண்டாம் நாள் - முல்லை, மூன்றாம் நாள் - சம்பங்கி, நான்காம் நாள் - ஜாதி மல்லிகை, ஐந்தாம் நாள் - பாரிஜாதம், ஆறாம் நாள் - செம்பருத்தி, ஏழாம் நாள் - தாழம்பூ, எட்டாம் நாள் - ரோஜா, ஒன்பதாம் நாள் - தாமரை.

ஒன்பது நாட்களும் சாத்த வேண்டிய இலைகள்:

முதலாம் நாள் - வில்வம், இரண்டாம் நாள் - துளசி, மூன்றாம் நாள் - மருதாணி, நான்காம் நாள் - கதிர்ப்பச்சை, ஐந்தாம் நாள் - விபூதிப் பச்சை, ஆறாம் நாள், சந்தன இலை, ஏழாம் நாள் - தும்பை இலை, எட்டாம் நாள் - பன்னீர் இலை, ஒன்பதாம் நாள் - மருக்கொழுந்து.

ஒன்பது நாட்களும் படைக்க வேண்டிய நிவேதனங்கள்:

முதலாம் நாள் - சுண்டல், இரண்டாம் நாள்_வறுவல், மூன்றாம் நாள் - துவையல், நான்காம் நாள் - பொரியல், ஐந்தாம் நாள் - அப்பளம், ஆறாம் நாள் - வடகம், ஏழாம் நாள் - சூரணம், எட்டாம் நாள் - முறுக்கு, ஒன்பதாம் நாள் - திரட்டுப் பால்.

ஒன்பது நாட்களும் செய்ய வேண்டிய பிரசாதங்கள்:

முதலாம் நாள் - வெண் பொங்கல், இரண்டாம் நாள் - புளியோதரை, மூன்றாம் நாள் - சர்க்கரைப் பொங்கல், நான்காம் நாள் - கதம்பம், ஐந்தாம் நாள் - ததியோதனம், ஆறாம் நாள் - தேங்காய்ச் சாதம், ஏழாம் நாள் - எலுமிச்சைச் சாதம், எட்டாம் நாள்- பாயாசம், ஒன்பதாம் நாள்- அக்கார வடிசல்.

நவராத்திரியில் கொலு வைக்கும் முறை/தத்துவம்:

மனிதன் எவ்வகையிலேனும் தன்னை தன் வாழ்நாளில் உயர்த்திக் கொள்ள வேண்டும். படிப்படியாக ஆன்மீக ரீதியில் தன்னை உயர்த்திக் கொண்டு இறுதியில் இறைவனில் கலக்க வேண்டும். இதை விளக்குவதற்காகவே கொலுக் காட்சியில் ஒன்பது படிகள் வைத்து அதில் பொம்மைகளை வைத்து வழிபடுகின்றோம்.

முதலாவது படியில் ஓரறிவுள்ள உயிர் பொருட்களை உணர்த்தும் புல், செடி, கொடி போன்ற தாவரப் பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

இரண்டாவது படியில் இரண்டு அறிவைக் கொண்ட நத்தை, சங்கு போன்ற பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

மூன்றாவது படியில் மூன்றறிவுள்ள உயிர்களை விளக்குகின்ற கறையான், எறும்பு (ஊர்வன) போன்ற பொம்மைகள இடம்பெற வேண்டும்.

நான்காவது படியில் நான்கு அறிவுள்ள உயிர்களை விளக்கும் நண்டு, வண்டு பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

ஐந்தாவது படியில் ஐந்து அறிவு கொண்ட விலங்குகள், பறவைகள் போன்ற பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

ஆறாவது படியில் ஆறறிவு கொண்ட உயர்ந்த மனிதர்களின் பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

ஏழாவது படியில் மனிதனுக்கு மேம்பட்ட மகரிிகள் பொம்மைகள் இடம்பெற வேண்டும்.

எட்டாவது படியில் தேவர்களின் உருவங்கள் இடம்பெற வேண்டும். பஞ்சபூத தெய்வங்கள், அட்டதிக்குப் பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள் ஆகியோரின் உருவங்கள் வைக்கப்பட வேண்டும்.

ஒன்பதாவது படியில் பிரம்மா, வி'ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுடன் அவர்களது தேவியர்களாகிய சரஸ்வதி, இலக்குமி, பார்வதி ஆகியோரின் உருவங்கள் வைக்கப்பட வேண்டும். நடுநாயகமாக ஆதிபராசக்தி இருக்க வேண்டும்.

உயிரினங்கள் (மனிதன்) படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று இறுதியில் தெய்வமாக வேண்டும் என்கின்ற தத்துவத்தை விளக்குவதே இந்தக் கொலு வைக்கும் முறையில் அடங்கிய தத்துவமாகும்.

நவராத்திரி:

இந்துக்களால் கொண்டாடப்படும் முக்கிய விரதங்களில் நவராத்திரியும் ஒன்றாகும். இறைவனைத் தாயாக வழிபடும் நாட்கள்தான் நவராத்திரி நாட்களாகும். அன்னையின் அருள் வேண்டி நோற்கும் விரதங்களில் தலைசிறந்ததும் மகத்துவமானதும் நல்லன எல்லாம் தரும் விரதமே நவராத்திரியாகும். நவராத்திரி இமயம் தொட்டு குமரி முனைவரை இந்து சமயம் பரந்துள்ள பிரதேசத்தில் வெவ்வேறு திருப்பெயர்களால் வருடந்தோறும் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது.

அண்டசராசரங்கள் அனைத்தையும் தோற்றுவித்த இவ்வுலகின் மூலசக்தியாம் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய சக்திகளே பூவுலகில் வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றை எமக்குத் தந்து எம்மை சிறப்பாக வாழ வைக்கின்றனர். அவர்களுக்கு விழா எடுத்து அவர்களது அருட்கடாட்சத்தை பெறுவதே நாம் வருடம் தோறும் கொண்டாடும் இந்த நவராத்திரி விழாவின் நோக்கமாகும். சொல்லும் சிவனுக்கு ஒரு இராத்திரி ஆனால் அதைச் செயல்படுத்தும் சக்திக்கு ஒன்பது இராத்திரி.

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சக்தியைக் குறித்து நோற்கப்படும் விரதமாகும். இது தட்சணாயன காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக் காலமாகும். உத்தரயணத்தில் வசந்த நவராத்திரியும் தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்க சிறந்த காலமாகும். இவை இரண்டிலும் புரட்டாதி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சாரதா நவராத்திரியையே நாம் எல்லோரும் கைக்கொள்கின்றோம்.

நவராத்திரி பூசை புரட்டாதி மாதத்தில் அமாவாசை கழிந்த பூர்வபட்ச பிரதம திதியில் ஆரம்பித்து நவமி முடிய செய்யப்பட வேண்டும் என "காரணாகம்" கூறுகின்றது. அதாவது வளர்பிறை பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி வரை நடைபெறுகின்றது. மகாசங்கார காலத்தின் முடிவில் இறைவன் உலகத்தை உண்டாக்க விரும்புகின்றான். அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகின்றது. பின் அதை எவ்வாறு என்று அறிகின்றான். அப்போது ஞான சக்தி தோன்றுகின்றது. பின் கிரியா சக்தியால் உலகைப் படைக்கின்றான். இக்கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது.

நவராத்திரி முதல் மூன்று நாட்களும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலமாகும். இக்காலத்தில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான். அடுத்த மூன்று நாட்களும் ஞான சக்தியின் தோற்றமான இலக்சுமியின் ஆட்சிக் காலமாகும். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவண போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான். இறுதி மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக் காலமாகும். இதில் இறைவன் முன்னறிந்தவாறு அருள் வழங்குகின்றான்.

ஆலயங்களிலும், இல்லங்களிலும், பாடசாலைகளிலும் கொலு (உருவம்) வைத்து ஒன்பது நாட்களும் வழிபடுவர். நவராத்திரிக்குத் தேவையான பூசைக்குரிய பொருட்களை அமாவசையன்றே சேகரித்துக் கொண்டு அன்று ஒரு வேளை உணவு உண்டு பிரதமையில் பூசை தொடங்க வேண்டும். நறுமணமுள்ள சந்தனம், பூ ஆகியவற்றுடன் மாதுளை, வாழை, பலா, மா முதலியவற்றின் கனிகளை மிகுதியாக வைத்து நெய் சேர்ந்த அன்னம், வடை, பாயசம் முதலியனவற்றை நிவேதித்தல் வேண்டும்.

புனுகு, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, சந்தனம், அகிற்பட்டை, பன்னீர் இவைகளுடன் கூடிய அஷ்ட கந்தகம் சாத்தி, துதித்து பலவித ஆடல் பாடல்களால் தேவியை மகிழச் செய்ய வேண்டும். சிறு பெண்பிள்ளைகளின் பூசை நவராத்திரி காலத்தில் இன்றியமையாததாகும். இரண்டு வயதிற்கும் பத்து வயதிற்கும் இடைப்பட்ட சிறுபெண்பிள்ளைகளே பூசைக்கு உரியவர்கள் ஆவர்.

முதல் நாள் தொடங்கி ஒவ்வொரு நாளும் ஒரு பிள்ளையாக முறையே குமாரி, திருமூர்த்தி, கல்யாணி, ரோகினி, காளி, சாண்டிகர், சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என்ற பெயர்களால் பூசிக்கப்பட வேண்டும். குமாரிகளுக்கு ஆடை, அணி, பழம், தாம்பூலம், மலர், சீப்பு, கண்ணாடி முதலிய மங்களப் பொருட்களும் மஞ்சள், குங்குமம், தட்சணை கொடுத்தும் அறுவகை சுவைகளுடன் அமுது செய்வித்தல் வேண்டும்.

விரதம் அனுஷ்டிப்பபோர் அமாவாசையில் ஒரு வேளை உணவு உண்டு பிரதமை தொடக்கம் பகல் உணவின்றி இரவு பூசை முடிந்து பின் பால், பழம் அல்லது பலகாரம் உண்பது நல்லது. ஒன்பதாம் நாளான மகாநவமி அன்று உபவாசம் இருந்து மறுநாள் விஜயதசமி அன்று காலை ஒன்பது மணிக்கு முன் விரதத்தை முடித்தல் வேண்டும். இயலாதவர்கள் பகல் ஒரு வேளை உணவு அருந்தி ஒன்பதாம் நாள் பால், பழம் மட்டும் உட்கொள்ளலாம்.

விஜயதசமி அன்று காலையில் சுவையுள்ள உணவுப் பதார்த்தங்கள் சக்திக்கு நிவேதித்து திருவடியில் வைத்துள்ள புத்தகம் இசைக் கருவிகளைப் பாராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் விரதத்தை பூர்த்தி செய்யலாம். நவராத்திரியில் திருமகளை துதித்து வழிபாடுவோர்க்கு சகல சௌபாக்கியங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாது வீடு போறாகிய முக்தியையும் நல்குவாள் என்ற நம்பப்படுகின்றது. விரதகாலத்தில் அபிராமி அந்தாதி, இலட்சுமி தோத்திரம், சகலகலாவல்லிமாலை, சரஸ்வதி அந்தாதி என்பவற்றை ஓதுவது நல்லது.

நவராத்திரியை அடுத்துவரும் விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் வித்தியாரம்பம் புதிதாக கலைப் பயிற்சி தொடங்குதல் நடைபெறும். ஒன்பது நாட்களிலும் சக்திக்கு பூசை செய்த பலன் கைகூடும் நாள் விஜய தசமி ஆகும். விஜயதசமி அன்று ஆலயங்களில் "மானம்பூ" அல்லது மகிடாசுர சங்காரம் விசேட அம்சமாக இடம்பெறும். ஆலயங்களில் வன்னிமரம்.'.வாழைமரம் நட்டு மகுடாசுரன் என்ற அசுரனை தேவி சங்கரித்த பாவனையாக அம்மரத்தை வெட்டி விழா எடுப்பர்.

இது தொடர்பான புராணக்கதை

வருமாறு:

மகுடாசுரன் என்பவன் காட்டெருமை வடிவிலான அசுரன். அவனும் அவனைச் சார்ந்த அசுரர்களும் ஆணவம், கன்மம், மாயை, காமம், குரோதம், உலோபம், அறியாமை, மிருகத்தன்மை, திரிபும் ஆகிய தீய குணங்களின் உருவமே அவன். அவனுடன் தேவி ஒன்பது நாள் போரிட்டு பத்தாம் நாள் வெற்றி கண்டாள்.


அதே போல் நாமும் ஒன்பது நாள் தேவியை வழிபட்டு பெற்ற சக்தியால் மனதில் உள்ள தீய குணங்களை அழித்து ஒழிக்கலாம். அதனால் ஞானம் கைகூடும். இத்தகைய நவராத்திரி விரதத்தை அனு'டித்து நாமும் சக்தியுடன் இணைந்து பேரின்ப பெருவாழ்வு பெற்று வாழ்வோமாக!

# இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு!

2021 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு எழுத்தாளர் அப்துல் ரசாக் குர்னாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான நோபல் பரிசு கடந்த நாட்களாக அறிவிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2021 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு எழுத்தாளர் அப்துல் ரசாக் குர்னாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இலக்கியத்திற்கான நோபல் பரிசை தேர்வு குழு அறிவித்துள்ளது.

தான்சானியா நாட்டை சேர்ந்த அப்துல் ரசாக் குர்னா தற்போது இங்கிலாந்தில் வசித்து வருகிறார். இவை வளைகுடா நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து செல்லும் மக்களின் வாழ்வியல் பற்றிய நாவல்களை எழுதியுள்ளார். ஏற்கனவே, வேதியியலுக்கான நோபல் பரிசு ஜெர்மனியின் பெஞ்சமின் லிஸ்ட், அமெரிக்காவின் டேவிட் டபிள்யு சி மேக்மில்லன் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் சியுகுரோ மனாபே, ஜெர்மனியின் கிளாஸ் ஹாசல்மேன் மற்றும் இத்தாலியின் ஜார்ஜியோ பாரிசி ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேலும், மருத்துவத்திற்கான நோபல் பரிசு டேவிட் ஜூலியஸ், ஆர்டெம் படபூட்டியன் ஆகிய இருவருக்கு அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.





# ஹவாய் திவுகளில் தமிழர் கலாச்சாரம்

**குரு அரவிந்தன்**

“இந்துசமுத்திரத்தில் ஒரு முத்து” என்று எப்படிக் கடற்பயணிகள் இலங்கைத்தீவை வர்ணித்தார்களோ அதேபோலத்தான் சுற்றுலாப் பயணிகள் “பசுபிக்சமுத்திரத்தின் பரடைஸ்” என்று இந்தத் தீவுகளை அழைக்கிறார்கள். இந்த ஹவாய் தீவுகள் எரிமலைக் குளம்புகளால் உருவானவை என்பதை நீங்கள் நம்பமறுக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. சுமார் 2000 மைல்கள் சுற்றாடலில் எந்த நிலப்பரப்பும் இல்லாத ஹவாய் தீவுகள், அமெரிக்காவின் 50 வது மாகாணமாக ஆகஸ்ட் மாதம் 1959 ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்டது. சுமார் 1500 வருடங்களுக்கு முன்பாக போலிநேஷன் (Polynesian) என்று சொல்லப்படுகின்ற குடும்ப அமைப்பு இங்கே முதலில் உருவானது. முக்கியமாக Samoa, Cook Islands, New Zealand, Easter Island, Hawaii, Tonga, Tuvalu, Wallis and Futuna, Fiji போன்ற இடங்களில் இருந்து கடலில் திசைமாறி வந்து, திரும்பிச் செல்ல வழியில்லாமல் குடியேறியவர்களே இங்குள்ள பழங்குடி மக்களாவார். இங்குள்ள தீவுகளில் சுமார் எட்டுத் தீவுகளே ஓரளவு பெரிய தீவுகளாக, மனிதர் வாழக்கூடியதாக இருக்கின்றன.

1778 ஆம் ஆண்டு ஐரோப்பியரான கப்டன் ஜேம்ஸ் குக் என்ற கடற்பயணிதான் முதன் முதலாக இத்தீவுகளில் கால்பதித்தார். புகழ்பெற்ற பேர்ள்ஹாபர் (Pearl Harbour), உயிர்ப்புடன் இருக்கும் எரிமலைகள் (Valcano Park), தொலைநோக்கி மையம் (Mauna Kea Summit) இந்துக்கோயில், டோல் அன்னாசிப்பழத் தொழிற்சாலை போன்றவற்றைப் பார்க்க வேண்டும் என்ற எனது ஆவலை நிறைவேற்ற பாம்புகளே இல்லாத ஹவாய்க்குப் பயணமானேன். ஹவாயில் உள்ள விமான நிலையத்தை டானியல் கே. இனோஜி சர்வதேச விமான நிலையம் (Daniel K. Inouye International Airport) என்று அழைக்கிறார்கள். சுமார் 22 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்த விமானநிலையத்திற்கூடாக வருடாவருடம் பயணிக்கிறார்கள். விமானத்தை விட்டு வெளியே வந்ததும் ஹவாயின் பாரம்பரிய உடையணிந்த, கழுத்திலே பூமாலை அணிந்து, தலையிலே ஒற்றைப்பூ சூடியிருந்த இளம் பெண்கள் எங்களை வரவேற்றார்கள். காதில் விழுந்த முதல் வார்த்தை



“அலோகா” என்பதாகும். “அலோகா” (Aloha) என்றால் வணக்கம், சென்ற இடமெல்லாம் அலோகா சொன்ன போது, எனக்கு “அரோகரா” என்பது போலக் கேட்டது. ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று அதைப்பற்றிப் பின்பு ஆராய்ந்து பார்த்த போது, எங்கள் பண்பாட்டிற்கும் அதற்கும் ஒருவித தொடர்பு இருப்பதை அறிய முடிந்தது.

அங்கே உள்ள ஒரு வீதிக்குப் “பழனி வீதி” என்ற பெயரும் உண்டு. நேப்பாளிகளின் சைவஉணவகத்து வாசலில் சிவனின் பதாதை ஒன்று மின்விளக்குளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அருங்காட்சியகத்திற்குச் சென்ற போது, அவர்கள் பாதுகாப்பு வேலி போட்டிருந்த ஓரிடத்தில் சிவலிங்கம் போன்ற உருவ அமைப்பைக் கொண்ட கருங்கல்லைக் கண்டேன். அதில் மூன்று வீபூதிக் குறிகள் இல்லாததுதான் ஒரு குறையாக இருந்தது. பிறிதொருநாள் அவர்களுடைய கலாச்சார விழா நடக்கும் இடத்திற்குச் சென்ற போது மாவிட்டபுரம் மாவைக் கந்தனின் கோபுரம் போன்ற அமைப்பை கொண்ட சுமார் 40 அடி உயரமான ஒரு கோபுரத்தை தடிகளாலும் ஓலைகளாலும் உயரமாக அமைத்திருந்தார்கள். பிஜி நாட்டில் இருக்கும் இந்துக் கோபுரத்தின் அமைப்பு அது என்பதை அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டேன். பிஜி நாட்டில் இருந்து இங்கு வந்து குடியேறிய பழங்குடி மக்கள் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். பிஜி தீவுகளுக்கு தமிழ்நாட்டில் இருந்து தமிழர்கள் கரும்புத் தோட்டத்திற்குப் பணிபுரியச் சென்றதும், பாரதியார் அதைப்பற்றிப் பாடியதும் நினைவில் வந்தது. அவர்களின் வழித்தோன்றல்களும் ஹவாயின் பழங்குடி மக்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் “பல்லே” என்ற பெண் நெருப்புத் தெய்வத்தை வணங்குவதாக எங்களைத் தன்னுடைய வண்டியில் வழிபாட்டு தலத்திற்கு அழைத்துச் சென்ற ஹினா என்ற பட்டதாரிப் பெண் குறிப்பிட்டார். வாசலில் இரண்டு பந்தங்கள் குறுக்கே வைக்கப்பட்டிருந்தன. பூசாரியோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டவரோ தான் பாடலைப் பாடிப் பந்தத்தை நிமிர்த்தி வைத்துவிட்டு உள்ளே செல்ல முடியும். அந்தப் பெண் கைகளைக் குறுக்கே கட்டிக்கொண்டு ஒரு பாடலைப் பாடினார். நாங்கள் வழிபாட்டுத் தலங்களில் தேவாரம் பாடுவது போல அந்தப் பாடலும், நிகழ்வும் இருந்தது. அவர்கள் வழிபடும் தெய்வங்களின் விக்கிரகங்கள் சற்று உயரமான பீடத்தில் வைக்கப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட அய்யனார், கருப்பண்ணசாமி போன்ற உருவ அமைப்புகளைப் போன்று மரத்தினால் செய்யப்பட்ட சில கிராமத்து தெய்வங்களைக் காணமுடிந்தது. அதற்குக் கிட்டவாக பூசாரியின் குடிசை ஒன்று இருந்தது. சற்றுத் தள்ளி அவர்களின் பாரம்பரிய “பறைகள்“ ஒரு குடிசையில் வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்ததும் சித்திரைக் கஞ்சிக்கு எங்கள் கோயில்களில் அடிக்கும் மேளங்கள் போல இருந்தன. வழிபாட்டுத்தல பூசைக்காகவோ அல்லது அவசர தேவைகளுக்காகவோ இந்தப் பறைகளை அடித்துப் பொதுமக்களை அங்கே வரச்செய்வதாகவும் ஹினா குறிப்பிட்டார். எங்களைப் போலவே, உருவ வழிபாடு அவர்களிடமும் இருப்பதை அவதானித்தேன்.

ஹவாயில் பெண்கள் இடது காதுக்குப் பின்னால், தலையில் பூவைச் செருகியிருந்தால் திருமணமானவர் என்றும் வலது காதுக்குப் பின்னால் பூச்செருகியிருந்தால் திருமணமாகாதவர் என்றும், எம்மவர் குங்குமப் பொட்டு வைப்பதுபோல, அடையாளப் படுத்தினார்கள். அனேகமான பெண்கள் அழகாகக் கொண்டை போட்டு, வெள்ளைநிற அலரிப்பூவையும், சிலர் ஓக்கிட், அல்லது செவ்வரத்தம் பூவையோ முடியில் செருகி இருந்தார்கள். இதில் வேடிக்கை என்வென்றால் அவர்களில் சிலர் முடியில் இரண்டு பக்கமும் பூ வைத்திருந்ததுதான். வலது பக்கம் இடது பக்கம் என்று விபரமாகச் சொன்னவர்கள் இரண்டு பக்கமும் பூ வைத்தால் என்ன அர்த்தம் என்று சொல்லவேயில்லை.

“தழையணி அல்குள் தாங்கல் செல்லா நுழைசிறு நுசப்பிற் கெவ்வ மாக அம்மெல் ஆக நிறைய வீங்கிக் கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின”.

நடன நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்ற போது, சங்க இலக்கியப் பாடல் ஒன்று நினைவில் வந்தது. அவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளான தழை உடைகளை அணிந்தே நடனமாடினர். சிலர் இலைகுழைகளில் செய்த தழையணி பாவாடைகளையும், சிலர் நாணல் புல், வைக்கோல் போன்றவற்றில் செய்த பாவாடையும் அணிந்திருந்தனர். தமிழர்களின் பாரம்பரிய கோலாட்ட நடனத்தைப் போல தழையணி அணிந்த பெண்கள் கையிலே உள்ள கோலாட்டக் கோல்களைப் பலவிதமாக அடித்து சுற்றிச் சுற்றி ஆடுவதைக் ஹவாயில் காணமுடிந்தது. அவர்கள் இந்த நாட்டார் கலையான



நடனங்களை ஆடிக்காட்டிய போது என்னால் நம்பமுடியாமல் இருந்தது. இதுவரை கற்பனையில் இருந்த சங்ககாலக் காட்சிகளை நிஜமாகவே கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது போல இருந்தது. இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் சென்று ஹவாய் தீவுகளில் 2500 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்களின் பாரம்பரிய தழையுடை அணிந்த கோலாட்ட நடனத்தைக் காண்பேன் என்று நான் ஒருபோதும் நினைத்தும் பார்த்ததில்லை.

இன்னுமொரு தீவான “காவாய்” இந்துக்களின் பிரபலமான சிவன் கோயிலும், சைவ சித்தாந்த மன்றமும் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த யோகசுவமியின் சீடரான சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தான் இங்கே கோயில் அமைவதற்கு முக்கிய காரணமாக இருந்தார். பூங்காவில் உருட்திராட்ச மரங்கள் இருக்கின்றன. வெளியே உள்ள உணவகங்களில் சைவச்சாப்பாடு எடுப்பது கஷ்டமானது. நாங்கள்தான் கொண்டு செல்ல வேண்டும். 562 சதுரமைல் பரப்புள்ள இந்தத் தீவுக்கும் விமானத்தில்தான் பயணிக்க வேண்டும். அழகான நிறங்களில் காட்டுக்கோழிகள் எங்கும் காணப்பட்டன. பாம்பு, கீரி, மரநாய், கழுகு போன்ற எதிரிகளே இல்லாததால், சுதந்திமாகத் திரிந்தன.

# தனது முதல்வர் நாற்காலியின் நான்கு கால்களில் ஒன்று கல்யாணசுந்தரத்தின் பாடல்களே என எம்ஜிஆர் அவர்களால் புகழப்பெற்ற கவிஞர் பட்டுக்கோட்டையாரின் நினைவு தினம் இன்று

அக்டோபர் 8ஆம் நாள் (1959) மக்கள் கவிஞர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவு நாள். கவிஞர் ஐயாவின் பெருமைகளை நமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் வீணை மைந்தன். - ஆசிரியர்






"தமிழ் வாழ்கின்ற காலம் வரை வாழ்ந்து வரும் கவிஞனே!" 29 ஆண்டுகள் மட்டுமே தமிழன்னைக்கு தனது பாட்டுக்களால் அலங்காரம் செய்து ஆனந்தம் மிகக் கொண்டு மீண்டும் தில்லையம்பல நடராஜன் திருப்பாதங்களில் ஐக்கியமாகிய அற்புத கவிஞருக்கு எனது நினைவு அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

"எனது முதல்வர் நாற்காலியின் நான்கு கால்களில் ஒன்று தம்பி கல்யாணசுந்தரத்தின் பாடல்களே" என்றார் மக்கள் திலகம். ஆம்! பொன்மனச் செம்மலின் கொள்கைகளை ஏழை எளிய மக்களின் நெஞ்சங்களில் பதிய வைத்து பாட வைத்த கவிஞனை மக்கள் கவிஞன் என்றே வரலாறு பதிவு செய்துள்ளது!

"மக்கள் கவிஞர்" பழகு தமிழில் பாட்டு எழுதியவர். பாமரர்களின் பல்கலைக்கழகமாகிய திரையுலகம் மூலம் தமிழ் பரப்பிய வித்தகர். அவர் வாழ்ந்த காலமோ சிறியது. அவருடைய வாழ்க்கை அனுபவங்களோ மிகப்பெரியது!

கவிஞர் ஐயா ஆற்றிய தொழில்கள் பலவாகும். எப்போதும் உழைத்துக் கொண்டிருந்த படியால் தான் உழைப்பாளிகளின் வலியை உணர்ந்து பாட்டாளிகளுக்கும் ஏழை எளிய விவசாயிகளின் துயரங்களையும் பெருமைகளையும் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி வந்தார். கடைசி 9 ஆண்டுகள் மட்டுமே கவிஞராக வாழ்ந்து மறைந்தார்.

முந்தைய 20 ஆண்டுகளில் 16 வகையான பணிகளில் அனுபவம் பெற்றவர் ஆனர். அவர் ஆற்றிய பணிகளாவன... விவசாயி, மாடு மேய்ப்பவன், மாட்டு வியாபாரி, மாம்பழ வியாபாரி, இட்லி விற்றது, உப்பள நீர் ஊற்றுநர், இயந்திரம் ஓட்டுநர், நீர் வண்டி ஓட்டுநர், அரசியல்வாதி, பாடகர், நடிகர், நடனக்காரர் - இறுதி ஒன்பது ஆண்டுகள் கவிஞராக புகழ்பெற்றார்.

"ஆளுக்கொரு வீடு" (1960) திரைப்படத்துக்கு இவரால் எழுதப்பட்ட பாடலான..

"செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமை தான் நமது செல்வம்.
கையும் காலும் தான் உதவி - கொண்ட
கடமை நான் நமக்கு பதவி" என கிடைத்த வேலைகளை வெறுப்பின்றி ஆற்றியவர். தன்மானம் மிகுந்தவரானதால் கோபம் மிகக் கொள்வார். சுயமரியாதைக்கு இழுக்கு வந்தால் "நாயே நீ யாரடா என்னை அடிமை கொள்ள", எனப் பார்க்கும் வேலையை துச்சமென தூக்கி எறிந்துவிட்டு "நாம யார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்", என போய்க்கொண்டே இருப்பார்.

ஏழை எளியவர்களின் துயரங்களை, அவலச்சுமைகளை அவரைப்போல் பாடியவர் இலர். பாட்டாளி மக்களின் சோகப்பாடுகளை பாடுவதில் இவர் தான் முதல்வர்!

மகாகவி. பாரதியின் சீற்றத்தையும் - பொதுவுடமைக் கருத்துக்களும் இவர் எழுத்துக்களில் கொப்பளிக்க காணலாம்.

"தூங்காதே தம்பி தூங்காதே", "சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா", "திருடாதே பாப்பா திருடாதே:... "காடு வெளஞ்சென்ன மச்சான்... கையும் காலும் தானே மிச்சம்".. ஆகிய பாடல்கள் மக்கள் திலகத்தையும், கவிஞரையும் மக்களிடம் கொண்டு சேர்த்தன.

மண் வாசனையையும், கிராமத்து வாழ்க்கையும் உயிர் ஓவியமாக்குவன இவரது பாடல்கள். முற்போக்கு கருத்துக்களைக் கொண்டவை சமூக விழிப்புணர்ச்சியையும், சமுதாய மறுமலர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட இவரது இசைப் பாடல்கள், அடித்தட்டு மக்களுக்கும், அன்றாடக் காச்சிகளுக்கும் பாட பிறந்தவர் நமது பட்டுக்கோட்டையார்!

கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும், நாவலருமாகிய ஏழைப்பங்காளன் தோழர். ப ஜீவானந்தம் ஐயாவின் அன்புக்குப் பாத்திரமானவர். திண்ணைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு வரை படித்தவரின் கவிபாடும் ஆற்றலுக்கு தமிழக அரசு 1. 5 .1981இல் (மறைந்த பின்பு) பாரதிதாசன் விருது வழங்கியது. 1993-ஆம் ஆண்டு தமிழக அரசு இவரது பாடல்களை நாட்டுடமை ஆக்கியது.

நிறைவாக் மக்கள் கவிஞர் மறைந்த வேளை சகோதரக் கவிஞர் கண்ணதாசன் ஐயாவின் கண்ணீர் கவிதை வரிகளை நினைவு படுத்துகிறேன்.

"சின்ன வயது மகன் சிரித்த முகம் பெற்ற மகன்!
அன்னை குணம் படைத்த அழகு மகன் சென்றானே!
கன்னல் மொழி எங்கே? கருணை விழி தானெங்கே?
மன்னர் மணிமுடியில் வாழ்ந்திருந்த செந்தமிழை
தென்னவர் பொருளாக்கித் தீங்கவிதை தந்த மகன்,
கண்மூடித் தூங்குகிறான் கனவுநிலை காணுகின்றான்
விழுதுவிட வந்த மகன், விழுந்துவிட்டான் சாவினிலே,
அழுதால் வருவானோ? ஆற்றுவதால் கிடைப்பானோ?
ஆறோடி நீரோடி அழகிழந்த விழிகளெல்லாம்
போராடிக் கொண்டு வரப்போமோ அவனுயிரை?
தன்னுயிரைத் தருவதனால் தங்கமகன் பிழைப்பானோ ?

என்னுயிரை தருகின்றேன் எங்கே? என் மாக்கவிஞன்?
வெற்றிலையும் வாயும் விளையாடும் வேளையிலே
நெற்றியிலே சிந்தை நிழலோடி நின்றிருக்கும்!
கற்ற தமிழ் விழியில் கருவியாக வந்திருக்கும்!

"அண்ணே" என உரைத்தால் அதிலோர் சுவையிருக்கும்!,
பிள்ளைப் பருவம் பிழையா இளம் பருவம்!
கழுத்தில் தவழ்ந்து வரும் கைத்தறியின் துண்டெல்லாம்,
பழுத்த தமிழ்பாடும் பணிபுரியும் வாழ்கவெனும்,
வாழும் வயது மகன் வளர்ந்து வரும் தேன் கவிஞன்
ஆண்டிரெண்டு செல்லவில்லை அன்பு மனை பிடித்து,
பிஞ்சு முகம் பாராமல் பேதை குரல் கேளாமல்,

நெஞ்சொடிய ஓலமிடும் நேர்முகம் காணாமல்,
காத்திருக்கும் பட உலகின் கையணைவை கருதாமல்,
நின்றது போல் நின்று நெடுந்தூரம் பறந்து விட்டான்!

முதிர்ந்த கிழமிலையே! மூச்சடங்கு வயதிலேயே!
உதிர்ந்த மரமிலையே! உலர்ந்து விட்ட நதியிலையே
வறண்ட குளமிலையே! வற்றிவிட்ட சுனையிலையே!

இருண்ட பொழுதிலையே! ஏய்க்கின்ற நாளிலையே!
ஆரம்பமாவதெல்லாம் பெண்ணுக்குள் என்றானே?
ஆடி அடங்குகின்றான் மண்ணுக்குள் என் செய்வேன்!
எங்கினி காண்போம்? எவர் இனிமேல் புன்னகைப்பார்?
தங்கமகன் போன பின்னர், தமிழுக்கும் கதியிலையே !
வெங்கொடுமைச் சாக்காடே! விழுவதற்கேற்ற பொருள்
மங்காத செங்குருதி மகனென்றோ எண்ணமிட்டாய்?

கல்யாணசுந்தரனே! கண்ணியனே ! ஓர் பொழுதும்,
பொல்லாத காரியங்கள் புரியாப் பண்பினனே !
சாவது இயற்கை! சாவதற்கும் நீதியுண்டு !
நீதி இல்லாத சாவு உன்னை நெருங்கி விட்டதென்றாலும்,
வாழும் தமிழ்நாடும், வளர் தமிழும், கலைஞர்களும்
வாழ்கின்ற காலம் வரை வாழ்ந்து வரும் நின்பெயரே

*- தொகுப்பு: வீணை மைந்தன்*

பின்குறிப்பு: புலம்பெயர்ந்து வாழும் பெற்றோர்களே நம்மிடையே வாழ்ந்து மறைந்த கவிஞர்களையும் - தமிழ் வளர்த்த பெரியோர்களையும் நினைவில் வைத்து வணங்குதல் செய்யப் பழக்குங்கள் அவர்களை வாசிக்கச் சொல்லுங்கள்! நன்றி.

# பெண்கள் தமது திறமைகளை வளர்க்க வேண்டிய துறைகள்

இன்றைய காலகட்டத்தில் பெண்களாகிய நாம் பல துறைகளில் முன்னேறி வருகிறோம் ஆண்களால் மட்டுமே இவ்வேலைகளை செய்ய முடியும் என்ற கருத்துக்களை உடைத்தெறிந்து பல சாதனைகளை செய்கின்றோம். ஆனாலும் சில பெண்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டிய ஒரு சில துறைகளில் திறமைகளை வளர்த்துக்கொள்ள முன் வருவதில்லை. காரணம் அவர்களுக்கு காணப்படும் பல இறுக்கமான சூழ்நிலைகளும் பல பொறுப்புகளும் தான்.

இவ்வாறு பல தடைகளை தாண்டி பெண்களாகிய நாம் சில துறைகளில் எமது தனித்திறமையை வளர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். அவ்வாறான துறைகளை பற்றி பார்க்கலாம்.

கல்வி: கல்வி என்பது முதன்மையாக அனைவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான விடயமாகும். இதில் பெண்கள் அதிக நாட்டம் காட்டும் போது அவர்கள் பல முன்னேற்றங்களை அடைகின்றனர். தனக்கான தன்னம்பிக்கையும் கல்வி மூலம் வளர்த்துக்கொள்ளலாம். அவசியம் அனைத்து பெண்களும் எப்படிபட்ட சூழ்நிலையிலும் தனது கல்வி அறிவை வளர்த்துக்கொள்ள முன் வர வேண்டும்.

கணனி: இன்றைய உலகில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வரும் துறை இதுவாகும். இதனை பற்றி பாரிய அளவில் அறியாவிட்டாலும் அடிப்படை விடயம் பற்றி கற்றுக்கொள்ள வேண்டும். குறைந்தது கணனியில் இணைய வழி மூலம் எமக்கு தேவையான தகவல்களை தேடி அறிந்து கொள்ளும் திறமை காணப்பட வேண்டும்.

சமையல்: சமையல் என்பது ஒரு வகையான கலை. பெரும்பாலும் அதிகமான பெண்கள் தெரிந்திருக்கும் துறை ஆனாலும் நாகரீக வளர்ச்சியால் ஒரு சிலர் சமையலில் அக்கறை கொள்வதில்லை. நாம் எவ்வளவு பெரிய இளவரசியாக இருந்தாலும் சுவையான உணவுளை சமைப்பதற்கு அறிந்திருக்க வேண்டும்.

அழகுக்கலை: இதனை அறிந்துகொள்ள பாரிய அளவில் செலவிட அவசியமில்லை. எமது அழகை நாமே பாதுகாப்பதற்கு தேவையான அழகுக்கலை விடயங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

தையல்: தனக்கென சில ஆடைகளை தைத்து அணிந்து பார்ப்பது என்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரக்கூடிய விடயமாகும். கண்டிப்பாக பெண்களுக்கு இதன் அடிப்படையாவது தெரிந்திருக்க வேண்டும்.



கணக்கு: குறைந்தது கணக்கில் அடிப்படை அம்சங்களான கூட்டல் ,கழித்தல் போன்றன நாம் அறிந்திருக்க வேண்டும். அதையும் தாண்டி எமது வாழ்க்கை செலவுகளை கணக்கீடு செய்து திட்டமிடவும் தெரிந்திருக்க வேண்டும்.

செய்தி: எமது நாட்டில், உலகில், எமது சமூகத்தில் நடைபெறும் பல விடயங்களை நாம் பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் தெரிந்துகொள்ள வேண்டும். இது எமது வெளியுலக வாழ்கையில் சில விடயங்களை மேற்கொள்ளும் போது உதவியாக செயற்படும்.

உடற்பயிற்சி மற்றும் யோகா: பெண்கள் தனது ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாப்பதற்கு ஒரு நாளில் குறைந்தது 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி மற்றும் யோகா என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பான சரியான வழி முறைகளை கையாள வேண்டும்.

ஆங்கிலம்: இம்மொழி உலகில் பரவலாக பேசப்பட்டு வரும் ஒரு பொதுவான மொழி. சமூகத்தில் செல்லும் போதும் அதிகம் எமது நடவடிக்கைகளுடன் இது தொடர்புபடும். இதன் போது நாம் ஆங்கிலம் அறியாது தடுமாற்றமும் அடைவோம். இதனால் எம்மால் சமாளிக்க தேவையான அடிப்படை ஆங்கிலத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

சுயத்தொழில்: பெண்கள் எப்படிப்பட்ட அலுவலகங்களில் வேலை செய்தாலும் தனக்கென ஒரு கைத்தொழில் ஒன்றை தெரிந்திருக்க வேண்டும். தன்னுடைய ஓய்வு நேரத்தில் அதனை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

இவ்வாறான துறைகளில் எமது திறமைகளை வளர்த்துக்கொள்ளும் சின்ன சின்ன முயற்சிகள் பெண்களின் எதிர்காலத்தில் ஒரு நாள் பாரிய அளவில் உதவியாகவும் பக்கபலமாகவும் இருக்கும். *- இரா. சஹானா*

# வண்டியின் இரு சக்கரங்களைப் போல வகுப்பறையில் கற்றலும் கற்பித்தலும் தடையில்லாமல் நடைபெற வேண்டும்

**த**தற்போதைய கொரோனா நோய்த் தொற்று காரணமாக மேற்கொள்ளப்படும் இணையவழி சார்ந்த கல்வி முறையானத. மாணவர்கள் மத்தியில் அறிவார்ந்த கருத்துகளை உள்வாங்கவும், ஆழமான கருத்துகளை கற்றுக்கொள்ளவும் முடியாமல் திணறுகின்றனர். நுனிப்புல் மேய்வது போன்று, மேலோட்டமான விஷயங்களைத் தெரிந்துகொண்டால் போதும் என்ற மனநி-லை மாணவர்களிடம் மேலோங்கியிருப்பதாக தெரிகிறது.

மாணவர்களை மீண்டும் உயிர்த் துடிப்புள்ளவர்களாக மாற்றும் மந்திர சக்தி வகுப்பறை கற்பித்தலுக்கே இருக்கிறது. வண்டியின் இரு சக்கரங்களைப் போல வகுப்பறையில் கற்றலும் கற்பித்தலும் தடையில்லாமல் நடைபெற வேண்டும் என்பதே என் கருத்தாகும் ஒன்லைன் கல்வியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தத் தலைமுறையைக் காப்பாற்றாமல் நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகும்!

கொரோனா பெருந்தொற்று காரணமாக இணையவழி வழியாக கற்றல்-கற்பித்தல் நடைமுறை ஒரு தற்காலிகமான மாற்றாகத்தான் கொண்டுவரப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக முதல் அலை, இரண்டாம் அலை எனத் தொடர்ந்ததால் ஒன்லைன் கல்வி நிரந்தரமாகி விட்டது.

மாணவர்கள் தங்களின் விருப்பப்படியும், வீட்டில் இருந்தபடியும் ஒன்லைன் வகுப்பில் பங்கேற்பது அவர்களுக்குப் பெரிய வசதியாகிவிட்டது. வகுப்பில் தங்களின் இருப்பை உறுதிசெய்வதற்காக மட்டுமே ஒன்லைன் வகுப்புக்கு வந்தனர்.

மற்றபடி வகுப்பை ஆழமாக கவனிக்க வேண்டும், புரியாத கருத்துகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும், ஆசிரியரோடு கலந்துரையாட வேண்டும் என்ற எண்ணமெல்லாம் அவர்களுக்கு இல்லை. ஒன்லைன் வகுப்பிற்குள் வந்தவுடன், மைக் மற்றும் கேமராவை அணைத்துவிட்டு செல்போனில் கேம் ஆடுகிறார்கள். நண்பர்களோடு சாட் செய்கிறார்கள். அவர்களின் தனிப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். படுக்கையில் படுத்தவாறு, வீட்டில் அரட்டை அடித்தவாறு, மருத்துவமனையில் நின்றவாறு, பைக்கில் பறந்தவாறு, காய்கறிச் சந்தையில் நடந்தவாறு ஒன்லைன் வகுப்பில் பங்கேற்கிறார்கள். ஆசிரியர் கனிணித் திரையை பார்த்து தனக்குத் தானே பேசிக்கொள்வதில் எவ்வளவு சிரமம் உள்ளது என்பதை அனுபவித்தால் மட்டுமே உணர முடியும்.

எத்துணை தயாரிப்புகளோடு வந்தாலும், ஒன்லைன் வகுப்பின் போதாமைகளால் ஆழமாகப் பாடம் நடத்த முடியாமல் போகிறது. கல்லூரி வளாகத்துக்கு வந்து ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் இணைந்து கற்கும்போது கிடைக்கின்ற சமூக மயமாக்கல் ஒன்லைன் கல்வியில் இல்லாமல் போகிறது.

நேருக்கு நேரான உரையாடல் இல்லை என்பதால் உணர்வுத் தளத்திலும், உளவியல் தளத்திலும் மாணவர்களுக்குப் பெரிய தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதுவே மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் பெரும் தடையாக மாறியுள்ளது.

ஊரடங்கு காலகட்டத்தில் வீட்டிற்குள் முடங்கிக் கிடந்ததால், மாணவர்களிடம் இருந்த ஒழுங்கு நெறிமுறையில் காணாமல் போய் உள்ளது.

வீட்டுக்குள்ளே இருந்ததால் சோம்பலுக்கு ஆளாகியுள்ளனர். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் துவண்டிருப்பதால் உழைக்க வேண்டும், படிக்க வேண்டும் என்ற லட்சிய சிந்தனையை இழந்துள்ளனர். எது எளிதானதோ அதைத் தேர்ந்து கொள்வதற்கான துரித மனநிலையில் இருக்கின்றனர்.

ஒன்லைன் அடிமைகள்

மாணவர்கள் ஒரு நாளைக்கு 75 சதவீத நேரத்தைத் தொடுதிரையை உற்றுப் பார்ப்பதிலும், பொழுதுபோக்குக்காக சமூக வலைதளங்களிலும் செலவிடப் பழகிவிட்டனர். பலர் இணைய செயலிகளுக்கு அடிமைகளாகிவிட்டனர்.

இதனால் அறிவார்ந்த கருத்துகளை உள்வாங்கவும், ஆழமான கருத்துகளை கற்றுக்கொள்ளவும் முடியாமல் திணறுகின்றனர். நுனிப்புல் மேய்வது போன்று, மேலோட்டமான விஷயங்களைத் தெரிந்துகொண்டால் போதும் என்ற மனநிலை மாணவர்களிடம் மேலோங்கியிருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த குணம் நாளடைவில் அவர்களை எதிலும் காலூன்ற முடியாதவர்களாகவும், வாழ்க்கையை மேம்போக்காக அணுகுபவர்களாகவும் மாற்றிவிடும் ஆபத்து இருக்கிறது. இது மாணவர்களின் எதிர்காலத்தை வெ-குவாக பாதிக்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்த கொரோனா கால செல்போன் பயன்பாடு மாணவர்களை கற்பனையான உலகத்திற்குள் அழைத்துச் சென்றுவிட்டது. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற விழிப்புணர்வு இல்லாமல் அதிலே மாணவர்கள் மிதக்கின்றனர். எதிர்காலம் குறித்து எந்தத் திட்டமும், ஆரோக்கியமான கனவும் அவர்களுக்கு இல்லை. தன்னுடைய உடனடித் தேவை என்ன? நீண்ட காலத் தேவை என்ன? எதைத் தேர்ந்துகொள்ள வேண்டும், எதை ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற தெளிவும் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது.

கேள்விக்குறியாகும் எதிர்காலம்

படிப்பை முடித்து, கல்லூரிக்கு வெளியே காலடியெடுத்து வைக்கும்போது தகுந்த வேலை கிடைக்காத நிலை ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கிறார்கள். இதனால் தன் வாழ்வை மட்டுமல்லாமல் குடும்பத்தையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல முடியாமல் மாணவர்கள் வருந்தும் நிலை எதிர்காலத்தில் உருவாகும் ஆபத்து நெருங்குகிறது.

இதனை மாணவர்களும் பெற்றோரும் உடனடியாக உணர வேண்டும். மாணவர்களின் இந்த அவல நிலையைப் புரிந்துகொண்டு, பாதுகாப்பான சூழலில் அரசு விரைந்து பாடசாலைகளை முழுமையாகத் திறக்க வேண்டும்.

பெற்றோர்களும் தங்களின் பிள்ளைகளைக் பாடசாலைக்கு துணிந்து அனுப்ப வேண்டும். துடிப்பை இழந்து நான்கு சுவருக்குள் வாடி வதங்கியும், செல்போனின் மாய வலையில் சிக்கியும் இருக்கும் மாணவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்ட வேண்டும்.

**சாம்பல் தீவான் - வன்குவர்**


உ

பிக்கரிங் நகரில்

# அருள்ஜோதி சிவாலயம்





1400 Baylyst Unit - 13 அமைந்திருக்கும்
அருள்மிகு கௌரி அம்பிகா சமேத சாம்பசிவ பெருமானுக்கு
"மஹா கும்பாபிஷேகம்"

20-10-2021 புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி
23-10-2021 சனிக்கிழமை காலை 9மணி முதல் 4மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்
24-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 தொடக்கம் 8.30 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அடியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து சிவப்பரம் பொருளின் அருளைப் பெருமாறு அழைக்கின்றார்கள் ஆலய அறங்காவல சபையினர்.

தொடர்புகளுக்கு: 647–746–7474

ஜீவன் முக்தி (பகுதி ) 127

# வார்த்தைகளால் விவரிக்க முடியாத பேரனுபவம்

தரிசனம் கொடுத்தது அருணகிரி யோகீஸ்வரர்தான் என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டேன். இதோடு கதை முடியவில்லை. இப்போதுதான் கதை-யே ஆரம்பிக்கப்போகிறது.

அந்தாம்மாவிற்குத் தாங்காத வியப்பு! ஆச்சரியம்! என்னவென்றால் அவர்களுக்குத் தெரியும் என்னால் ஓரழவிற்குத்தான் பொய்சொல்ல முடியும் என்று அதற்கு அடையாளமாக ஒரு துணி வேறு சாட்சியாக இருக்கிறது.

அந்தம்மா உடனே போய்விட்டார்கள். ஆனால எனக்கு என்ன கசலையென்றால் நான், இந்தனை நாளாகப் பார்த்துக் கொண்டிருந்த நபர் அன்று வராமல் போய்விட்டாரே என்று..

இவ்வளவு நாளாகக் கூப்பிட்டவுடனே வருவார். இந்த குப்பம்மாள் வந்ததினால்தான் வரவில்லை என்று நினைத்தேன். ஒருவேளை, நாம் இந்த இரகசியத்தை வெளியே சொல்லியிருக்கக் கூடாதே? அந்தம்மாவிடம் நான் சொன்னதினால்தான் கோபித்துக் கொண்டு வெளியே வராமல் இருக்கிறாரோ?

ஏனென்றால் என்னைப் பொறுத்தமட்டில், அருணகிரியோகிஷ்வரர் ஒரு சந்யாசி. தினந்தோறும் நான் பார்த்துப் பழகிக் கொண்டிருந்த ஒருவர். அந்தம்மாவைப் பொறுத்தமட்டில் அவர் எப்பவோ இறந்து போனவர். இப்போது வந்து தரி-சனம் கொடுத்திருக்கிறார். ஒரு ஜீவசமாதி அடைந்த ஞானி வந்து தரிசனம் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான்.

ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் அவர் வராமல் இருப்பது மிகப் பெரிய இழப்பு. அதுவும் ரொம்ப நாளாகப் பழகிய ஒரு ஆழ்ந்த ஈர்ப்புடைய தேழரை, ஒரு நண்பரை இழந்தால் எப்படி இருக்கும்? அதைவிட ஆழமான. இழப்பாக இருந்தது.

பக்தி ஸ்புராண தியான முகாமில் கலந்து கொண்டிருந்தீர்களென்றால் அதில் மஹாபாவத்தைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள் அதாவது ஐந்து பாவங்களையும் தாண்டி, தானே அதுவாக உணர்வது மஹாபாவம்.

அந்த மகாபாவத்தைத் தொடர்பு அவருக்கும், எனக்கும் இருந்தது. ரொம்ப ஆழமான தொடர்பு.

ஒரு ஏழெட்டு மாதத்திற்குள் ரொம்ப ஆழமாக உருவாகிவிட்டது.

அதாவது பள்ளி விடுமுறை விட்ட மே மாதத்திலிருந்து, ஜனவரி மாதம்வரை. அப்படியென்றால் எட்டு மாதத்தில் அந்த ஆழமான தொடர்பு மலர்ந்திருந்தது. 'சாமி, சாமி' என்று கூப்பிட்டாலும் அழுதாலும் சத்தமிட்டாலும் வரமாட்டேன் என்கிறார். இது நாள்வரைக்கும் கூப்பிட்டால் உடனே வருவார். இப்போது குப்பம்மாவை அழைத்து வந்து கூப்பிட்டால் வரவேயில்லை. அதனால் அந்த அம்மா வீட்டிற்குத் திரும்பியவுடன் துக்கம் தாளாமல் நான் 'ஓ' வென்று அழ ஆரம்பித்துவிட்டேன். எதையோ இழந்த ஒரு துக்கம் என்னை வாட்டியது.

நன்கு ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். துக்கம் என்றால் சாதாரண துக்கம் இல்லை. பாகவதத்தில் ஒரு கதை வருகிறது.

ஒரு கோபிகைக்கு கிருஷ்ணருடைய புல்லாங்குழல் கீதம் வனத்திலிருந்து கேட்கிறது. கேட்டவுடனேயே வீட்டிலிருந்து கிருஷ்ணரைப் பார்ப்பதற்காக ஓடுகிறார் வீட்டின் நுழைவாயிலில் மாமியாரும் நாத்தனாரும் உட்கார்ந்து இருக்கின்றனர்.

அவர்கள் இருவரும். 'எங்கே போகிறாய்'? என்று கேட்கின்றனர்.

இவளால் இவர்களை மீறி ஓடவும் முடியவில்லை. ஆனால் அவர்கள் தடுப்பதனால் போகாமலும் இருக்க முடியவில்லை. வீட்டின் நுழைவாசலை விட்டம் என்பார்கள். அந்த நிலைப்படியை பிடித்துக் கொண்டு அப்படியே நிற்கிறாள்.

இந்தக் கதை ரொம்ப அழகான கதை.... நிலைப்படியை பிடித்துக் கொண்டு அப்படியே நிற்கிறாள்.

கிருஷ்ணருடைய கானத்தை கேட்பதனால் அந்த இனிமையான புல்லாங்குழலோசையைக் கேட்டவுடனேயே உடலில் ஏற்படுகின்ற ஆனந்தம், கிருஷ்ணனுடன் வாழ்ந்த அந்த நினைவுகள் மேலெழுந்து அதில் ஏற்படுகின்ற ஆனந்தத்திலே அவர் சொர்க்கத்தின் உச்சியைச் சில வினாடிகளில் தொட்டுவிடுகிறாள். அவளுடைய நல்ல கருமங்களெல்லாம் அந்த சொர்க்க அனுபவத்தில் எரிந்து போய்விட்டதாம்.

போகவிடாமல் மாமியாரும், நாத்தனாரும் தடுப்பதினால் போக முடியவில்லை என்ற மாளாத துக்கத்தினால் நரகத்தின் உச்சியை சில வினாடிகளில் பார்த்து விடுகின்றாள். அவளின் எல்லாவிதக் கெட்ட கருமங்களும் இந்த நரக வேதனையில் எரிந்து போய்விட்டதாம்.

சுகப்பிரம்மம் மிக அழகாக இதைச் சொல்கிறார், 'இந்த மாதிரி நல்ல கருமமும், கெட்ட கருமமும் சேர்ந்து எரிந்து போனதினால் அந்த இடத்திலேயே அவள் ஞானமடைந்து அந்த இடத்திலேயே அவள் ஞானமடைந்து கீழே விழுந்தாள்.' நானும் அதே சூழ்நிலையில்தான் அன்று இருந்தேன்.

அதே மனநிலையில்தான் உருவாக்கித் துடித்துக்கொண்டிருந்தேன். அங்கே அந்த அருணகிரியோகீஸ்வரரைப் பார்த்து, அந்த யோகியோடு ஒன்பது மாதம் அந்த ஏழெட்டு மாதங்கள் வாழ்ந்த அந்த நினைவு அலைகள் பொங்குவதனால் ஏற்படுகின்ற ஆனந்தம் ஒருபக்கம்.

அதாவது உங்கள் உயிருக்கே ஒருவன் தோழனாகக் கிடைத்தால் எப்படி இருக்குமோ, அந்த ஆனந்தம், அவரை நினைப்பதினாலே பொங்குகின்ற ஆனந்தம் ஒரு பக்கம்.

'அவருக்கத் துரோகம் செய்துவிட்டோமோ, நினைத்ததற்கு எதிராக நடந்துவிட்டோமோ?'

'அதனால்தான் எவ்வளவு கூப்பிட்டாலும் அதன் பிறகு வரவே மாட்டேன்கிறாரோ?' என்கிற துக்கம் மறுபக்கம்.

அன்பு அதிகமானாலே அவருடைய அன்பை இழந்திடுவோமோ என்கிற பயம் இருந்துகொண்டே இருக்கும். இந்தப் பயம் ஒரு பக்கம். ஆனந்தம் ஒரு பக்கம்.

அதனாலேயே நல்ல என் கருமங்கள் எல்லாம் எரிந்து போய்விட்டது.

அவரோடு அந்த 9 மாதம் வாழ்ந்தது, அந்த நினைவெல்லாம் நினைத்துப் பொங்குவதினாலே, அந்த ஆனந்தத்தில் என்னிடமிருந்த நல்ல கருமங்களெல்லாம் எரிந்து விட்டன.

இன்னொரு பக்கம் 'அவர் வராமலேயே போய்விடுவாரோ?' என்ற துக்கத்தில் உடலை சமைப்பதற்காக எடுத்துவந்த கெட்டகருமங்கள் எல்லாம் எரிந்து விட்டன.



எப்படி அந்தக் கோபிகை இரண்டிற்குமிடையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாளோ, அதுபோன்றே நானும் இரண்டிற்குமிடையில் உழன்று கொண்டிருந்தேன். இந்த இரண்டிற்குமிடையில் அலையாடிக் கொண்டிருந்தேன்.

இறுதியில் இரவு 10 மணிஇருக்கும். மணி பத்தாகிவிட்டது. பத்தாகிவிட்டால் கோவில் நடை மூடுவதற்குள் எல்லோரும் சேர்ந்து பிரகாரத்தைச் சுத்தம் செய்வார்கள். அந்தக் கோவில் பாதுகாவலர்கள், பக்தர்கள் எல்லேரையும் வெளியில் அனுப்பிவிட்டு சுத்தம் செய்து கொண்டிருக்கின்றனர். அந்தக் காவல்காரர் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அதனால் என்னை மட்டும் அனுப்பவில்லை.

ஏனென்றால் நான் அவர்களுக்கு சுத்தம் செய்வதற்கு பைப் பிடித்தாக வேண்டும். அதனால்தான் நான் மட்டும் அங்கு உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து கோவில் நடை சாத்துகின்ற நேரம் வந்தது. இறுதியில் பள்ளியறை வைத்து நடை சாத்துகின்ற நேரம் வந்ததும் அங்கிருந்த காவல்காரர் சொன்னார், 'ஏம்பா நடைசாத்துறாங்க. பள்ளியறை எல்லாம் வைச்சிட்டாங்க. கோயிலுக்குள்ளே சென்று தரிசனம் செய்து விட்டு வந்திடேன்.'

நானோ இங்கு அழுது கொண்டு இருக்கிறேன். அதுவும் துக்கம் தாளாமல் அழுது கொண்டே இருக்கிறேன்.

'உள்ளே சென்ற தரிசனம் செய்துவிட்டு வந்திடாமில்லையா, கோவில் மூடப்போறாங்க' என்று சொன்னஉடனே எழுந்து வேகவேகமாக ஓடினேன்.

'இந்தசாமி இவ்வளவு கூப்பிடும் வரவில்லையே என்ற துக்கம் தொண்டையை அடைத்தது. இருந்தாலும், உணர்வில்லாமல் ஓடிடீனடை என்கண்களில் தாரை தாரையாக, தன்னால் நீர் கொட்டிக் கொண்டிருந்தது. அதைத் துடைக்க வேண்டும்' என்ற எண்ணம்கூட அப்போது எழவில்லை.

கனமான இதயத்தோடு இதைவிட ஒரு பெரிய துக்கம் இருக்காது என்ற நிலையில் உடல் தன்னால் கோயிலுக்குள் நுழைந்தது.

பள்ளியறை பூஜை நேரமாதலால் பூஜாரிகள் எல்லாரும் வெளியே சென்றிருந்தார்கள். அப்போதெல்லாம் மணிநேரமும் அங்கேயே இருக்க மாட்டார்கள். மேலும் நான் அங்குதான் பெரும்பாலும் இருப்பேன் என்பதால் அங்கிருந்தவர்களும் என்னைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

நேராக உள்பிரகாரத்திற்குச் சென்றேன். என் உள்ளமெல்லாம், 'சாமி! சாமி!! சாமி!!;!' என்றே துடித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அங்கு வேறு யாருமே இல்லை. நேராக கர்ப்பக்கிரகதத்திற்குள் ஓடினேன்.

எப்பவும் கும்பிடுவது போல் கைகளைக் கூப்பி சாமியைக் கும்பிடுவதற்கு கண்களை மூடும் தருவாயில்தான் சட்டென்று உரைத்தது. இங்கு ஏற்கனவே யாரோ இருக்கிறார்கள்.

யாராக இருக்கும்? என்ற பார்ப்பதற்கு கண்களைத் திறந்து பார்த்தேன். திகைத்து நின்றேன். புலலரித்துப் போனேன். நரம்பெல்லாம் உருகிப் போனது...

அங்கு லிங்கத்தின்மீது அமர்ந்து என்னைப் பார்த்ததும் இழந்ததைப் பெற்ற ஆனந்தம் பொங்கியது.

'சாமீ... இங்கயா இருக்கிறீங்க!

நான் உங்களை எங்கெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்று சப்தமாக சொல்லிக்கொண்டே

'சாமி' என்று பெருங்குரல் எடுத்து கதறியபடியே உள்ளே ஓடினேன்.

உயிருக்கும் உயிரான உயிரைப் பிரிந்த சோகம் போக்க கைகளை நீட்டி அவரைத் தொட்டேன்.

அதற்குள் அவரும் தன் கைகளை என்மீது வைத்தார்.

என் கைகளும் அவருடைய கைகளும் இருவரின் உடலையும் ஒரே நேரத்தில் தொட்டுக் கொண்டன.

அந்த வினாடியில்தான் அன்கிளச்சிங் எனும் மஹா பேரனுபவம் என்னுள் நிகழ்ந்தது.

அதை வார்த்தைகளால் என்னால் விவரிக்க முடியவில்லை.

வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். நான் அவருக்குள் நான் இருப்பதையும் அவர் என்னுக்குள் இருப்பதையும் அனுபவமாக உணர்ந்தேன்.

அன்றிலிருந்து நான் வேறு அவர் வேறு என்ற பேதம் இல்லாமல் பொங்கிக்கொண்டே இருக்கின்ற அந்த அனுபவம் இன்றுவரை உடலை இயக்கிக் கொண்டிருக்கிறது.

அந்த சக்திதான் இந்த எல்லா வேலைகளையும் எல்லா அற்புதங்களையும் எல்லா சாதனைகளையும் செய்து கொண்டிருக்கிறது. எப்படி அந்த சிறிய பறவை பெரிய பறவையோடு ஒன்றி மலர்ந்ததோ

எப்படி நல்ல கருமமும், கெட்ட கருமமும் தீர்ந்ததினால் அந்த கோபிகை, ஞானம் அடைந்தாளோ அதேமாதிரி, அந்த வினாடி 'அவர் வேறல்ல. நான் வேறல்ல' என்று மிகத் தெளிவான அனுபவம் மலர்ந்தது.

'பெரிய ஆலமரம் ஒன்று திருவண்ணாமலையின் தெற்குப் பாகத்தில், தெற்குச் சாரலிலே அருணகிரி யோகீஸ்வரருடைய இடம் இருக்கின்றது' என்பதை ரமண-மகரிஷியும் உறுதி செய்கின்றார்.

இதேபோன்று என்னுள் பக்தியையும், சிரத்தையையும் மலர்த்திய நிகழ்ச்சி ஒன்றையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். சிலருக்கு இதெல்லாம் வெறும் மூடநம்பிக்கையாயக, கட்டுக்கதையாகக் கூட இருக்கலாம்.

இவர்களைப் பார்த்தீர்களென்றால், அவர்கள் வாழ்க்கையில் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் குறைகூறிக்கொண்டிருப்பார்கள், எதற்கெடுத்தாலும் தர்க்க ரீதியாகவே பார்ப்பார்கள். புரிந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஒவ்வொரு வினாடியும் தவறவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தங்களுக்குள் இருக்கும் ஆனந்தத்தை உள்ளுக்குள் தேடாமல் வீணடித்துக் கொண்டிருப்பவர்கள். வரலாற்று ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் உண்மையான இந்த சம்பவத்தை உணர்வு பொங்க ஒருவர் கேட்பதனாலேயே அவரின் நினைவில் ஓடுவதனாலேயே அந்த நிலையை அடைந்துவிட முடியும்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

# அன்பின் தொனி - 626

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

**அற்புதத்தின் இரண்டாம் பகுதி**

அற்புதத்தின் இரண்டாவது பகுதியாக இரட்சிக்கப்பட்ட மனிதனுக்குள் தேவன் நற் கிரிகைகளை நடப்பிற்கிறார். ரோமர் ஆறாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாக:

"ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லு வோமோ? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமை-யினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலா-ல் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்ட வர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம்மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார், அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த் தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவய வங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. இதி-னால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? கூடாதே. மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். உங்கள் மாம்ச பலவீ னத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதி-னால், பரிசுத்த மாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". **- ரோமர் 6: 1-23**

"ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்த காரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமை-யினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நி யராயிருந்து, உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காம விகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசு வினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனு'னைத் தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக் கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது, பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ள வனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம், பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சுகல வி-தமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". **- எபேசியர் 4: 17-32**

தொடரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS C R PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# மலேசியாவின் துயரம் மகாதீர்

மலேசிய மடல்



நக்கீரன்

கோலாலம்பூர், அக்.07:

**நா**ட்டில் அடிக்கடி நிகழும் ஆட்சி மாற்றங்களுக்கும், கட்சிதாவும் அல்லது அணி-மாறும் கீழான அரசியல் கலாச்சாரத்திற்கும் கொ-ரோனா பரவலால் மக்களும் அரசாங்கமும் ஒரு-சேர அல்லல்படுவதற்கும் ஒற்றை மனிதர்தான் மூல காரணம். அவர்தான் துன் டாக்டர் மகாதீர்.







மத்தியக் கூட்டரசாங்கம் அடிக்கடி மா-றியதைப் போல மாநிலங்களிலும் ஆட்சிகள் மாறின் அணி தாவும் தவளைக் கலாச்சாரம் இன்னமும் நீடிக்கிறது. மலாக்கா மாநில ஆட்சி கடந்த வாரம் ஆட்டம் கண்ட நிலையில், தற்பொழுது நிலைகுலைந்து, சட்டமன்றமே கலைக்கப்பட்டு நிச்சயமற்ற நிலையை எதிர்நோக்கி இருப்பது இன்னொரு சான்றாகும்.

கடந்த ஆண்டில் சபா மாநில சட்டமன்றத்திற்கு தேர்தல் மட்டும் நடைபெறாமல் இருந்திருந்தால், சபாவில் மட்டுமல்ல தீபகற்ப மலேசியா-விலும் சரவாக்கிலும் கொவிட்-19 ஆட்கொல்லி கிருமி இந்த அளவுக்கு பரவியிருக்காது. பல்லாயிரக் கணக்கில் பொதுமக்கள் மடிய வேண்டிய சூழலும் எழுந்திருக்காது.

சபா மாநிலத்தில் வாரிசான் கட்சி தலைமையில் சீராக நடந்து கொண்டிருந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டதால் சினம் கொண்ட மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அப்டால் சட்டமன்றத்தைக் களைத்தார். அதனால் மறு தேர்தல் நடத்த வேண்டிய கட்டாய நிலைமைக்கு அம்மாநில அரசியல் களம் தள்ளப்பட்டது.

இதனால் தீபகற்ப மலேசியாவில் இருந்து கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என ஏகமாக சபா மாநிலத்திற்கு படை எடுத்தனர். அவ்வாறு சென்றவர்கள் கொரோனா பரவல் குறித்து எவ்வித பாதுகாப்பு அம்சத்திலும் அக்கறை செலுத்தவில்லை.

விருப்பம்போல பிரச்சாரம் மேற்கொண்டதுடன் கொரோனா-19 குறித்து எஸ்.ஓ.பி. என்னும் நிர்ணயிக்கப்பட்ட நிருவாக நடைமுறைகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டு, தேர்தலில் பணியில் மும்முரம் காட்டினர். அவர்கள் எல்லாம் தேர்தல் முடிந்த சூட்டோடு தீபகற்ப மலேசியாவிற்கு திரும்பினர். அவ்வாறு திரும்பியவர்கள், 14 நாள் தனிமைப்படுத்துதல் என்னும நடைமுறையையும் பின்பற்றாத சூழ்நிலையில்தான் கொரோனா பரவல் மெல்ல தலைதூக்கியது.

சபா மாநிலத்தில் மட்டும் அல்ல் பேராக், ஜோகூர், மலாக்கா, கெடா மாநிலங்களிலும் ஆட்சிகள் மாறின. இதற்கு காரணம், மக்கள் பிரதிநிதிகள் மனம் கூசாமலும் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களை மதிக்காமலும் அணி தாவியதுதான்.

இதனால், மகாதீரின் மகன் முக்ரீஸும் இரண்டாவது முறை-யாக தன்னுடைய மந்திரி பெசார் பதிவியை இழக்க நேர்ந்தது. அத்துடன், பேராக் மாநிலத்தில் இன்னொரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது, அம்மாநில மக்கள் மூன்றாவது மாநில ஆட்சியைக் கண்டுள்ளனர்.

இதனுடைய தொடர்ச்சியாகத்தான், இப்பொழுது மலாக்கா மாநிலத்தில் இன்னொரு ஆட்சிக் கவிழ்ப்பு நாடகம் அரங்கேற்றப்பட்டு, அது மாநில சட்டமன்றம் கலைக்கப்படும் நிலைவரை சென்றுவிட்டது. அணி தாவும் மனப்பான்மையில் இருந்தவர்களின் பதவிப் பேரம் படியாததால் அந்த முயற்சி பாதி கிணறு தாண்டிய கதையாக முடிந்துவிட்டது.

மலாக்காவின் இந்நாள் முதல்வர் சுலைமான் முகமட் அலிக்கும் முன்னாள் முதல்வர் இட்ரிஸ் ஹரோனுக்கும் இடையே நிகழும் பதவிப் போராட்டத்தின் விளைவாகும். உண்மையில், இது அம்னோவுக்குள் நிகவும் பதவிச் சண்டை என்பதால் நம்பிக்கைக் கூட்டணி தள்ளி நின்று வேடிக்கை பார்க்கிறது.

இத்தனை அரசியல் சதிராட்டங்களுக்கும் ஒட்டுமொத்த காரணம் மகாதீர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி மூலம் தன்னால் முடிந்தவரை அனுபவித்துவிட்டு, அடுத்து அன்வாருக்கான வாய்ப்பு வந்த வேளையில் அடுத்துக் கெடுக்கும் வேலையை கச்சிதமாக நிறைவேற்றி அந்த ஆட்சியை கவிழ்த்தார் மகாதீர்.





இதனை அடுத்துதான், நிலை-லயான ஆட்சி நடந்து கொண்டிருந்த மாநிலங்களிலும் அடிக்கடி மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அரசியல் நிலைத்தன்மைக்கு பெயர் பெற்ற மலேசியா, இப்பொழுது அரசி-யல் நிலையற்றத் தன்மைக்கு ஆளாகி, இதன்விளைவாக நாடும் மக்களும் பாதிக்கப்பட்டிருப்பதற்கு மகாதீரே முழு காரணம். மொத்தத்தில் தேசத்தின் துயரம் துன் மகாதீர்தான்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாகக் கூறி இரு மக்கள் பிரதிநிதிகள் உட்பட 10 பேரை கைது செய்து, ஜனநாயக செயல் கட்சிக்கும் மலேசிய முன்னேற்றக் கட்சிக்கும் நெருக்கடியை ஏற்படுத்தினார் மகாதீர். இதன்மூலம் இன்னொரு காயையும் அடித்தார் அவர் பிரச்சினைக்குரிய சமய போதகர் ஸக்கீர் நாயக்கிற்கு எதிராக ஒருவரும் வாய்திறக்காத - கருத்து சொல்ல முன்வராத நிலைமையை அவர் ஏற்படுத்தினார்.

அத்துடன், 2019 அக்டோபர் முதல் வாரத்தில் ஐநா மன்ற பொதுப்பேரவை கூடியபொழுது காஷ்மீர் பிரச்சினையை எழுப்பி பாகிஸ்தானுக்கு ஆதரவாகப் பேசிய-தால் எரிச்சல் அடைந்த இந்திய அரசாங்கம் மலேசியாவில் இருந்து செம்பனை எண்ணெய்யை கொள்முதல் செய்வதில் பின்வாங்கியது.

முகைதீன் காலத்தில் அது மீண்டும் சீரடையத் தொடங்கிய நிலை-லயில், நல்ல வேளை இப்போது மகாதீர் பிரதமராக இல்லை. ஒருவே-ளை அவர் பிரதமராக இருந்திருந்தால், கடந்த மாதம் நடைபெற்ற ஐநா மன்ற பொதுப்பேரவையின்போது மீண்டும் காஷ்மீர் பிரச்சினையில் சமய அடிப்படையில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக குரல் எழுப்பி, இந்தியாவுடனான செம்பனை வர்த்தகத்தை முடக்கி, நாட்டிற்கு மேலும் பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தி இருப்பார்.





இஸ்மாயில் சாப்ரியாக இருந்ததால் கடந்த மாத பிற்பகுதியில் காணொ-ளிக் காட்சி மூலம் அவர் ஆற்றிய உரையில் பாலஸ்தீன விவகாரத்தோடு முடித்துக் கொண்டு, உலகமே ஒரு குடும்பம் என்ற சிந்தனையையும் முன்வைத்தார்.

மொத்தத்தில், கடந்த 14ஆவது பொதுத் தேர்தலில் ஒரு பிரதமருக்காக வாக்களித்துவிட்டு நாட்டு மக்கள் இப்போது மூன்று பிரதமர்களைக் கண்டுள்ளனர். அதுவும் யார் பிரதமராக வரவேண்டும் என்று கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களித்தார்களோ, அவர் வரமுடியவில்லை மாறாக, மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினரும் மக்களுக்கு துரோகம் இழைத்து அணிதாவியர்களும் பதவி வகிக்கின்றனர்.

இது,

காத்திருந்த அத்தை மகன் கண்கலங்கி நிற்கையிலே
நேத்து வந்த ஒருவனுக்கு மாத்து மாலை போட்டது
ஏன் கண்ணம்மா? என் கண்ணம்மா?

என்னும் வண்ணக்கிளி திரைப்பட பாடல் வரிகளைத்தான் நினைவுப்படுத்துகின்றன. இதற்கெல்லாம் ஒரு நல்ல தீர்ப்பு அடுத்தப் பொதுத் தேர்தலில் கிடைக்காமலா போகும்?

***நக்கீரன்*** *- Nakkeeran 013-244 36 24*

**வன்னிச் சங்கம் - கனடா.**

**VUnited Care for Kids Inc.**

**Organization – Reg # 1913383. Charitable Organization.**
**Head office address: 12 Pine crest St, Markham (ONT) L6E1C8.**
**Branch address: 3351 Markham Rd, Scarborough ON, M1X 0A6.**

**Secretary@vcarekids.org** **info@vcarekids.com** **416-644-1113.**

**President:**
**Mr P. Sivasuthan**

**Secretary:**
**Mr. K. Thamilselvan.**

**Treasurer:**
**Mr. K. Vijayakumar.**

**Auditors:**
**Mr K. Paramanantham**
**Mrs P. Yogamalar**

30– 09 – 2021.

**அனைத்து வன்னிச் சங்க பொதுச்சபை உறுப்பினர்களுக்கும். அன்புடையீர்!**

**வன்னிச் சங்கம் - கனடா. (V United Care for Kids Inc).**
**பொதுக் கூட்ட அறிவித்தல்.**

மேற்படி சங்கத்தினது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஐப்பசி 2021ம் திகதி நடாத்துவதற்கு நடைமுறை நிர்வாகசபையானது தீர்மானித்துள்ளது. எனவே ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய வருடாந்தச் சந்தாப்பணம் செலுத்தவேண்டிய உறுப்பினர்கள் 2021ம் ஐப்பசி மாதம் 22ம் திகதிக்கு முன்னராக பொருளாளரிடம் நேரடியாகவோ அல்லது e transfer மூலமாகவோ அல்லது பொருளாளருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு வங்கி இலக்கத்தினைப் பெற்று வைப்புச் செய்யவேண்டும். சந்தாப்பணத்தினை வங்கியில் வைப்புச் செய்பவர்கள் வைப்புப் பற்றுச்சீட்டினைப் பொருளாளருக்கு Text or WhatsApp or Viber or email மூலமாக அனுப்பிவைப்பதோடு அதனைப் பொருளாளருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும். e transfer மூலமாக அங்கத்துவ பணம் செலுத்துபவர்கள் தங்களது பெயரினை உறுதிப்படுத்துவதோடு அதற்குரிய கடவுச் சொல்லையும் (Password) அனுப்பி வைத்தல் வேண்டும்.

2018ம் ஆண்டில் இருந்து சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் 2021ம் ஆண்டுவரையும் சந்தாப்பணம் செலுத்தாது நிலுவையாக உள்ள ஆண்டுகளுக்குரிய சந்தாப்பணத்தினை ஆண்டுக்கு 10 டொலர்கள் வீதம் செலுத்தவேண்டும் என கேட்கப்படுகின்றீர்கள்.

உரிய முறையில் அங்கத்துவம் பெற்றவர்கள் மாத்திரமே இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**பொதுக் கூட்டம்: காலம்: 30 ஐப்பசி 2021. பிற்பகல் 1.00 மணிதொடக்கம் 6 மணிவரை.** *கோவிட் 19 கட்டுப்பாடுகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும்.*

**இடம்: 635 Middlefield Road, Scarborough (ONT) ஐயப்பன் ஆலய மண்டபம்.**

**குறிப்பு: கோவிட் - 19 தொற்று காரணமாக கூட்டம் மண்டபத்தில் நடாத்தமுடியா நிலை ஏற்படுமாயின் Zoom மூலமாக நடாத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

**க. தமிழ்ச்செல்வன்**
**செயலாளர்.**
**V United Care for Kids Inc.**

**மேலதிக தொடர்புகளுக்கு: 416-644-1113, Ex 201**
**செயலாளர்: 416-305-4887,**
**பொருளாளர்: 647-202-8286. Email: vunitedcare4kids@gmail.com**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 967



## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் உடுப்பிட்டி

இக்கோயில் காலத்திற்குக் காலம் புனரமைக்கப்பட்டுப் பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. சிவாகமங்கள் கூறும் கிரியைகளி-லே கும்பாபிஷேகம் முதன்மை பெறுகின்றது. இத்தகைய மகா கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறுவதால், ஏனைய வழிபாடுகள், மகோற்சவங்களை விடச் சிறப்பானதாக எண்ணப்படுகின்றது. பழுதடைந்த கோயிலை-த் திருப்பணிகள் மூலம் புதுப்பித்து, அக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு நிகழ்வதே புனருத்தாரண கும்பாபிஷேகம் எனப்படும்.

இவ்வூரில் கதிர்காம உடையாரின் சந்ததியினர் மிகச் செல்வாக்குடன் விளங்கியதோடு, சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திருப்பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். கி.பி 1874 ஆம் ஆண்டு கதிர்காம உடையாரின் மகனா-ன குமார் என்பவராலும், கி.பி 1897 இல் கதிர்காம உடையாரின் பேரனாகிய குமார் செல்லப்பா என்பவராலும், மகாகும்பாபி'கேம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதன்பின்னர் 1922 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, நிற்சிங்கர் வீரகத்திப்பிள்ளை என்பவராலும், இவரது மகனான சின்னத்துரை எனப-வராலும், வெள்ளைக்கல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, 1943 ஆம் ஆண்டு மீண்டும் மகா கும்பாபி'கேம் நடத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து சகல விழாக்களும் வீரபத்திர சுவாமி கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மீண்டும் திரு. வீ. சின்னத்துரை என்பவரால் 1957 ஆம் ஆண்டு இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1979 ஆம் ஆண்டு திரு. அ.சி. குமாரசாமியாலும், இவரின் சகோதரர்களாலும் கும்பாபிஷேகம் நிறை வேற்றப்பட்டது. எனினும், இக்கோயில் 1960, 1970 ஆம் ஆண்டளவில் எவ்வித பராமரிப்புமின்றிச் சீர்குலைந்து காணப்பட்டது. வீரபத்திரசுவாமி மீது ஆறராத பக்தி கொண்ட இவ்வூர்மக்கள், இந்நிலை கண்டு மனம் வருந்தினர். இதன் வெளிப்பாடாக 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், பத்துப்பேர் கொண்ட சபையொன்று அமைக்கப்பட்டு, கோயிலை நல்லநிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, இக்கோயிலை நிர்வகிக்க ஏதுவாகத் தர்மகர்த்தாசபையொன்றை உடுப்பிட்டி மக்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கினர். இத் தர்மகர்த்தாசபை, கோயிலைப் புனர்நிர்மாணம் செய்ய உரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட்டது. அத்தோடு கோயிலோடு இணைந்த பல பணிகளையும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. இதன் முதற் கட்டமாக 1981 ஆம் ஆண்டு முதல் நவராத்திரிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பண்ணிசை, சமயப்போட்டிகள் ஆகியவற்றை நடத்தி மாணவர்களை ஊக்குவிக்குவித்தனர். சைவப்பெரியார்களை அழைத்து மகாபாரதம், இராமாயணம் மற்றும் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, இக்கோயில் மூலம் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். அத்தோடு கோயில் விழாக்கள், பூசைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாய்ப்பேற்பட்டது.

இவ்வாறான மாற்றங்களினால் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், இவ்வூர் மக்களும் புதுப்பொலிவு பெற்றனர் என்பது சாலவும் பொருந்தும். இவ்வாறன நிர்வாக மாற்றத்தினைக் கொண்டுவரப் பலரின் பங்களிப்பு உதவியுள்ளது. இவர்களுள் திருவாளர்கள் வே.சின்னத்தம்பி, க.செல்லையா, வே.கந்தசாமி, சி.கந்தசாமி, க.ஆறுமுகம், இ.இராசரத்தினம், வே.செல்வரத்தினம், சி.ஆனந்தசிவம், சி.முத்துக்குமாரு, செல்வி. சீதா வேலுப்பிள்ளை மற்றும் இவர்களோடு சேர்ந்து சேவையாற்றிய சி.அழகையா, இ.பஞ்சநாதன், சி.கார்த்திகேசு, பொ.வேலாயுதம், ந.பாலசிங்கம், செ.சிவகுரு, ஆகியோரின் பணி என்றும் நினைவுகூரத்தக்கது.

ஈழவளநாட்டில் சமய சமூகத்துறையில் கணிசமான பங்களிப்பைப் பல பெண்மணிகள் செய்திருந்தபோதிலும், அப்பணிகள் யாவும் இலைமறைகாயா-கவே இருந்துள்ளது. உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அயராது உழைத்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் ஆசிரியையாகவும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்லூரியின் உதவி அதிபராகவும் இருந்து, தான் பிறந்த மண்ணுக்காக மட்டுமன்றி, தமிழ்ச்சசமூகத்தின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர். பல மகளிர் அமைப்புக்களை உருவாக்கி நிர்வகித்து பல சமுதாயப் பணிகளைச் செயற்படுத்தியவர். இவ் அம்மையார் இக்கோயில் வளர்ச்சியின் அச்சாணியாகத் திகழ்ந்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு தமிழ்மக்களுக்கெதிரான இராணுவக் கட்டுப்பாடுகள் அதிகரித்தபோது, வடமராட்சியிலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். உடுப்பிட்டியிலுள்ள மக்களும் வல்லை வெளிக்கப்பால் சென்று விட்டபோதிலும், குருக்கள் குடும்பத்தினருடன் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலில் தங்கியிருந்து, வேறிடங்களிலிருந்து நகர்ந்து கொண்டிருந்த மக்களுக்கு உணவளித்து அரும்பணியாற்றிய பெருமை பெற்றவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். தாக்குதல்கள் உச்சக்கட்டமடைந்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் தாக்குதலில் தரைமட்டமானபோதிலும், இறையருளால் இவற்றிற்கண்மையிலிருந்த சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், அங்கு தங்கியிருந்தோரும் எவ்வித அபாயமும் இன்றித் தப்பியதை, வீரபத்திரருடைய அருள் என்று இன்றுவரை போற்றித் துதித்து மகிழ்வர்.

பல்வேறு சூழ்நிலைகளில் சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில், பொருளா-தார நெருக்கடிக்குள்ளாகி ஆலய குருக்களுக்குரிய வேதனத்தை வழங்கவோ, அன்றி நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வதற்கோ இடையூறு ஏற்பட்ட வேளை-யில், மக்களுடைய ஆதரவோடு நல்ல பல திட்டங்களை வகுத்து இன்றுவரை அத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதற்கும் ஆதாரமாக இருந்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அவர்கள்.

இவ் அம்மையார் செய்த சமய, சமூகப் பணிகளைக் கோடிட்டுக் காட்டுவதென்பது இயலாத காரியம். இவ் அம்மையார் புலம்பெயர்ந்து கனடாவி-ல் வாழ்ந்தபோதிலும், வீரபத்திரசுவாமி கோயிலின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் அரும்பணியாற்றியாற்றியுள்ளார். செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்-களை விட்டு, வீரபத்திரசுவாமி கோயிலின் வரலாற்றையோ அதன் வளர்ச்சியையோ ஆராய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல அம்மையார் ஆரம்ப காலந் தொட்டு வீரபத்திரசுவாமி கோயில் வளர்ச்சியில், திருப்பணியில் ஒரு சிலவற்றை அறிவது அவசியமாயுள்ளது. அம்மையார் அவர்களோடு சேர்ந்து பலரது பங்களிப்பு இக்கோயில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளது.

வளரும்...

மலேசிய மடல்


# 5–ஆம் ஆண்டு வரலாற்றுப் பாட நூல் கிடைக்காமல்

## பேராக் மாநில தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தடுமாற்றம் கல்வித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - பெற்றோர் கோரிக்கை



நக்கீரன்

கோலாலம்பூர், அக்.07:




பேராக் மாநிலத்தில் உள்ள பல மாவட்டங்களிலும் 5-ஆம் ஆண்டிற்குரிய வரலாற்றுப் பாட நூல் கிடைக்காமல் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தடுமாற்றத்திற்கும் பரிதவிப்பிற்கும் ஆளாகியுள்ளதாக அங்குள்ள பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

ஏறக்குறைய பாடங்கள் அனைத்தையும் மாணவர்கள் படித்து முடித்திருக்க வேண்டிய தருணம் இது. இயல்பான சூழ்நிலையில் வழக்கமான முறையில் பள்ளிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று இருந்தால் இந்தப் பிரச்சினையெல்லாம் ஜனவரி மாதமே தீர்க்கப்பட்டிருக்கும்.

பாழாய்ப் போன கொரோனா நச்சுயிரிதான் எல்லாவற்றையும் தடம்புரள வைத்துவிட்டது. இருந்தாலும் ஆசிரியப் பெருமக்களின் பெருமுயற்சியாலும் சமூகத்தின்பால் அவர்கள் கொண்டுள்ள அக்கறையாலும் மாணவர்கள் இணையத்தின் ஊடாக தங்களின் கல்விப் பயணத்தை வீட்டில் இருந்தபடியே தொடர்ந்து வந்தனர்.

பள்ளிகள் திறக்கப்படாத நிலையில், மாணவர்களின் கல்வி தடைபட்டு விடக்கூடாதென்ற அக்கறையில் பெரும்பாலான பெற்றோரும் இடைக்கால ஆசிரியர்களைப் போல செயல்பட்டதையும் காண முடிந்தது.

இப்படிப்பட்ட நிலையில்தான் கடந்த 3-ஆம் நாள் தேசிய அளவ-ில் பள்ளிகள் திறக்கப்பட்டன. இவ்வளவு காலமும் கணினித் திரையிலும் கையடக்கத் திரையில் படித்து வந்த நாம், இனியாவது புத்தகங்களின்வழி ஆசைதீர படிக்கலாமே என்ற ஆர்வத்துடன் பள்ளிக்கு சென்ற பேராக் மாநி-லத் தமிழ்ப் பள்ளி மாணவர்கள், முக்கியப் பாடமான வரலாற்றுப் பாட நூ ல் கிடைக்காமல் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளத் தகவல் அதிர்ச்சியாக உள்ளது.

ஏதோ ஒரு பள்ளி, இரு பள்ளிகள் என்றில்லாமல் பல மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ்ப் பள்ளிகளின் மாணவர்கள் இந்த நிலைக்கு ஆளாகி உள்ளனர்.

இதைப்பற்றி அறிந்த பெற்றோர்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தொடர்பு கொண்டு விசாரித்து வருகின்றனராம்.

இந்தச் சிக்கலுக்கு கல்வி அமைச்சின்கிழ் இயங்கும் பாடநூல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுதான் பொறுப்பு என தெரியவருகிறது. இந்தப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள்தான் அந்தந்தப் பள்ளிக்கும் தேவையான நூல்களை உரிய காலத்தில் அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஏனோ இது குறித்து பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இத்தனைக்கும் திடீரென்று பள்ளிகள் திறக்கப்படவில்லை. இவ்வாண்டு கல்வித் தவணை பலமுறை ஒத்திவைக்கப்பட்டு. அதன் பின்னர் போதிய அவகாசம் வழங்கப்பட்டு சுகாதாரத் துறையால் பள்ளிதோறும் மருத்துவ பாதுகாப்பு நடவடிக்கை யெல்லாம் மேற்கொள்ளப்பட்ட நிலையில்தான் இவ்வாரத் தொடக்கத்தில் பள்ளிகள் திறக்கப்பட்டன.

இந்தச் சிக்கல் குறித்து பேராக் மாநில தமிழ்ப் பள்ளிகளின் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் அந்தந்த மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து விட்டதாகத் தெரிகிறது.




ஒரு மாணவர், எவ்வளவு கற்றிருந்தாலும் ஆற்றல்மிக்கவராக இருந்தாலும் கூட, அவர் ஆண்டு நிறைவுத் தேர்வில் வரலாற்றுப் பாடத்தில் தேர்ச்சி அடையவில்லை என்றால், அவர் அந்த ஆண்டில் தோல்வி அடைந்ததாக வகைப்படுத்தப்படுவார். இந்தப் பாடத்தை மிக முக்கியப் பாடமாக கல்வி அமைச்சு வகைப்படுத்தி உள்ளது.

கல்வி அமைச்சர் மாணவர்களின் கல்வி நலனில் விழிப்பாக இருந்தபோதும் கீழ்நிலை அதிகாரிகள் "இளம் நெப்போலியன்களை"ப் போல நடந்து கொள்வது இன்றளவும் நீடிக்கிறது.

எது எப்படி இருந்தாலும் கல்வித் துறை உயரதிகாரிகள் இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு தங்கள் பிள்ளைகளின் கல்விக்கு உதவி நல்கும்படி பேராக் மாநில தமிழ்ப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# கடந்தவையும் கடப்பவையும் (5)

- உமா மோகன் -

வியாபாரிமூலையைக் கடந்துவிட்டால்
விரைவாக வந்துவிடும் சுப்பர்மடம்

சொப்பனத்தில் அதிகம் வந்த இடம்
சொற்றுணைவேதியனை பாட வைத்த இடம்

பயணிக்கும் பாதையின் இடதுபக்கம் கடல்
வலது பக்கம் இதுவும் உண்டு பெரும் பரப்பில்

அடர்ந்த உயர்ந்த சவுக்கு மரங்கள் - அவை
அடிக்கும் காற்றில் அசையும்போது

ஊ..... என்ற சத்தம் கேட்கும் அங்கே
ஓ.... என்றே அழத்தோன்றும் தனியப் போனால்

வண்டிக்குள் இருப்பதனால் பயமில்லை என்றில்லை
அண்டைக்கும் பார்க்காதே என்று மனம் சொல்லும்

மூடிய கண் விட்டுவிட்டுத் திறந்து பார்க்கும்
கூடாரம் போட்ட நாலுகால் மண்டபத்தை

காலையில் பார்த்தால் வெண்நீறு போற் சாம்பல்
மாலையில் பார்த்தால் வெந்தபடி செந்தணல்

சாளரம் வழியாகச் சுலபமாய் வரும் காற்றோ - மூக்குத்
துவாரத்தைத் தேடிக் கொள்ளும்

மூக்கைப் பொத்துவதா கம்மியைப் பிடிப்பதா
ஆட்டம் காட்டும் அவ்வண்டியை

அழுத்திப் பிடிக்க வேண்டுமென்றால்
மூச்சைத்தான் அடக்க வேண்டும்

மூச்சை அடக்கிக் கொண்டபடி
பேச்சின்றித் தேவாரம் பாடியபடி

அந்த இடத்தைக் கடந்த வேளையை
இன்னொரு காலை நினைத்துப் பார்த்தேன்

என்று அது?

அன்றொரு மாலை ஆட்காட்டிக் குருவிகள்
அங்கும் இங்கும் அலறிப் பறந்தன

சொந்த நாய்கள் மட்டுமல்ல அண்டை நாய்கள்
அத்தனையும் ஒன்று சேர்ந்தே ஊளையிட

என்னவென்று தெரியாத இனம்புரியாக் கலக்கமொன்று.
சொன்னால் பயப்படுவோம் என்பதனால்

அம்மம்மாக்கள் இருவர் தமக்குள் ஏதோ கதைத்து
சும்மா இல்லை இவையெல்லாம் என்று கூறி முடித்தனர்

அடுத்தநாள் காலையில் ஊளையிட்ட நாய்களெல்லாம்
படுக்கையால் எழும்பமுன்னமே குரைக்கவே தொடங்கின

தூரத்தில் தொடங்கிய நாய்கள் ஒலி
அண்டையில் கேட்கவே அரவமும் புரிந்தது

வழமைபோல் வளைப்பன்றி வேறென்ன? - இம்முறை
இளையவர் சிலர் குடும்பஸ்தரே பலர்

சங்கிலிப் பிணைப்பொடு விழிகள்
பொங்கிய கண்ணராய் விலகியே போயினர்

எங்கு போகின்றார்? கேட்க முடியுமா??
கூட்டிப் போபவை குரங்குகள் அல்லவா - அவை

அதட்டும் குரலில் அங்கிங்கோடி மேலும்
பிடிக்க முயன்று முன்னேறிப் போக - இங்கு

குரைக்கும் நாய்களின் சத்தமும் அடங்கும் - இது
அந்த நாளில் அடிக்கடி நடக்கும்

அன்று மாலை வழமைக்கு மாறாய்
தூக்கிப் போட்டது ஒரு சத்தம்

சத்தம் வந்த திசை கொண்டது முழுப்புகை
இத்திசை அடிக்கும் காற்றொடு கலந்தே வந்தது

எழுபதுக்கு மேற்பட்டோர் ஒன்றாக வெந்த அப்புகை - ஆம்

படிப்பவர்க்கு இடம் கொடுத்த ஊறணி நூலகம்
வெடிப்பவர்க்கு இடம் கொடுத்து இடுகாடு ஆனது

முன்னர் ஒற்றை மணம் பொறுக்காத மூக்கு - அன்றோ
மொத்த மணமும் நுகர்ந்தது

பாத்திருக்க காலையிலே பாதை வழி போனவர்
பூர்த்தனரே மாலையிலே நீறுபோல்

இதுபோல் நடந்தவை பலவுண்டு
அதுவாய்க் கனவிலும் வருவதுண்டு
பள்ளிக்குப் போகும் பாதைவழி
மெள்ள அவற்றையும் பார்த்திடலாம்- இனி

சுப்பர்மடம் சுடலையோடு சில வீடுகள் தாண்டி விட்டால்
இப்ப வரும் என்பதுபோல் வந்துவிடும் பாடசாலை - அதன்

உள்ளிருக்கும் வடிவுதனை முன்னமே சொல்லியாச்சு - இனி
தள்ளித்தான் போய்ப் பார்ப்போம் பருத்தித்துறை அழகுதனை- அங்கு

தோழியர் இருவர் இப்படி இருப்பர்

மடிப்புக்கலையா வெள்ளைச் சட்டைகள்
மடித்துக்கட்டிய சின்ன இரட்டை ஜடைகள்

இடுப்புப் பட்டியில் கைக்குட்டைகள் பாடசாலை
கழுத்துக் கச்சுகளும் கழுத்தில் தொங்க

வெள்ளைக் காலுறைகள், அதற்கேற்ற
வெள்ளைக் காலணிகள் (சப்பாத்துக்கள்) - முதுகிலே

பார மூட்டை அன்றைய பாட மூட்டை
பாரம் அப்போ தெரிவதில்லை- ஏன்

ஒருவர் அல்ல இருவர் இவர்
சேர்ந்து விட்டால் பேந்து என்ன? பாடசாலை வண்டியை

வேண்டுமென்றே தவற விட்டு
நீண்ட நடை போட்டிடுவர் நகரை நோக்கி - வேறு
வண்டிக்காக

இடைவழியில் வரும் காட்சி இன்பமூட்ட
நடைப் பயணம் நீளும் - அங்கே

வலப்பக்க வாடிவீடு வண்ணமாய் தெரியும் - சுற்றுலா
விருந்தினர் செயல்பளைப் பார்க்கும் வேளை

இடப்பக்கம் அலை வந்து மோதும் உயர் புட்டி
இடம்விட்டு மைல் கற்கள் அங்கிருக்கும்- அதில்

கருமையும் வெண்மையும் அடித்திருக்கும்
பெருமையோடு பொறித்திடுவர் தங்கள் பெயர்- அங்கு

ஈகூட நுளையாது இடைவெளி இருக்காது - அவர்
பெயர்களுக்கிடையில்

தொடர்ந்து போனால் வண்டிகளின் வயிறு நிரப்பும்
எரிபொருள் நிலையம் ஒன்று - அதன்

முன்னிருக்கும் சுறுசுறுப்பான துறைமுகம்- அந்நாளில்
அவ்வளவாகக் கெடுபிடிகள் தொடங்கவில்லை

தூரத்துக் கப்பல்கள் துறைமுகத்தை அண்டி நிற்க
தூரத்திச் செல்லும் ஒன்றன் பின் ஒன்றாக வள்ளங்கள் - அவை

பொதிகளைப் போன போக்கில் அள்ளிவர - கரையில்
பதிவான மரப்பலகைகள் நீண்டு நிற்கும் கடலுக்குள்

போட்டிடுவர் பொதிகளை அதன் மேலே - அதை
வாட்டமின்றிச் சுமப்பரே முதுகினிலே

வைரத் தோள்கள் கொண்ட அந்த ஆண்மகன்கள் - பின்
விரைவு நடையோடு கொண்டுவந்தே - பார

ஊர்திகளில் அடுக்குவர் ஒவ்வொன்றாக - அதையும்
பார்த்திடுவர் சிறுமிகள் அங்கு நின்று - பின்

மூலையிலே மர நிழலினிலே குட்டியாய் அமைந்துள்ள
கோவிலையும் எட்டி ஒருதரம் பார்த்து விட்டு

தொடருவர் அவர்களும் பொடிநடையை

பன்னிரண்டு வயதே நிரம்பாத பருவமது
தன்னந்தனியே வலம் வந்தார் -அன்றெல்லாம்

பல மைல் தூரங்களுக்கு அப்பாலும்
சுய துணிவோடு நடந்து வந்தார் - இன்று

சொந்த நாட்டில் மட்டுமல்ல
எந்த நாட்டிலும் நிலைமை வேறு

பாலராயினும் பாட்டியராயினும் பாதுகாப்பு எங்குமில்லை
கொலையும் உண்டு கொள்ளையும் உண்டு

குதறித் தின்னும் குணமும் உண்டு - பல
இதயமற்றோர் இருப்பதனால் நிலைமையிது
பெருகுதெங்கும்

(தொடரும்)

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 29)*





# வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

அப்பொழுது குந்தவையும், நந்தினியும் வேதனை கொண்டனர். பின்னர் இருவரும் கந்தமாறனின் நண்பன் யார் என்று பார்க்க சென்றார்கள். அப்பொழுது கந்தமாறனும் அரண்மனை மேல் மாடத்திற்கு சென்றான். குந்தவை மிகுந்த கவலையை உள்ளிருத்தி, அந்தக் கவலைப் பெருக்கை வெளித் தெரியாதபடி நின்றாள். குதிரைகளுக்கு நடுவில் நடந்து வருபவன் வந்தியத்தேவன் அல்ல! என் நண்பன் இவர்களிடம் அகப்படமாட்டான். என்றதும் குந்தவை முகம் மலர்ந்தது. அப்பொழுது நந்தினி ‘அவனைக் கொன்று விட்டார்களே!’ என்று கூற, இதைக் கேட்ட குந்தவை துடி துடித்துப் போனாள். இதைக் கண்ட நந்தினி, ஆகா! இதுவல்லவா எனக்குக் கிடைத்த நல்ல ஆயுதம். உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்! என்று எண்ணிக் கொண்டாள். குந்தவை, ‘நான் என் தந்தையை குணப்படுத்த மூலிகை கொண்டுவர அனுப்பிய வைத்தியர் மகனை இவர்கள் ஏன் ஒற்றன் என்று பிடித்து வந்தார்கள்? என் தந்தையிடம் சென்று இதைக் கேட்டு வருகிறேன்’ என்று புறப்பட்டாள். அப்போது நந்தினி குறுக்கிட்டு, ‘தேவி உங்கள் தந்தை நோயினால் வாடியிருக்கிறார் அவரை தொந்தரவு செய்யாதீர்கள். என் மைத்துனர் தஞ்சைக் கோட்டை தளபதி சின்னப்பழுவேட்டரையர் காலாந்தக கண்டர் இவரிடம் கேட்டுவிடலாமே! உங்கள் விருப்பத்திற்கு மாறாக அவர் நடப்பாரா?’ என்றாள். உடனே இளைய பிராட்டி குந்தவை சின்னப் பழுவேட்டரையரின் மாளிகைக்கு வருவதாக செய்தி அனுப்பினாள். பின்னர் அங்கு சென்றாள். அவளை அந்தப்புர மாதர்கள் அன்புடன் வரவேற்றனர். சின்னப் பழுவேட்டரையரும் அவளை வரவேற்றார். ‘பழுவேட்டரையர்கள் சோழ ராஜ்ஜியத்திற்கு பெரும் சேவை புரிந்தவர்கள் இப்பொழுது அவர்களால் சக்கரவர்த்தி ஆயுள் முடியும் வரை பொறுக்க முடியாமல் சாம்ராஜ்ஜியத்தின் அதிகாரங்களை கைப்பற்ற அவசரப் படுகிறார்கள்’ என்றாள் குந்தவை. சின்னப் பழுவேட்டரையர் பதற்றமுற்று, ‘இது என்ன கொடிய வார்த்தை’ என்றார். கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வர என வைத்தியர் மகனை அனுப்பினேன். அவனை ஒற்றன் என கட்டியிழுத்து வந்துள்ளார்கள். இதற்கு கட்டளையிட்டது நீங்கள் தானே? எனக் கேட்டாள் குந்தவை. ‘ஆம் நானே அவர்களை அனுப்பினேன்! வைத்தியர் மகன் பினகபாணியும் தான் ஒற்றன் என ஒப்புக் கொண்டான்’. என்றார் சின்னப்பழுவேட்டரையர். ‘தாங்கள் தானே மற்றவர்களையும் இவனோடு அனுப்பினீர்கள்?’ என்றார். ‘ஆமாம் அவன் காஞ்சியில் இருந்து என் தமையன் கொடுத்த ஓலையை கொண்டு வந்தவன். அவன் ஒற்றனில்லை கந்தமாறனின் முதுகில் குத்தியவனும் அவனல்ல! வைத்தியர் மகனை விடுதலை செய்யுங்கள் நான் சக்கரவர்த்தியிடம் கட்டளை பெற்று வருகிறேன்’ என்றாள் குந்தவை. ‘தாயே இளைய பிராட்டியின் விருப்பம் எதுவோ அதுவே சக்கரவர்த்தியின் வேதக் கட்டளை. இதோ பாதாளச் சிறைச் சாவி தாங்கள் சென்று கதவைத்திறந்து விடுதலை செய்யுங்கள். ராஜ்ஜியத்திற்கு பெரும் தீங்கு வந்தால் அது இந்த இரு பெண்களால் தான் வரும்’ என்றபடி சாவியைக் கையில் கொடுத்தார் சின்னப்பழுவேட்டரையர்.

அதற்கு குந்தவை, ‘சர்வாதிகார நந்தினியுடன் என்னை ஒப்பிடாதீர்கள்’ என்றாள். பின்னர் குந்தவையும், வானதியும் தங்கச் சாலையின் வாசலுக்கு வந்தார்கள். காவலர்களும், பொற் கொல்லர்களும், இளைய பிராட்டி வாழ்க! என்று குரல் எழுப்ப, தங்கச்சாலைத் தலைவர் அவர்களை வரவேற்றார். பின்பு பொன்னைக் காய்ச்சும் அக்கினிக் குண்டம், நாணயவார்ப் பட்டம் செய்யும் அச்சுக்கள், தங்க நாணயங்கள் அவற்றை எல்லாம் பார்வைக்கு விட்டு புறப்பட்டார். இந்த பணம் புழக்கத்தில் வரும் முன்பு பண்டமாற்று முறை கையாளப்பட்டது. அவைக்காக உப்பு, சிப்பி, சோழிகள் பயன்பட்டன. கி மு 600, 650ல் உலோக நாணயங்கள் உருவாகியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். தங்கச் சாலையைக் கடந்து பாதாளச் சிறைக்கு செல்லும் வழியில் நடந்து சென்றனர் குந்தவையும் வானதியும். அங்கு புலி மண்டபம் காணப்பட்டது. சிறையில் இருந்து தப்பினால் இந்தப் புலி மண்டபத்தில் வந்து அகப்பட்டு விடுவார்கள். பின்னர் அவர்கள் கதி புலிக்கு இரைதான். இப்படித் தான் ராஜாங்க கருணையும் உண்டு, கடுமையும் உண்டு. சட்ட விதி ஒழுங்குகள் காக்கப்பட வேண்டும். தவறு செய்பவர் தண்டனை பெற வேண்டும். நாட்டின் அமைதி காக்கப்பட வேண்டும். குந்தவையும், வானதியும் பாதாளச் சிறையில் வைத்தியர் மகன் பினகபாணியை தேடிப் பார்த்தார்கள். அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், ‘பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து’ என்ற பாடல் இசை கேட்க, அங்கே நின்றார்கள். ‘சிறையில் கூடவா உன் பாட்டு வருகிறது! சரி உன் உறவினர் யார் இருக்கிறார்கள்’ என்றாள் குந்தவை. ‘என் தாயார் அவள் பெயர் வாணி அவள் காது கேட்காது, பேசவும் முடியாது’ என்றான் அந்த இளைஞன். ‘உன் பெயர் சேந்தன் அமுதனா?’ என்று வினவினாள் குந்தவை. ‘ஆமாம் தேவி என் பெயர் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?’ என்று வியப்புடன் கேட்டான் சேந்தன் அமுதன். ‘என்ன குற்றம் செய்தாய்’ என்று குந்தவை மேலும் கேட்க, ‘ஒற்றன் ஒருவனுக்கு உதவியதாக என்னைச் சிறையில் வைத்துள்ளார்கள்’ என்று கூறி, அவன் பெயர் வந்தியத்வேன் என்று நடந்தவை யாவற்றையும் சொன்னான் சேந்தன் அமுதன்.

மேலும், ‘அவனைப் பாரத்தால் அவனிற்காக உயிரையும் கொடுக்கலாம் ஆனால் இன்று இந்தச் சிறையில் இருந்தவனைப் பார்த்தால் கொன்றுவிட வேண்டும் போல் தோன்றியது. நல்ல வேளையாக பழுவூர் இளையராணி இங்கு வந்து அவனை அழைத்துப் போய்விட்டார்கள். அவன் வைத்தியன் மகனாம்’ இதைக் கேட்ட குந்தவைக்கு கோபம் பொங்கி எழுந்தது. ‘ஏன் அவனைக் கொல்ல நினைத்தாய்’ என்றாள். ‘என் நண்பன் வந்தியத்தேவனுடன் இவன் கோடிக்கரை சென்றான். இவன் என் நண்பனுக்குத் துரோகம் செய்து, பிடித்துக் கொடுக்கப் பார்த்தான். ஆனால் என் மாமன் மகள் பூங்குழலி வந்தியத்தேவனை படகில் ஏற்றி இலங்கைக்கு அழைத்துச் சென்று விட்டாள்’ என்றான். ஓற்றன் தப்பித்து விட்டானா? என்றனர் குந்தவையும் வானதியும். அவர்கள் முகம் மலர்ந்து பொலிந்தது. ‘சரி நீ சிறையில் இருக்க தக்க காரணம் உண்டு’ என்றனர் அதற்கு அமுதனும் ‘அப்பொழுது உங்களையும் இங்குதான் பூட்ட வேண்டும்! என்னைச் சிறையில் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அடுத்த அறையில் ஒரு மனிதன் இருக்கிறான் அவனுக்கு பாண்டிய குலத்து மணிமகுடத்தையும், மாலையையும் ஒளித்து வைத்துள்ள இடம் தெரியுமாம்! அந்த ரகசியத்தை அறிந்த பின் என்னை மீட்டு எடுங்கள்’ என்றான். ‘சரி’ என்று குந்தவை புறப்பட்டாள். சில சேவகர்கள் வந்து, சேந்தன் அமுதனை விடுதலை செய்தனர்.




‘அரசிளங் குமாரா!’ தயங்கித் தயங்கி, பயந்து பயந்து இந்த நிருபத்தை எழுதத் துணிந்தேன். இராஜ்ஜியத்தின் நிலைமையைப் பற்றி பல விதமான செய்திகள் காதில் விழுகின்றன. தாங்கள் எதையும் கவனிப்பதில்லை நோயினால் மெலிந்து இருக்கும் தங்கள் தந்தை பல முறை சொல்லி அனுப்பியும், தாங்கள் தஞ்சைக்கு வரவில்லை. அதற்கு காரணம் நான் தானே என்ற எண்ணம் என்னை வதைக்கிறது. தங்களை ஒரு முறை சந்தித்தால் எல்லா சந்தேகங்களையும் போக்கிவிடுவேன் அதற்கு திருவுள்ளம் இரங்குவீர்களா? தஞ்சைக்கு வர விரும்பா விட்டால், கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சந்திக்கலாம்! நான் இன்று உங்கள் பாட்டியின் ஸ்தானத்தில் இருக்கிறேன். நாம் சந்தித்துப் பேசுவதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? இதைக் கொண்டு வரும் வீர இளைஞர், சம்புவரையர் குமாரனை தாங்கள் பூரணமாக நம்பி, அவரிடம் எந்த செய்தியையும் சொல்லி அனுப்பலாம். இங்ஙனம் துரதிஷ்டத்துடன் கூடப் பிறந்த அபாக்கியவதி நந்தினி. என்று அந்த நிருபத்தை எழுதி முடித்ததும் கந்தமாறனை அழைத்தாள் நந்தினி. அவனும் அங்கு வந்தான். ‘தேவி உங்களிடம் அழகும், அறிவும் பொருந்தியிருக்கக் காண்கிறேன்’ என்று பரவசமாகக் கூறினான். இதைக் கேட்ட நந்தினி, ‘உங்கள் முகஸ்துதி எனக்கு வேண்டாம். என்னை பூரணமாக நம்பினால் எனக்கு ஒரு உதவி செய்வாயா?’ என்று கேட்டாள். அதற்கு கந்தமாறன், ‘என்னால் முடிகிற காரியம் எதுவானாலும் செய்கிறேன்’ என்றான். ‘எனக்காக காஞ்சிக்குப் போய், அங்கு ஆதித்தகரிகாலனிடம் இந்த நிருபத்தைக் கொடுத்து, அவரை கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளியாக அழைக்க வேண்டும்’ என்றாள் நந்தினி. ‘ஆகட்டும் தேவி தங்கள் கணவரும், என் தந்தையும், மற்றும் சோழ நாட்டு பிரமுகர்களும் ராஜ்ஜியத்தை பற்றி செய்து வரும் ஏற்பாடு தங்களுக்கு தெரியாதா? எங்கள் குடும்பங்கள் ஆபத்தில் நின்று வருகின்றன. இதற்கு யார் காரணம்?’ என்று கந்தமாறன் கேட்க, நந்தினியோ, ‘சுந்தரசோழ சக்கரவர்த்தியின் பின் மதுராந்ததேவரோ, ஆதித்தகரிகாலரோ பட்டத்திற்கு வரலாகாது! இலங்கைக்குச் சென்ற அருள்மொழிவர்மர் தான் வரவேண்டும் என்று இந்தப் பாதகி குந்தவை சதி செய்கிறாள்! அப்படி அருள்மொழிவர்மர் வந்தால், சோழ ஆட்சி அவள் கையில் அல்லவா! தன் அக்காளின் சொல் மீறி யாதும் செய்யாதவன் அவன். குந்தவையின் சக்கரவர்த்தி யார் தெரியூமா? உங்கள் நண்பன் வந்தியத்தேவன்!’ என்றாள். அதற்கு கந்தமாறன், ‘அப்படியா இதை எப்படியாவது தடுத்தே ஆகவேண்டும் கட்டளையிடுங்கள் தேவி! நான் காஞ்சி போய் வருகிறேன்’ என்றான். அந்தச் சமயம் திடீர் என்று பழுவேட்டரையர் அங்கு வந்தார். ‘இந்தப் பிள்ளை இங்கு என்ன செய்கிறான்?’ என்று வினவ, ‘அவன் ஊர் திரும்பப் போகிறான் இவனிடம் ஆதித்தகரிகாலனுக்கு ஒரு நிருபம் கொடுத்து அனுப்புகிறேன். இளைய பிராட்டி தன் தம்பிக்கு இலங்கைக்கு ஓலை கொடுத்தாள் இதை அன்பின் அநிருத்தர் சொன்னாரா? மந்திரவாதி மூலம் நான் அறிந்தேன். உங்கள் தம்பியும் முத்திரை மோதிரம் பற்றி சொன்னார். ஆனால் இந்த ஓலை பற்றி யாரும் உங்களிற்கு சொல்லவில்லை நான் வைத்தியர் மகனை சிறையில் இருந்து அழைத்து வரச் சொல்லி, அவனிடம் விசாரித்து உறுதிப்படுத்தினேன்’. என்றாள் நந்தினி. கந்தமாறன் விடை பெற, ‘எல்லோரும் உங்களை வஞ்சிக்கிறார்கள். இந்த தஞ்சை தங்க சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி வைக்க வேண்டும். இது என் இலட்சியம்!’ என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நாகத ீவின் கடற்கரையில் இறங்கினான் அல்லவா? பூங்குழலி படகை திருப்பிக் கொண்டு போனாள். குந்தவையும் வானதியும் யானை மீது பயணம் செய்து தஞ்சை வந்தனர். குந்தவை தன் தந்தையை தரிசித்தாள். தஞ்சையில் ஆதுரசாலையை திறந்து வைத்தாள். நந்தினியை பார்த்தாள். கந்தமாறனுடன் உரையாடினாள். சின்னப்பழுவேட்டரையரிடம் வாக்கு வாதம் இட்டாள். பாதாளச் சிறை சென்று சேந்தன் அமுதனை விடுதலை செய்தாள். வந்தியத்தேவன் இலங்கை சென்றுவிட்டான். தன் தம்பி அருள்மொழிவர்மனை சந்திப்பான் என்ற மகிழ்ச்சியில் இருந்தாள். இலங்கைக் கரையில் நாகதீவில் இறங்கிய வந்தியத்தேவன், மாதோட்டம் நோக்கிச் சென்றான். இது ஒரு துறைமுகப் பட்டினம். இலங்கைத் தீவின் முக்கிய துறைமுகமாகவும், உலகளாவிய வணிகத்திலும் சிறப்புப் பெற்றது. இது இலங்கையின் வடமேற்கு கரையில், இன்றைய வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்தது. இங்கு திருக்கேதீஸ்வரம் என்னும் சிவன் கோயில் உண்டு. சரித்திரச் சிறப்பு உள்ள மாதோட்டம் என்னும் மாநகரம் நூறு ஆண்டுகளிற்கு மேலாக யுத்த களமாகவே விளங்கியது. இந்த நகரம் இலங்கை மன்னராலும், பாண்டிய மன்னராலும் மாறி மாறி ஆளப்பட்டது. பின்னர் சோழர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. வந்தியத்தேவன் இந்த நகரின் கோட்டை மதில் வாசலில் நின்று, அங்கு இருந்த காவலர்களிடம் தான் சோழ சேனாதிபதியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது காவலர்கள் மறுக்கவே அவன் காவர்களைத் தள்ளி வீழ்த்திவிட்டு உள்ளே நுழைய எத்தனித்தான். அதனால் காவலர்கள் அவனை சிறையில் பூட்டினர். கொடும்பனார் பெரிய வேளாளர் பூரிவிக்கிரம கேசரி, இவர் இலங்கைப் படையின் சேனாதிபதியாக இருந்தார். இந்தச் சமயத்தில் அவர் முதல் மந்திரி அன்பின் அநிருத்தரிடம் பேசிக்கொண்டிருந்தார். அதனால் காவலர்களிடம் அவனைக் காவலில் வைக்க உத்தரவு போட்டார். அவன் தன்னுடன் வைத்திருந்த ஓலைச் சுருளையும், முத்திரை மோதிரத்தையும் எடுத்துக் கொண்டார்கள். காவலில் இருந்த வந்தியத்தேவன், மிகக் களைத்து இருந்ததால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். குந்தவை அவன் கனவில் தோன்றி சுகம் கொடுத்தாள். அந்த சுக உணர்வில் தூங்கிக் கொண்டிருந்தான் வந்தியத்தேவன். அந்தத் தூக்கத்தைக் கெடுத்து விட்டான் ஆழ்வார்க்கடியான். வந்தியத்தேவன் சிறையில் இருப்பதை அறிந்து, சிறையில் பார்த்து, அவனருகே சென்று, ‘தம்பி நீதானா?’ என்றான்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# இவ்வார ராசிபலன்

**08-10-2021 வெள்ளி தொடக்கம் 14-10-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பிள்ளைகள் எண்ணங்கள் பூர்த்தியாகும். பயணத்தால் பணவரவு உண்டு. உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். வெற்றியை எட்டும் நாள். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். உடல் நலத்தில் கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 2,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,D




**ரிஷபம்:** திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கை கூடும். கொடுக்கல், வாங்கலில் சமூக நிலை ஏற்படும். பங்குச் சந்தையில் லாபம் கிட்டும். அன்ன தானம் ஆரோக்கியம் தரும். உற்சாகமும் அலைமோதும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். புதிய முயற்சியை தள்ளி போடுங்கள் தெம்பும் தைரியமும் கூடும்.
அதிர்ஷ்ட எண்: 3,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,E




**மிதுனம்:** பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பால்தானம் பாக்கியம் சேர்க்கும். சிறப்புகள் சேரும் நாள். இளைஞர்களுக்கு ப்டிப்பிற்கு ஏற்ப உத்தியோகம்.
அதிர்ஷ்ட எண்: 1,3,4,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,I




**கடகம்:** பொறாமை விலகும். குதுகலம் சேரும். வருமானம் வரும். கல்வி ஆர்வம் கூடும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். மங்கள செய்தி வரும். முயற்சிகள் பலன்தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். நவதானிய வழிபாடு நலம் தரும்.
அதிர்ஷ்ட எண்: 2,4,6,8
அதிர்ஷ்ட நிறம் ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள் V,U




**சிம்மம்:** குதுகலம் தாண்டவமாடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு வெளிப்படும். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்கு சந்தை லாபம் தரும். முயற்சிகள் பலன் தரும். வெறுப்புகள் அகலும், சிறப்புகள் சேரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதி பற்றாக்குறை நீங்கும். உடல் சோர்வு ஏற்படும். கல்வி ஈடுபாடு கூடும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
அதிர்ஷ்ட எண்: 7,3,5,2
அதிர்ஷ்ட நிறம்: வாடா மல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,T




**கன்னி:** லாபமான நாள். நிதி நிலமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். புதிய வாய்ப்பு தேடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் உண்டு. கருட வழிபாட்டால் காரியம் கைகூடும்.
அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,Z




**துலாம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகமாகும். ஆதலால் கவனம் தேவை. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு தரும். கல்விச் செலவு உண்டு. வளமான சிந்தனை உருவாகும். சந்திர வழிபாடு சந்தோஷம் கூடும்.
அதிர்ஷ்ட எண்: 3,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**விருச்சிகம்:** யோகமான நாள். மற்றவரால் பாராட்ட படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். கணபதி வழிபாட்டால் காரியம் கை கூடும்.
அதிர்ஷ்ட எண்: 6,5,7,0
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள். F,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**தனுசு:** அலைச்சல் அதிகரிக்கும். பூர்வீக சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். கணவன் மனைவி கருத்து வேறுபாடு அகலும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. பிரச்சனைகள் குறையும். நிதி நிலமை சீராகும். வெளியூர் பயணம் ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும்.
அதிர்ஷ்ட எண்: 7,1,9,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**மகரம்:** திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும். கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும். சூழ்நிலைகள் பலன் தர சூரிய வழிபாடு அவசியம்.
அதிர்ஷ்ட எண்: 8,3,0,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,A




**கும்பம்:** சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும்.
அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,C





**மீனம்:** மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும். நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தீப வழிபாடு தீமை அகற்றும்.
அதிர்ஷ்ட எண்: 5,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,E

**வீணாவின் கவிக்கணை**

முடிவில்லா வானில்
நட்சத்திரம் போல,
நிலையில்லா வாழ்வில்
பிரச்சனைகள் எத்தனையோ,
காற்றோடும், மழையோடும்,
புயலோடும் கடந்து வந்தாலும்
சேற்றோடு மாட்டிக்கொள்ளும்
பலன் போல நமக்கு, ஊற்றாக நீ
பெருகி காற்றோடு கலந்து வந்து,
என் மனதில் சக்தி கொடு இறைவா!

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்:

03 - 07 - 1935

மண்ணில் அடியில்:

06 - 10 - 2021

## திரு. தம்பு நடராஜா

(Retired Labour Officer, Labour Department, Colombo, Sri Lanka)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், Anderson Flats, Colombo மற்றும் Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா அவர்கள் ஐப்பசி 6ம் திகதி (October 6, 2021) அன்று மேல் மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி திருவடி நிழலில் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சந்தானலஷ்மி அவர்களின் அன்பு மனைவியும்,

உமாதேவி (உமா), கதிர்காமநாதன் (நாதன்) ஆகியோரின் அருமைத் தந்தையும்,

நவதாசன், சத்தியாம்பிகை (பாமா) ஆகியோரின் அன்பு மாமாவும்,

அரவிந்தன், பவித்திரன், கோகுலன், வாசுகி ஆகியோரின் ஆசைப் பேரனும்,

காலஞ்சென்ற சற்குணம், பத்மநாதன் (நீர்வேலி), காலஞ்சென்ற காங்கேசன், காலஞ்சென்ற தணிகாசலம், சுசிலாதேவி (Germany), காலஞ்சென்ற மகாதேவன், தர்மராணி (மாவிட்டபுரம்) ஆகியோரின் அருமை அண்ணாவும்,

காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற மங்களேஸ்வரி, தேவகி (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரி, புண்ணியமூர்த்தி (Germany), சந்திரமலர் (கனடா), காலஞ்சென்ற சுவாமிநாதன், ஜெகதாம்பிகை (Malaysia), சாவித்திரி (Germany), செந்தில்மணி (வவுனியா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை October 10, 2021 காலை 8:30 தொடக்கம் 11:30 வரை Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave, Markham) ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் மறுநாள் திங்கட்கிழமை October 11, 2021 காலை 6:00 மணி தொடக்கம் 7:45 வரை அதே இடத்தில் கிரிகைகள் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து காலை 8:15 மணியளவில் Highland Hills Crematorium (12492 Woodbine Ave, Gormley) ல் தகனம் இடம்பெறும்.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
உமா (மகள்): (647) 284-2530
நாதன் (மகன்): (416) 724-5044 / 647-554-9013












உதயம் 1331 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 8, 2021

# தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா அமைப்பு சேகரித்த 3000 கிலோ உலர் உணவுப் பொருட்கள்



நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா அமைப்பினரின் ஏற்பாட்டில் தியாகி திலீபன் அவர்களது ஞாபகார்த்தமாக சேகரிக்கப்பெற்ற 3000 கிலோ எடையுள்ள உலர் உணவுப் பொருட்கள் அண்மையில், ஸ்காபுறோவில் உள்ள உணவு வங்கிக்கு கையளிக்கப்பட்டன.

இதனையொட்டி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா அமைப்பின் தலைமை அலுவலக வளாகத்தில் இடம்பெற்ற சிறிய கையளிப்பு வைபவத்தில் மேற்படி உணவு வங்கியின் சார்பில் திருமதி சிசி கலந்து கொண்டு மேற்படி உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை ஏற்றுக்கொண்ட பின்னர் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இங்கு காணப்படும் படங்களில் கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளில் பங்கெடுத்து உழைத்து வரும் அங்கத்தவர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# ‘மக்களுக்குத் தேவையான தகவல்களை முதன்மைச் செய்திகளாக வழங்கி வரும் யுகம் வானொலிக்கு பாராட்டுக்கள்’

## கனடா யுகம் வானொலி ஆண்டு விழாவில் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புகழாரம்



”இங்கு வாழும் எமது தமிழ் மக்களுக்கும் மற்றும் உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் தேவையான அத்தியாவசிய தகவல்களை முதன்மைச் செய்திகளாக வழங்கி வரும் யுகம் வானொலியானது ஒரு பயனுள்ள ஒலிபரப்பு ஊடகமாகவும் இணையவழி ஊடகமாகவும் இயங்கிவருதை அனைவரும் அறிகின்றோம். அவ்வாறான தமிழ் வானொலியை நடத்தி வருகின்ற கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களுக்கும் ரூபி யோகதாசனுக்கும் எமது பாராட்டுக்கள்”

இவ்வாறு கனடா யுகம் வானொலி ஆண்டு விழாவில் ஒன்றாரியோ தமிழ் பேசும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய திருவாளர்கள் லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் புகழாரம் சூட்டினர். *(தொடர்ச்சி உள்ளே 15ம் பக்கத்தில்)*

# கனடா ‘உதயன்‘ பத்திரிகையின் ‘வெள்ளிவிழாச் சிறப்பிதழ்கள் கனடாவிலும் வெளிநாடுகளிலும் வழங்கப்பெறுகின்றன

கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவில் வெளியிடப்பெற்ற “கனடா உதயன்“ வெள்ளி விழாச் சிறப்பிதழின் பிரதிகள் தொடர்ச்சியாக தமிழ் ஆர்வலர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்கப்பெற்று வருகின்றன.

அந்த வரிசையில் அண்மையில் உதயன் பத்திரிகையின் நீண்ட நாள் அபிமானியும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வட அமெரிக்க ஒன்றியத்தின் தலைவருமான சிவா கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் உதயன் பத்திரிகைக்கு பல்லின சமூகங்கள் சார்ந்த விளம்பரங்களை வழங்கும் முகவரான ஆசு. ஆருமுநுளுர் அவர்களுக்கும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரால் சிறப்பிதழ்ப் பிரதிகள் வழங்கப்பெற்றன.

மேலும் தமிழ்நாடு தகவல் ஆணையாளர் பிரதாப் குமார் அவர்களுக்கு“ உதயன்“ பத்திரிகையின் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ், சென்னையில். கனடா உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ் பிரதியொன்றை வழங்கினார்.



# இலங்கையில் தொழில் திணைக்கள அதிகாரியாக பணியாற்றிய தம்பு நடராஜா கனடாவில் காலமானார்



இலங்கையில் தொழில் திணைக்கள அதிகாரியாக பணியாற்றிய தம்பு நடராஜா அவர்கள் கனடாவில் காலமானார். நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த பல வருடங்களாக கனடாவில் தனது குடும்பத்தினரோடு வாழ்ந்து வந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்களுக்கு உள்ளே காணப்படும் அறிவித்தலைப் பார்க்கவும்.

தொடர்புகளுக்குக்- நாதன் (மகன்) 647 554 9013

